
www.padippakam.com

# மார்க்சிஸ்ட்

மாத இதழ்

நவம்பர் - 2001 விலை ரூ. 5.00



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# மார்க்சிஸ்ட்

தத்துவ மாத இதழ்

தொகுப்பு: 2 இதழ்: 3 நவம்பர் 2001

## ஆசிரியர் குழு

தே.லட்சுமணன் (ஆசிரியர்)
ஜி.ராமகிருஷ்ணன்
வி.மீனாட்சிசுந்தரம்
மைதிலி சிவராமன்
என்.குணசேகரன், பாலு

விமர்சனங்கள், கருத்துக்கள், கடிதங்கள்
எழுதவேண்டிய முகவரி:

ஆசிரியர், மார்க்சிஸ்ட் மாத இதழ்,
11, வைத்தியராம் தெரு, தி.நகர்,
சென்னை – 600 017

Registered with the Registrar of Newspaper for India under Registration No: TNTAM/2000/2593. *வெளியிடுபவர்: இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக்குழு சார்பில் என்.வரதராஜன், அச்சிடுபவர் : வைகை பிரிண்டர்ஸ் & பப்ளிசர்ஸ், மதுரை - 625 018*

படிப்பகம்

www.padippakam.com


1. தீண்டாமையெனும் தீ

- வெ.மன்னார் 4

2. ஜோதிடக் கல்வி:
விஞ்ஞான வேடம் தரித்த மாயமான்

- ஏ.பாக்கியம் 13

3. அரைப்பாசிச வெறிகொண்ட சிவசேனா
- ஓர் ஆய்வு

- அசோக் தவாலே 26


## சந்தா விபரம்:

| | | |
|---|---|---|
| தனிப் பிரதி | ரூ. | 5.00 |
| 6மாத சந்தா | ரூ. | 30.00 |
| ஆண்டு சந்தா | ரூ. | 55.00 |

5 பிரதிகளுக்குமேல் ஏஜென்சி வழங்கப்படும்
25 சத கமிசன் உண்டு

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:


**மார்க்சிஸ்ட் மாத இதழ்**

6/16, புறவழிச்சாலை, மதுரை — 625 018

Ph: 669769 Fax: 0452 - 667070

E-Mail : theekati@md3.vsnl.net.in




படிப்பகம்

www.padippakam.com

# நவம்பர் புரட்சி



உலகைக் குலுக்கிய புரட்சிகளில் பிரெஞ்சுப் புரட்சி மன்னராட்சிக்கும் நிலப்பிரபுத்துவத்திற்கும் சாவு மணியடித்தது. மாமேதை லெனின் தலைமையில் நடந்த ரஷ்யப்புரட்சி ஜார்மன்னனின் ஆட்சியையும், முதலாளிகள் நிலப்பிரபுக்களின் ஆட்சியையும் முடிவுக்கு கொண்டு வந்தது.

1913ல் நடந்த அந்த நவம்பர் புரட்சி இன்றுவரை உலகின் பலநாட்டு மக்களும் வீரியமாய் போராடுவதற்கு ஆதர்ச ஒளியாய் திகழுகிறது. இட்லரின் பாசிசத்தை முறியடித்து வரலாற்றில் மறக்க முடியாத பாடம் புகட்டியது அந்த ரஷ்யா.

சோவியத் யூனியனும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் பின்னடைவைச் சந்தித்து பத்தாண்டுகளாகிவிட்டன. முதலாளித்துவ வஞ்சகரிடம் மனதைப் பறி கொடுத்த மக்கள் தங்கள் வாழ்வையே பறிகொடுத்தார்கள். அவர்களுக்கு மறக்க முடியாத பாடம் கிடைத்துவிட்டது.

ஏக்கம் நிறைந்த விழிகளால் மீண்டும் தங்களுடைய பாரம்பரியச் செங்கொடியைப் பார்க்கத் தொடங்கிவிட்டனர். போலந்தில் வலேசா கும்பலுக்கு மக்கள் வாய்க்கரிசி போட்டுவிட்டனர். மங்கோலியா முதல் நிகரகுவா வரை, பெர்லின் முதல் விதுவேனியா வரை மீண்டும் எழுச்சி முழக்கம் கேட்கிறது.

நவம்பர் புரட்சியின் பொன்னொளியில்

வெற்றி முழக்கம் தொடரட்டும்!

யுத்தவெறிபிடித்த அமெரிக்காவையும், இந்திய மண்ணில் பாசிச பயங்கரவாதத்தை வளர்த்துவரும் ஆர்எஸ்எஸ் பாரதிய ஜனதாக் கும்பலையும் மக்களிடம் அம்பலப்படுத்துவோம்! உலக சமாதானமும் அமைதியும் நிலவப் போராட சபதமேற்போம்! பொடோ சட்டத்தை முறியடிப்போம்!



படிப்பகம்

www.padippakam.com

# தீண்டாமையெனும் தீ!

சென்ற இதழ் தொடர்ச்சி

ஒருவகையில் அந்தோனியோ கிராம்சி கூறும் "அடிக்கட்டுமானம், மேல்தளம் இவையிரண்டும் தனக்குள் முழுமையடைந்த தனித்தனி அலகுகளல்ல. இவையிரண்டும் இணைந்த ஒற்றை அலகின் பிரிக்க இயலாத முழுமை பகுதி" என்ற கருத்தை இங்கு ஒப்பிட்டுப்பார்க்கலாம்.

மேலும், உற்பத்தி முறைகளில் வரும் புரட்சிகரமாற்றம் சாதியை தானாக ஒழித்துவிடும் என்றும் மார்க்சிஸ்ட் கட்சி கருதவில்லை. அதனால் தான் தன்னுடைய திட்டத்தில் ஒரு மக்கள் ஜனநாயகப் புரட்சியின் மூலம் அமையும் பாட்டாளி வர்க்க பெரும்பான்மை அரசு, சாதி ஒழிப்புக்கு, அது ஏற்படுத்திய பாதிப்பைப் போக்க தொடர் நடவடிக்கை எடுக்கும் என்று உறுதியளித்திருக்கிறது.

சாதீயம் ஒழிந்தால்தான் தீண்டாமை ஒழியும். தீண்டாமை ஒழிய வேண்டுமானால் தோழர் பி.டி.ஆர். கூறுவது போல, முதலாளித்துவத்திற்கு முந்தைய உற்பத்தி உறவுகளை பாதுகாத்துக்கொண்டு சாதீயத்தின் பலமான பாதுகாவலர்களாக இருக்கும் ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம் மற்றும் முதலாளித்துவம் ஆகிய மூன்று சக்திகளை எதிர்த்து அவைகளை முறியடிப்பதன் மூலமே சாத்தியமாகும்.

## சாதீய அமைப்புக்களும் தீண்டாமையும்

தீண்டாமைக்கு ஆளாக்கப்பட்டு விலங்கினும் கீழாக நடத்தப்பட்டு, பன்னூறு ஆண்டுகளாய் உரிமைகள் ஏதுமின்றி சாதீய படிநிலையில் அடிமட்டத்தில் வைத்து மிதிக்கப்பட்டு, உழைப்பை மட்டும் தருவதே கடமையாக்கப்பட்ட தாழ்த்தப்பட்டவர்கள், தாங்களும் மனிதர்களே என்ற உணர்வு பெற்று நிமிர முயல்வதை புரிந்துகொள்கிறோம். வரவேற்கிறோம். காலங்காலமாக சகலத்தையும் இழந்திருந்த சமூகம் இன்று ஒன்றிணைந்து தங்கள் நிலையை உயர்த்த அமைப்பாகி, சமூக தளத்தில் முன்னுக்கு வருவதை குறுகிய சாதீய வட்டத்தில் நாம் பார்க்கக்கூடாது.

ஆனால், சாதீய அணிதிரட்டல் என்பது இன்று மற்ற பெரும்பாலான சாதிகளிலும் நடந்துகொண்டிருக்கிறது. இந்த அணிதிரட்டல் யாருடைய நலனுக்காக யார் திரட்டுவது என்ற கேள்விகளை முன்வைத்து பரிசீலித்தால் உண்மை தெரியும். தங்கள் சமூகத்தின் ஒட்டுமொத்த நலனுக்காகவோ அல்லது பொதுவாக சமூகத்தின் மேன்மையான இலட்சியங்களுக்காகவோ இவை நடக்கவில்லை

**வெ.மன்னார்**



படிப்பகம்

www.padippakam.com

யென்பது வெள்ளிடை மலை. இது ஒரு சிலருடைய சுயநலத் துக்கு ஒரு சமூகத்தை பகடைக் காயாக மாற்றும் செயலே தவிர வேறெதுமில்லை.

இந்நிலையில் சாதீய அமைப்புக் கள் இதுகாறும் சமூகம் அடைந்திருக் கும் முன்னேற்றத்தை பெற்றிருக்கும் நாகரீகத்தை பின்னுக்குத்தள்ளும் பிற்போக்கு அமைப்புக்கள் என முத் திரை குத்தி சமூகத்தில் தற்பொழுது அவைகள் வகிக்கும் பங்கினை நிரா கரித்துவிடமுடியுமா என்பது விடை காணவேண்டிய கேள்வி. ஒரு முத லாளிய முறை புகுத்தப்பட்ட பின்னும் தொழிலுக்கு பிறவி வழி அடிப்படை என்பதற்கு முழுவதுமாக முற்றுப் புள்ளி வைக்கப்பட்ட சமூக அமைப் பாக இன்றைய நிலை இல்லை. ஒரு சாதியில் பல வர்க்கங்களையும், ஒரு வர்க்கத்தில் பல சாதிகளையும் இன்று காணமுடியும். ஆயினும் பாரம்பரிய தொழில்முறை முழுவதுமாக வீழ்ச்சி யடையவில்லை என்பதும், அந்த தொழிலில், அந்த தொழிலுக்கென்று விதிக்கப்பட்ட சாதியைச் சேர்ந்தவர் கள் இன்னும் பெருமளவுக்கு ஈடுபட் டிருப்பதும் சாதீய உணர்வை இன் றும் பேணிக்காக்கும் ஒரு காரணமாக அமைந்துள்ளது.

முதலாளித்துவத்தின் இன்றியமை யாத தேவையான வேலையின்மை ஒருபுறம், பெரும் ஜனத்தொகை மறு புறம். இந்த நிலை ஏதாவது ஒரு தொழிலைச் செய்து பிழைத்தாக வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு அடித் தட்டு மக்கட்திரளை தள்ளியுள்ளது. விவசாயம், கைத்தொழில் மற்றும் கிராமப்புறங்களில் செய்யப்பட்ட பாரம்பரிய வேலைகளில் இன்னும் பாரம்பரிய சாதிகளே அதிக அள வில் ஈடுபட்டுள்ளன. தூய்மையற்ற தொழிலாக இருப்பின் கிராமப்புறங் களில் மட்டுமல்ல, நகர்ப்புறங்களில் இன்னும் பெருமளவு தாழ்த்தப்பட்ட வர்களாலேயே செய்யப்படுகிறது. கிராமப்புறங்ளில் சேரிகளை வெளியே பார்க்கலாம். நகர்ப்புறங்களில் நடு விலேயே பார்க்கலாம்.

சாதீய அணி திரட்டல் என்பது பொருளியல் கோரிக்கைகள் அடிப் படையில் நடப்பதில்லை. அந்த சாதியில் உள்ள பெரும்பான்மை யினர் ஈடுபட்டுள்ள தொழிலைப் பாதுகாக்கவோ மேம்படுத்தவோ அல்லது கூலி உயர்வு அடிப்படை யிலோ நடப்பதில்லை. இந்த அடிப் படையில் அணி திரட்டல் நடந்தால் அது பலசாதிகளை ஒன்றுதிரட்டும். இத்தகைய அணிதிரட்டல் வர்க்க உணர்வை உருவாக்கும் நிலைக்கு கொண்டுபோகும். அந்தந்த சாதியில் உள்ள மேல்தட்டு வர்க்கங்கள், படித்த மத்தியதரவர்க்கங்களே சாதீய அணி திரட்டலில் முன்னணி பங்கு வகிக்கின்றன. இந்த வர்க்கங்கள் எச் சரிக்கையாகவே பொருளியல் அடிப் படையிலான கோரிக்கைகளை புறந் தள்ளி, தொழில் ரீதியாக, சலுகைகள், இட ஒதுக்கீட்டில் சலுகைகள் என்ற தங்கள் வர்க்க நலன் அடிப்படை யிலான கோரிக்கைகளை, பொது மைப்படுத்தி வைத்து தங்களை முன்னேற்றிக்கொள்ள, சாதீய உணர் வையும் அடித்தட்டு மக்களையும் பயன்படுத்திக்கொள்கின்றன. இது போன்ற கோரிக்கைகள் செல்வாக்



படிப்பகம்

www.padippakam.com

கிழக்கும்போது சில சுயநல சாதீய தலைமைகள் சாதீய வெறியூட்ட மற்ற சாதிகளுக்கு குறிப்பாக தாழ்த் தப்பட்ட சாதிகளுக்கு அரசு தரும் சலுகைகளைக் காட்டிஅதைப் போன்று தங்கள் சாதிக்கும் தர வேண்டுமென்று கோரிக்கைகள் வைக்கின்றன. தங்கள் கைப்பிடிக் குள் வாக்கு வங்கிகளாக உள்ள சாதி யின் பெருந்திரளான அடிநிலை மக் களை வைத்து அரசியல் பேரம் நடத்துகின்றனர். இந்நிலை மேலும் இழிந்து, ஆட்சியில் பங்கு என்றும், சாதிகளின் கூட்டணி ஆட்சி என்றும் பேரம் பேசுகிற அளவுக்கு இன்றைய சமூக அரசியல் நிலை தரம் தாழ்ந்து போயுள்ளது. எந்த அரசியல் கோட் பாடோ கொள்கையோ எதுவுமின்றி பிழைப்பு அரசியலை பிரதான அர சியல் நிலையாக மாற்ற இவைகள் முயல்கின்றன. அந்தந்த சாதிகளின் பெரும்பான்மை அடித்தட்டு மக்க ளின் அறியாமையும், கல்லாமையும், சாதீய நம்பிக்கைகளில் மூழ்கிப் போயுள்ள உணர்வும் இந்த சுயநல தலைமைகளின் பெரும் மூலதனமாக விளங்குகிறது. இந்த அமைப்புக்கள் சமூக சீர்திருத்தம் குறித்தோ, தீண் டாமை குறித்தோ துளியும் யோசிக் கும் அமைப்புக்கள் அல்ல. மக்கள் மத்தியில் புகழ்பெற்ற தலைவர்களை சாதீய வட்டத்திற்குள் கொண்டுவந்து தங்களின் பிழைப்பு அரசியலை மூடமுயற்சிக்கின்றன.

இந்நிலையில் இடதுசாரி மற்றும் முற்போக்கு ஜனநாயக இயக்கங்கள் சாதீயச் சுயநல தலைமைகளின் அரி தாரங்களை களைந்திடும் வகை யிலும், அடித்தட்டு மக்களின் சாதீய உணர்வை கொச்சைப்படுத்தாமல் அதே சமயம் வர்க்க உணர்வு பெறு வதற்கான திசை வழியிலும் அவர் கள் கவனத்தை திருப்புவதுமான ஒரு நிதானமான அணுகுமுறை தேவைப் படுகிறது. எனவே, சாதீய இயக்கங் களின் மீதுநாம் வைக்கும் விமர்சனம் தோழர் லெனின் கூறியது போல குழந்தையை குளிப்பாட்டிய அழுக் குத் தண்ணீரை வெளியே கொட்டுவ தாக இருக்க வேண்டுமே தவிர, குழந் தையையும் சேர்த்தே கொட்டிவிடு வதாக இருக்கக்கூடாது.

ஒவ்வொரு சாதியின் அடிநிலை யில் உள்ள மக்களை வர்க்க ரீதியில் ஒன்று திரட்டுவது மிகவும் கடினமான பணியே. இந்த வர்க்க ஒற்றுமைக்கு குறுக்கே நிற்கும் சீனப் பெருஞ்சுவர் எது? தோழர் பி.டி.ஆர். சாதீய உணர்வுதான் குறுக்கே நிற்கிறது என்று கூறுகிறார். மேலும், ஏன் இந்த சாதீய உணர்வை ஒழிக்க இயல வில்லையென்பதற்கான காரணத்தை யும் கூறுகிறார். "கீழ்நிலையில் உள்ள வர்கள் அல்லது கீழ்நிலையில் உள்ள சாதிகள் இந்து சமூகத்தின் பெரும் பான்மையாக அமைந்திருப்பினும், ஏன், இந்த பெரும்பான்மை சாதீய ஏற்றத்தாழ்வு கறைகளையும், சில பிராமணர் அல்லது மேல் சாதி யினரின் சதிகளை முறியடிக்க முடிய வில்லை. பல்வேறு சாதிகளாகவும், உபசாதிகளாகவும் பிரிந்துள்ள சாதாரண மக்களையும், கீழ்நிலை சாதிகளையும், சாதீயப்பிரிவுகள் என்ற விஷம் பரவி அதற்கு இரை யாக்கியுள்ளது என்பதே யதார்த்தம்.



படிப்பகம்

www.padippakam.com

ஒவ்வொரு பிரிவும் தனக்கு இழைக்கப்பட்ட அநீதியை உணர்ந்தாலும், சாதீய அந்தஸ்தில்; தான் வகிக்கும் உயர்நிலை காரணமாக தன் கீழ் உள்ள சாதிக்கு, தான் இழைக்கும் அநீதிக்கு தீர்வுகாண தயாராக இல்லாமல் இருப்பதே".

இதையே அம்பேத்கார் பிராமணர்களால் எவ்வளவுதான் அவமானத்துக்கு உட்படுத்தப்பட்டாலும் அதைத்தாங்கிக் கொள்ளவே சாதி இந்துக்கள் விரும்புகின்றனர் என்று கூறுகிறார். பிரமிடு போல அமைந்த சாதீயப்படிநிலை சமூகத்தில் கீழ் நிலையில் பஞ்சமரும் அடுத்து சூத்திரர், வைசியர், ஷத்திரியர், பிராமணர் என்ற மேநிலைவரிசையில் உள்ளனர். மேல் அடுக்கில் உள்ள பிராமணரை எதிர்த்து கீழ் அடுக்கில் உள்ள அனைவருக்கும் அதிருப்தி இருந்தாலும் ஐக்கியப்படமாட்டார்கள். இரண்டாம் அடுக்கில் இருப்பவர் முதல் அடுக்கில் இருப்பவரை வீழ்த்த கவலைப்படுவதுண்டு. ஆனால் அதற்காக தனக்கு கீழே இருப்பவரோடு ஐக்கியப்படமாட்டார். காரணம், அவர்கள் தனக்கு சமமாக வந்துவிடக்கூடாது என்பதே. இப்படி ஒவ்வொரு படிநிலையிலும் உள்ள வகுப்பினர் நினைப்பதால் பொது இலட்சியத்திற்காக கீழ்நிலையில் உள்ளவர்கள் ஒன்றுபட வாய்ப்பில்லாமல் போகிறது. தவிரவும் அடிநிலையில் உள்ள பஞ்சமர்களை அப்படியே வைத்திருப்பதில் மட்டும் அனைவரும் ஒன்றிணைகின்றனர். இதனால் சாதியும், தீண்டாமையும் அப்படியே தொடர்ந்து பராமரிக்கப்படும் நிலை தடையின்றி தொடர்கிறது.

இந்தியாவில் முதலாளித்துவம் நிலப்பிரபுத்துவத்தோடு சமரசம் செய்து கொண்டுள்ள பின்னணியில் வர்க்க உருவாக்கம் மெதுவாகவே நடைபெறுகிறது. தொழிலாளர்களுக்கு வர்க்க உணர்வை ஊட்ட அவர் களை ஒரு வர்க்கமாக உணரச் செய்வதில் சாதீயக் கருத்தின் ஆதிக்கம் மிகப்பெரும் தடைக்கல்லாய் நிற்கிறது. அரசியலில் முதலாளித்துவ கட்சிகளின் தேய்மானமும் செல்வாக்கிழப்பும் தொழிற்சங்க அமைப்புகளில் சீர்திருத்தவாத தலைமைகளின் சமரச நடவடிக்கைகளால் ஏற்படும் செல்வாக்கிழப்பும், ஏமாற்றமடைந்த மக்களை, தொழிலாளர்களை, இடதுசாரி இயக்கங்களும் வர்க்க அமைப்புகளும் வென்றெடுக்க முடியாத பலவீனமான நிலையில், ஒரு மாற்றாக சாதீய தலைமைகளின் கீழ் அணிதிரளும் நிலைமையை ஏற்படுத்துகின்றன. அவர்கள் மனதில் ஏற்கெனவே ஆதிக்கம் செலுத்தும் சாதீய கருத்துக்களும் அதற்கு உதவுகின்றன. சாதீய கருத்துக்கள் ஆதிக்கம் பெறும் நிலை ஏற்பட்டால், மக்கள் மத்தியிலும் தொழிலாளர் மத்தியிலும் மீள முடியாத ஒற்றுமையின்மையை அது ஏற்படுத்தும்.

சாதீய வெறியூட்டி தங்களின் தேவைகளை நிறைவேற்ற முயலும் தலைமைகளின் சுயநலதன்மைக்கும், சாதி உணர்வின் காரணமாக, தான் சார்ந்த சமூகத்திற்கு ஏதாவது நலன் கிட்டும் என்ற அப்பாவித்தனமான எதிர்பார்ப்போடு பின்னால் போகும் சாதாரண மக்களின் நோக்கான பொதுத்தன்மைக்கும் உள்ள முரண்



படிப்பகம்

www.padippakam.com

பாட்டை, பக்குவமாக பயன்படுத்தி அந்த சாமானிய மக்கள் திரளை வென்றெடுக்க வேண்டியுள்ளது. இத்தகைய சூழலில் சுரண்டலுக்கு எதிரான போராட்டத்தில் சாதீய எதிர்ப்புப் போராட்டம் பின்னிப் பிணைந்தது என்று சொல்வதை எப்படி நடைமுறைப்படுத்துவது என்ற கேள்வி எழுகிறது. தொழில் அடிப்படையில் உருவாக்கப்படும் பொருளியல் கோரிக்கைகள் மட்டுமே சாதீய உணர்வு கொண்டுள்ள மக்களை ஒன்றுபடுத்திவிடாது என்ற நடைமுறை அனுபவம் நம்முன் உள்ளது. எனவே அவர்கள் மனதில் ஆதிக்கம் செலுத்தும் சாதிக் கருத்துக்களை தகர்க்க, சரியான பண்பாட்டு கலாச்சார நடவடிக்கைகள் ஊடாக பல வலுவான வடிவங்கள் மூலம் சமூக சீர்திருத்தக் கருத்துக்களை கொண்டு போவதன் தேவையை, இது ஐயத்திற்கிடமின்றி நமக்கு உணர்த்துகிறது.

அனைத்துச் சாதியிலும் உள்ள சுரண்டப்படும் மக்களை ஒன்றிணைத்து அணிதிரட்டுவதும், இவர்களுடன் ஒடுக்கப்பட்ட தலித் மக்களையும் ஐக்கியப்படுத்தி ஒரு விரிந்த ஒற்றுமையை உருவாக்குவதே இன்றைய தேவை. இதற்கான நடவடிக்கைகளில் நாம் ஈடுபடும்பொழுது அமைப்புகள் வராமல், நிலையான வாழ்வின்றி நெறிகளைப் பற்றி கவலைப்படாத உதிரிப் பாட்டாளி வர்க்கம் என்று சொல்லப்படுகிற ஒரு கூட்டத்தையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. ஏகாதிபத்திய பெரு முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ எதிர்ப்புக்கு இந்த வர்க்கத்தின் பங்களிப்பு எப்படி அமைய வேண்டுமென்பதையும் நாம் தீர்மானித்தாக வேண்டும்.

ஒரு தொழிலைச் செய்பவர்கள் என்ற முறையில் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள பாட்டாளிகளையும், கிராமப்புறத்தில் அரைப்பாட்டாளிகளையும் வர்க்க அமைப்புகளில் ஒன்றுதிரட்ட வாய்ப்புள்ளது. ஆனால், இந்த உதிரிப் பாட்டாளிகளை இந்தியாவில் இன்றுள்ள சூழ்நிலையில் அமைப்பு ரீதியாக அணிதிரட்ட இயலுமா? உலகமயம் என்ற கொள்கையை நாள்தோறும் உச்சாடனம் செய்யும் ஆளும் வர்க்கங் கள் வேலை வாய்ப்பற்ற வளர்ச்சியையும், கிராமப்புற பொருளாதாரத்தில் பெரும் அழிவைக் கொண்டு வரும் நிலையில் இந்த உதிரி பாட்டாளி வர்க்கத்தின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே போகும் நிலையில், இவர்களை அமைப்பு ரீதியாக திரட்டுவது குறித்த கேள்வி முன்னைக் காட்டிலும் இப்பொழுது முக்கியத்துவம் பெறுகிறது.

இந்த உதிரிப் பாட்டாளிகளில் உள்ள இளைஞர் பட்டாளம், ஆதிக்க வர்க்கங்களின் எடுபிடியாக, கையாளாக மட்டுமல்ல சாதீய இயக்கங்களின் முன்னணிப் படையாகவும் இன்று மாறியுள்ளது. இந்த நிலையில் உதிரிப் பாட்டாளிகளை அணிதிரட்டும் வாய்ப்பு குறித்து தோழர்கள் லெனினும், மாவோவும் என்ன கருத்தைக் கொண்டிருந்தனர் என்பதை பார்ப்பது அவசியம்.

உதிரிப் பாட்டாளிகள் குறித்து மார்க்சீய மூலவர்களின் மதிப்பீடு இது.



படிப்பகம்

www.padippakam.com

"பழைய சமூகத்தின் மிக அடி மட்டத் தட்டுகள் உதிர்த்தெறிந்த அபாயகரமான வர்க்கம், இந்த சமுதாய அழுக்கு, மெல்ல மெல்ல அழுகிக் கொண்டிருக்கும் திரள், ஓரோர் இடங்களில் பாட்டாளி வர்க்கத்தினால் நடத்தப்படும் இயக்கங்களுக்குள் அடித்து வரப்படலாம். ஆயினும் இந்த வர்க்கத்தின் வாழ்க்கை நிலைமைகள், பிற்போக்கு சதியின் கையூட்டு பெற்ற கருவியாக பங்கு வகிப்பதற்கே இதனை மிகவும் அதிகமாக தயார் செய்கின்றன". *(மார்க்ஸ் ஏங்கல்ஸ் 1.118 பக். 219)*

ரஷ்ய அனுபவத்தின் பின்னணியில் தோழர் லெனின் கருத்து,

"சந்தேகத்துக்கு இடமில்லாத வகையில், போரானது போர்க்களத்தின் முன்னணியில் நிற்பவர்களையும், பின்னால் இருப்பவர்களையும் கெடுத்துக் கொண்டிருக்கிறது. போருக்குத் தேவையான பொருள்களை வழங்குவதில் பணியாற்றிக் கொண்டிருப்பவர்களுக்கு அப்பொருள்களின் விலைகளைக் காட்டிலும் கூடுதலாக பணம் கொடுக்கப்படுகிறது. போரில் கலந்து கொள்ளாமல் ஒளிந்திருப்பவர்களையும் இந்த வருமானம் கவர்ந்திழுக்கிறது. இவர்கள் ஊர் சுற்றிகளும், அரைகுறை ஊர் சுற்றிகளும் ஆவர். எதையாவது பறித்துக்கொண்டு ஓடிவிட வேண்டும் என்ற ஆசைதான் இவர்களுக்கு. பழைய முதலாளிய சமுதாயத்தின் எச்சத்தில் மிக மோசமானவர்கள் இவர்கள்தான். பழைய தீமைகள் அனைத்துக்கும் வாகனமாகி இருப்பவர்கள். இவர்களை நாம் உதைத்து தள்ளி அப்புறப்படுத்த வேண்டும். மிகச்சிறந்த பாட்டாளி வர்க்க நபர்கள் அனைவரையும் தொழிற்சங்கங்களில் அமர்த்தி, எதிர்கால சோசலிச ரஷ்யாவுக்கான கருவாக அவர்களை உருவாக்க வேண்டும். " 1918ல் தோழர் லெனினின் இந்த மதிப்பீடு உதிரிப் பாட்டாளிகளை ஓரளவுக்கு சாதகமாக பயன்படுத்தும் வாய்ப்பை புலப்படுத்துகிறது.

சீனத்தின் அனுபவ பின்னணியில் தோழர் மாவோ இவர்கள் குறித்து மதிப்பிட்டது மேலும் கூர்ந்து நோக்கத்தக்கது. "இவை தவிர கணிசமான அளவில் பெரும் எண்ணிக்கையில் உதிரிப் பாட்டாளி வர்க்கம் இருக்கிறது. நிலம் இழந்த உழவர்கள், வேலை கிடைக்கப் பெறாத கைவினைஞர்கள் ஆகியோரை உள்ளடக்கியது இந்த வர்க்கம். இவர்கள் மற்ற அனைவரையும் விட மிகவும் நிச்சயமற்ற வாழ்க்கையை நடத்துகிறார்கள். இவர்களை எப்படிக் கையாளுவது என்பது சீனாவின் சிக்கலான பிரச்சனைகளில் ஒன்றாக இருக்கிறது. தைரியமான போராளிகள் இவர்கள். ஆனால், அழிவு வேலையில் நாட்டங்கொண்டவர்கள். சரியான முறையில் வழிகாட்டப்படுபவர்களாயின் இவர்கள் ஒரு புரட்சிகர சக்தியாக மாற முடியும்". *(மா.தொ.நு. 1 - 19). மேலும் அவர்,*

"காலனியாகவும், அரைக்காலனியாகவும் இருக்கிற சீனாவின் நிலை, கிராமப்புறத்திலும், நகர்ப்புறத்திலும் வேலையற்றவர்களின் எண்ணிக்கை ஏராளமாக பெருக வழி வகுத்துள்ளது. வாழ்வதற்கான சரியான வழி



படிப்பகம்

www.padippakam.com

முறைகள் மறுக்கப்பட்டதனால், இவர்களில் பலர் நெறி தவறிய வாழ்க்கைக்குத் தள்ளப்பட்டார்கள். எனவே, கொள்ளையர்கள், கலகக் காரர்கள், திருடர்கள், விபச்சாரிகள், மூடத்தொழில் செய்து வாழும் ஏராளமானவர்கள் உருவானார்கள். இந்த சமூகத்தட்டு நிலையற்றது. இவர்களில் சிலர் பிற்போக்கு சக்தி களால் விலைக்கு வாங்கப்படலாம். மற்றவர்கள் புரட்சியில் சேரலாம். இவர்கள் ஆக்க ரீதியான பண்பு அற்றவர்கள். ஆக்க நோக்கில்லாமல் அழிவு நோக்கு உடையவர்கள். புரட்சியில் சேர்ந்த பிறகு புரட்சிகர அணிகளுக்குள் சுற்றித்திரியும் கலக உணர்வையும், அராஜக சிந்தனை யும் ஏற்படுத்தும் தோற்றுவாயாக மாறுகிறார்கள். எனவே, அவர்களை எப்படி மறுவார்ப்பு செய்ய வேண் டும் என்பதனையும், அவர்களது அழிக்கும் பண்பில் இருந்து எப்படிப் பாதுகாத்து கொள்ள வேண்டும் என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்". *(மா.தெ.நு. 2-325)*

உதிரிப் பாட்டாளிகள் குறித்த மார்க்சீய மூலவர்களின் மதிப்பீட்டின் அடிப்படை, தோழர் லெனின் மற்றும் தோழர் மாவோவின் கருதுகோள் களில் மாறுபடவில்லை. மேலும், படிப்படியாக உதிரிப் பாட்டாளிகள் குறித்த சாதகமான அம்சத்தை விரிவு படுத்தியிருப்பதைப் பார்க்க முடி கிறது. இந்தியாவில் உதிரிப் பாட் டாளிகளின் பெருமளவு உற்பத்தி இன்று தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தி யிலேயே அதிகம் நடக்கிறது. இவர் கள் தாழ்த்தப்பட்ட சாதிகளின் தலை மைகள் இன்று எப்படி பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் பார்க்கிறோம். பாரம்பரிய இழிவுகளி லிருந்து விடுபட வேண்டுமென்கிற இவர்கள் வேகமும், அதன் தொடர்ச் சியாக முன்னுக்கு வரும் பாதுகாப்பு அம்சமும், தமிழகத்தில் சாமானிய மக்களிடையே ஒரு மோதல் களத்தை உருவாக்கியுள்ளது.

அதே சமயம் ஆதிக்க வர்க்கங் களும் இவர்களை பயன்படுத்திக் கொண்டு வருவதை திருவல்லிக் கேணியில் நடைபெற்ற சம்பவங்கள் எடுத்துக் காட்டுவதாக உள்ளன. திரு வல்லிக்கேணியில் நடைபெற்ற இந்து முஸ்லிம் கலவரங்களுக்கு முன்பு அப்பகுதியில் தாழ்த்தப்பட்ட வர்களும், முஸ்லிம்களும் அன் யோன்யத்துடன் இணக்கமாகவே இருந்துள்ளனர். அங்கு நுழைந்து ஆர்.எஸ்.எஸ். இயக்கம் மேல்சாதி தெய்வமான ராமர் கோவிலை கட்டி யுள்ளது. தாழ்த்தப்பட்ட இளைஞர் களுக்கு காயத்ரி மந்திரத்தை கற்றுக் கொடுத்துள்ளது. ஹோலி பண்டி கையையொட்டி ராக்கி அணிவிக் கும் பழக்கத்தை அறிமுகப்படுத்தி யுள்ளது. மேல்நோக்கிய ஒழுங்கு நெறி அல்லது சமஸ்கிருத மயமாக் கல் என்று இதை வர்ணிக்கும் சீனிவாஸ், தாழ்த்தப்பட்ட இளைஞர் கள் மற்றவர்களுக்கு இணையாக தங் களைக் காட்டிக் கொள்ளும் முயற்சி என இதை வர்ணிக்கிறார்.

இப்படி இளைஞர்கள் ஈர்க்கப்படு வதும், அங்குள்ள முதியவர்கள் பூணூல் போட்ட அய்யர்களே தங் களை மதித்து வந்துள்ளார்களே



படிப்பகம்

www.padippakam.com

என்று பெருமைப்படும் அடிமையின் உளநிலையும். பெண்களும் பங்கெடுக்கும் பல சடங்குகளை நடத்துவதன் மூலமாக, பெண்களையும் கவர்ந்து, முஸ்லிம்களிடமிருந்து அவர்களை ஆர்.எஸ்.எஸ். தனிமைப்படுத்தியிருக்கிறது. நம் (ஆரிய) கலாச்சாரத்துக்கு எதிரானவர்கள் முஸ்லிம்கள் என்று கல்கவிதையை ஊன்றியிருக்கிறது. திருவல்லிக்கேணியில் நடைபெற்ற இந்து முஸ்லிம் கல்வரத்தை ஆய்வு செய்த ஒரு குழு கண்ட உண்மையிது.

இந்த நிலையில் பாட்டாளி வர்க்க இயக்கங்கள், இந்த உதிரிப் பாட்டாளி வர்க்கத்தை தங்களுக்கு எப்படி சாதகமாக பயன்படுத்த முடியுமென்பதை பரிசீலிப்பது அவசியம். தாழ்த்தப்பட்டவர்களில் அதிகமாகவும், மற்ற சாதிகளில் ஓரளவும் உருவாகும் உதிரிப் பாட்டாளி வர்க்கம், அதன் எண்ணிக்கை இந்தியாவில் மிக அதிகம். ஒரு சீரழிவு நுகர்வு கலாச்சாரம் நம் சமூகத்தில் ஆதிக்கம் செலுத்தும் பின்னணியில் இடதுசாரி முற்போக்கு இயக்கங்களுக்கு இவர்கள் குறித்த அக்கறையை மேலும் அதிகப்படுத்துகிறது. காட்டாற்று வெள்ளம்போல் ஒரு அழிவு சக்தியாக இது உருமாறின் பெற்ற முன்னேற்றங்களை மட்டுமல்ல, இடதுசாரி முற்போக்கு இயக்கங்களையும் உலுக்கிவிடும். வர்க்க அமைப்புகளை சாதீய ரீதியில் பிளவுபடுத்தி நாசப்படுத்திவிடும். இப்பொழுதே அதன் அபாயத்தை உணர்ந்து தக்க நடவடிக்கை எடுப்பின், இந்திய நாட்டின் வெகுவான எண்ணிக்கையில் உள்ள இவர்களைக் கொண்டு. உடன்பாடான ஒரு குண மாற்றத்தை கொண்டுவர இயலும்.

தீண்டாமை ஒழிய சாதியம் ஒழிய வேண்டும். சாதி ஒழிய அதைத் தாங்கும் ஏகாதிபத்திய, பெரு முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ சக்திகள் ஒழிய வேண்டும். இந்த மூன்று சக்திகளும் ஒழிய ஒரு மக்கள் ஜனநாயக புரட்சி நடந்தாக வேண்டும். அதற்கு பாட்டாளி வர்க்கத்தையும் அதன் நேச அணியான அரைப்பாட்டாளிகளையும் பெருமளவில் வர்க்க் உணர்வுள்ளவர்களாக திரட்டியாக வேண்டும்.

சாதீயம் குறித்த தெளிவான புரிதலின்றி இவர்களைத் திரட்டிவிட முடியாது. சாதீய உணர்வுள்ள மக்கள் மத்தியில் வர்க்க உணர்வைத் தட்டியெழுப்புகின்ற வாய்ப்புள்ள சகல வடிவங்களையும் பயன்படுத்தும் ஞானம் ஒரு மக்கள் ஜனநாயகப் புரட்சியை நடத்தி முடிக்க முயலும் புரட்சிகர அணிகளுக்கு வேண்டும்.

உதிரிப் பாட்டாளிகளைத் திரட்ட பொருளாதார கோரிக்கைகள் என்ற ஒரு அடிப்படை மட்டுமே உதவாது. சாதீய உணர்வுள்ள மக்கள் திரளை பொருளாதார கோரிக்கைகளின் அடிப்படையில் மட்டுமே திரட்டிவிட முடியாது. இந்நிலையில் இவ்விரு பிரிவினரையும் நெருங்க கலாச்சார பண்பாட்டு சாதனங்களையும் வெகுவாக நாம் கையாள வேண்டியுள்ளது. மேற்கத்திய சீரழிவு நுகர்வு கலாச்சாரம் இவர்களை வெகு விரைவில் கவர்ந்து ஆட்படுத்தி வருகிறது.



படிப்பகம்

www.padippakam.com

மனிதர்களை மிருகங்களாக மாற்றும் அந்த சீரழிவுக் கலாச்சாரத்திலிருந்து ஒரு மக்கள் கலாச்சாரத்தை நோக்கி ஆழமாக நம் பார்வையை திருப்ப வேண்டும். பழமைகளின் வழியாக கலை, இலக்கியங்களில் புதுமைகள் படைக்கப்பட வேண்டும். மதச்சார் பற்ற, மூடநம்பிக்கைகளை விடுத்து, விஞ்ஞான நோக்கில் மக்களை ஒன் றிணைக்கும் விழா வடிவங்களைக் காண வேண்டும். சடங்கு விழாக் களை தவிர்த்து பெருவாரியான மக் கள் உயிர்ப்புடன் பங்கேற்கும் உத்தி களை ஆராய்தல் வேண்டும்.

கருத்துப் பிரச்சாரம் என்று கூறி அதற்கு இலக்கிய அமைப்புகளை மட்டுமே நம்பியிராமல் இடதுசாரி இயக்கங்கள் நேரிடையாக கலாச்சார விழாக்களில் பங்கெடுத்தல் வேண் டும். சாமானிய மக்களோடு இயக்கங் கள் நெருங்கிய உறவு கொள்ளவும், தன் பிடிமானத்தை பலப்படுத்தவும் அது உதவும்.

"பாட்டாளி வர்க்கம் முழுவதும் பல்வேறு வகையான கதம்ப கூட்டத் தினரால் சூழப்படாமல் இருக்குமா னால், முதலாளித்துவம் முதலாளித்து வமாக இராது. பாட்டாளி வர்க்கமுமே அதிகமாக வளர்ச்சியடைந்த பிரிவு என்றும், குறைவாக வளர்ச்சி அடைந்த பிரிவு என்றும் பிளவுபடாது இருக்கு மானால், பாட்டாளிகள் தாம் பிறந்த பிரதேசங்களின் அடிப்படையிலும், சில சமயங்களில் மதத்தின் அடிப் படையிலும், இன்னபிற வகையிலும் பிளவுபடாமல் இருப்பார்களேயா னால் முதலாளித்துவம், முதலாளித்து வமாக இருக்க முடியாது. இதிலிருந்து பெறப்படுவது என்னவெனில், பாட் டாளி வர்க்கத்தின் முன்னணிப்படை என்கிற, அதன் வர்க்க உணர்வுள்ள பிரிவாகிய பொதுவுடமைக் கட்சி, சூழ்நிலைகளைக் கையாளுவதில், மாற்றங்களை மேற்கொள்வதும், பாட் டாளிகளிடையே உள்ள பல்வேறு குழுக்களுடனும், பல்வேறு தொழி லாளர் கட்சிகளுடனும், சிறு பட்டறை உரிமையாளர்களுடனும் உடன்பாடு களையும், சமரசங்களையும் மேற் கொள்வது அவசியமானது முற்றி லும் அவசியமானது என்பதாகும்.

இது பாட்டாளிகளின் வர்க்க உணர்வின் புரட்சி உணர்வின், போராடுவதற்கும் வெற்றி பெறு வதற்குமான ஆற்றலின் பொது அளவைத் தாழ்த்தாமல், அதை உயர்த்துகிற வண்ணம், இந்த நடை முறை தந்திரங்களைப் பிரயோகிப் பது எவ்வாறு என்பதை தெரிந்து கொள்கிற விஷயமே தவிர வேறல்ல" (லெ.தொ.நு. 31.74) என்று கூறும் தோழர் லெனின் மேற் கோளை நினைவில் வைத்து ஒரு சிக்கலான இந்திய சமூக சூழலில் செயல்படும் கம்யூனிஸ்டுகள் தீண் டாமைத் தீயணைக்க செயலாற்ற வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

## ஜோதிடக்கல்வி:

# விஞ்ஞானவேடம் தரித்த மாயமான்

ஜோதிடம், வேதஜோதிடம் என்றும், ஜோதிட விஞ்ஞானம் என்றும் புதிய பெயரில் வருகின்றது. சாலையோரங்களிலும், நடைபாதைகளிலும், மலையடிவாரங்களிலும் இதுவரை இருந்தது. இப்போதும் இவை இருக்கிறது. ஆனால், புதிய ஜோடனையுடன் இப்போது புக நினைப்பது "அறிவுஜீவிகளை " உருவாக்கும் பல்கலை கழகங்களில் பல்கலை கழக மானியக்குழு தலைவர் பேராசிரியர் ஹரிகௌதமும், மத்திய அமைச்சர் முரளி மனோகர் ஜோஷியும், (இவரை மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் என்பதைவிட, மூட நம்பிக்கை மேம்பாட்டுத்துறை அமைச்சர் என்றால் பொருந்தும்) ஜோதிடக் கல்வியை அமுலாக்குவதில் அக்கறையாக உள்ளனர். பல பல்கலைக் கழகங்கள் இதை வரவேற்றுள்ளதாக ஜோஷி கூறுகின்றார். ஜாடிக்கேத்த மூடிபோல் இந்திய கல்வித்துறை செயலாளர் மஹாராஜ் கிருஷன் கவ் இருக்கிறார். இவர் டில்லியில் உள்ள பாரதீய வித்யா பவனில், இரண்டு ஆண்டுகள் பயின்று 'ஜோதிட ஆச்சார்யா' என்ற பட்டம் பெற்றவர். இப்படிப்பட்ட ஆர்.எஸ்.எஸ்.சின் காவிக் கூட்டத்திடம் இந்திய உயர்கல்வி சிக்கி சீரழிகின்றது.

இந்தியாவில் உள்ள பல்கலைக் கழகங்களில் ஜோதிடத்தை ஒரு துறையாக உருவாக்கிட வேண்டும், ஒரு பேராசிரியர், ஒரு ரீடர், இரண்டு விரிவுரையாளர்கள், ஒரு நூலகர், ஒரு கணினி இயக்குனர் ஆகியோரை நியமித்துக் கொள்ளலாம் என்றும், இதற்கு ரூ 15லட்சம் நிதி ஒதுக்கப்படும் எனவும் ஆலோசனைகளை வழங்கியுள்ள பல்கலைக்கழக மானியக்குழு இதுவரை சுமார் 34 பல்கலைக்கழகங்கள் மனுச் செய்துள்ளதாக தெரிகிறது. இதை படிப்பவர்களுக்கு எம்.எஸ்.சி., பி.எஸ்.சி. ஆகிய பட்டங்களை வழங்கிட வழிகாட்டியுள்ளனர். இதுவரை பல்கலைக் கழகங்கள், அறிஞர்களையும், விஞ்ஞானிகள், வான் மற்றும் புவியியல் நிபுணர்களை உருவாக்கி வந்தது. பட்டம் பெற்றவர்கள் M.A.(வரலாறு), M.Sc. (உயிரியல்), M.Sc. (கணிதம்) என தங்களை அடையாளப்படுத்திக் கொள்

A.பாக்கியம்


படிப்பகம்

www.padippakam.com

வார்கள். இனிமேல் இந்தப் பட்டிய லில் M.Sc. (கிளி ஜோசியம்), M.Sc., (நாடி ஜோசியம்), M.Sc.(எண் ஜோசியம்), M.Sc. (முகராசி ஜோதிடம்), M.Sc (கைரேகை ஜோதிடம்) ஆகியவ்வ இடம்பெறும். இந்திய உயர்கல்விக்கு இந்த இழிநிலை ஏற்பட வேண்டுமா?

ஜோதிடத்தை பாடமாக்கி, பட்டம் வழங்கிட துடிக்கும் இவர்கள். இதற்கு கூறுகின்ற நியாயமான காரணங்களில் உண்மை இருக்கிறதா? இருந்தால் ஏற்பதும், பொய் என்றால் மறுத்து மக்களிடம் விஞ்ஞானத்தை பரப்புவதும், மதச்சார்பற்ற சக்திகளின் கடமை அல்லவா?

ஜோதிட ஆதரவாளர்கள் கீழ்க்கண்ட கருத்துகளை முன்வைக்கின்றனர்.

அ) ஜோதிடம் வேதம் சார்ந்தது, இந்திய அறிஞர்களால் ஏற்கப்பட்டது, கடைப்பிடிக்கப்பட்டது.

ஆ) கோள்களின் நிலைபாடுகள் பற்றி வானவியல் என்ன கூறுகிறதோ, அதையே "ஜோதிடவியல்" கூறுகிறது. வானவியலை விஞ்ஞானம் என்றும், ஜோதிடவியலை விஞ்ஞானம் இல்லை என்றும் ஏன் கூறவேண்டும்?

இ) சில ஜோதிடர்கள் கூற்று நடைமுறையில் உண்மையாக நடந்து விடுகிறது. அவைகளை ஏன் விஞ்ஞானமாக ஏற்க கூடாது?

ஈ) வானிலை அறிக்கை பல நேரங்களில் பொய்த்துபோகிறது! மருத்துவ துறையில் நோய்களை பற்றி கிரகிப்பது பல நேரங்களில் தவறாகி விடுகிறது. மேலும் டாக்டர்கள் மாறுபட்ட முடிவுகளுக்கு வருகின்றனர். இவையெல்லாம் விஞ்ஞானத்தில் சேர்க்கிறபோது. "ஜோதிடவியலை" ஏன் சேர்க்கக்கூடாது?

உ) சில ஜோதிடர்கள் போதுமான பயிற்சியில்லாமல், தவறான பயிற்சியாலும் தோல்வி அடைகின்றனர். ஏன் விஞ்ஞானத்தில்கூட போலி விஞ்ஞானிகள், போலி மருத்துவர்கள் இல்லையா? இதேபோன்றுதான் ஜோதிடவியலிலும் நடக்கிறது!

ஊ) விஞ்ஞானிகள் அடாவடித்தனமானவர்கள். ஜோதிடவியலை படிக்காமலேயே, பரிசோதிக்காமலேயே புறக்கணிக்கிறார்கள்?

மேற்கண்ட கருத்துக்கள் விதண்டாவாதமானவை என்பதை விளக்கங்களை பார்த்தாலே புரியும். ஜோதிடத்தை வேதம், விஞ்ஞானம் என்றெல்லாம் மாற்ற கடுமையான முயற்சிகளை மேற்கொள்கின்றனர்.

## அ) வேத ஜோதிடமா? வெறும் ஜோதிடமா

"சூரியன், சந்திரன் தவிர இதர கோள்களும், நட்சத்திரங்களின் செயல்பாடுகளும் பூமியில் உள்ள மனித வாழ்க்கையையும், அவனது குணப்பாங்கிலும் தாக்கத்தையும், மாற்றத்தையும் ஏற்படுத்துகிறது" என்பதுதான் ஜோதிடத்தின் அடிப்படை கோட்பாடாகும். ஆனால், வேதகாலம் கி.மு. 600 ஆண்டுக்கு முற்பட்டவை. இக்காலத்தில் கோள்கள் பற்றிய குறிப்புகள் எதுவும் வேத இலக்கியங்களில் கிடையாது. ஒன்



படிப்பகம்

www.padippakam.com

பது கோள்கள் பற்றிய அறிதலும் அப்போது இல்லை. வாரத்தின் ஏழு நாட்கள் என்பதுகூட பிற்காலத்தில் கிரேக்கத்திலிருந்து அரேபியா வழியாக இந்தியாவிற்கு வந்தது. புகழ்பெற்ற சமஸ்கிருத மொழி ஆய்வாளர் சி.குஞ்சன் ராஜா" வேதத்திற்கும், ஜோதிடத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை" என்பதை விளக்கியுள்ளார். ஆனால் வேதங்களில் நிறையவே இடைச்செருகல் நடந்துள்ளது என்பதை விளக்கியுள்ளனர். எஸ்.கி.டானி என்ற அறிஞர் வேதகணிதம் பற்றிய ஆய்வை மேற்கொண்டார். வேதத்தில் சுக்ரநீதி என்ற பகுதியை படித்துவிட்டு கீழ்க் கண்டவாறு கூறுகிறார்.

"வேலை அளிப்பவர் வேலை செய்பவருக்கு என்னென்ன உதவிகள் நலன்கள் செய்யவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, பி.எப். மற்றும் விதவை மனைவிக்கு உதவுவது போன்ற கருத்துக்கள். ஐந்தாம் நூற்றாண்டிற்கு முன்பே நவீன காலம் போன்று வேலை அளிப்பவர் வேலையாள் உறவுபற்றி சிந்தித்துள்ளனர்" என்று எனது நூலில் எழுதினேன். ஆனால் வேத இலக்கிய ஆய்வறிஞர்கள் பிறகு இதை திருத்தினர். கிழக்கிந்திய கம்பெனி இந்தியாவிற்குள் வந்தபோது, இவை வேத இலக்கியங்களில் புகுத்தப்பட்டது என்றனர். பிறகு நான் திருத்திக் கொண்டேன் என்று எஸ்.ஜி.டானி தெரிவித்துள்ளார். சீனா, அரேபியா, ஐரோப்பா போன்று எழுதப்பட்ட வரலாறாக இந்திய வரலாறு இல்லை. வாய்வழி அறிவாகவே இருந்தது. எனவே, எண்ணற்ற இடைச் செருகல் செய்வதற்கு ஏதுவாக இருந்து விட்டது.

தற்போது வேத ஜோதிடம் என சேர்க்க காரணம் உள்ளது. ஜோதிடத்திற்கு மதச்சாயம் பூசிவிட்டால் இதை எதிர்க்கும் அனைவரையும் மத விரோதி, தேசவிரோதி என முத்திரை குத்துவதற்கு எளிமையாக இருக்கும் அல்லவா? எனவேதான் இந்த காவிக்கூட்டம் வெறும் ஜோதிடத்தை வேத ஜோதிடம் என புதிய முலாம் பூசுகின்றது.

பிற்காலத்தில்கூட அறிஞர்கள் பலர் ஜோதிடத்தை நம்பினர். ஆனால், அவற்றில் திருப்தி அடையவில்லை. புத்தர் ஜோதிடத்தை நம்பவில்லை, பிரம்மகுப்தா என்பவர் வராகமிகிரர், ஆரியபட்டர் போன்ற வானிலை ஆய்வாளர்கள் மீது தாக்குதலை தொடுத்தார். பழமைவாதிகளின் கோட்பாடுகளை இவர்கள் நிராகரித்ததால்தான் பிரம்மகுப்தர் இவர்களை கடுமையாக ஏசினார். எனவே பண்டைய அறிஞர் களால் ஏற்கப்பட்டது, படிக்கப்பட்டது, பாராட்டப்பட்டது ஜோதிடம் எனக்கூறுவது அப்பட்டமான புருடாவாகும்.

## ஆ. வானவியலும் ஜோதிடவியலும் ஒன்றா?

ஜோதிடத்தைவிட, வானவியல் பற்றிய விபரங்கள் இந்திய இலக்கியங்களில் நிறையவே காணப்படுகின்றது. இவை மேலைநாடுகளில் இருந்து வந்தவை என்ற கருத்து



படிப்பகம்

www.padippakam.com

இருக்கிறது. இருந்தபோதிலும், இந்தியாவில் பண்டைய இலக்கியங்களில் "வேதாங்க ஜோதிஷா" (Calendritcal Astronony) என்ற தலைப்பில் வானியல் பற்றி பல விஷயங்கள் கூறப்பட்டுள்ளது. இதை பலர் "ஜோதிடவியல்" என புரிந்து கொள்வது அபத்தமாகும்.

கோள்கள் (PLANET) என் றால் கிரேக்கத்தில் "அலைந்து திரி பவன்" என்று பொருள். நமது முன்னோர்கள் கோள்களின் சுற்றுப் பாதையை கவனித்துவந்தனர். நிலை மாற்றங்களையும் நீண்டகாலம் கவனித்தனர். இதிலிருந்து இரண்டு கருத்துக்கள் தோன்றின. 1) கோள்களை ஏதோ ஒரு விசேஷ சக்தி இயக்குவதால் அவை சுற்றுகின்றன. அது மட்டுமல்ல அவைதான் பூமியில் ஏற்படக்கூடிய மாற்றங்கள், மனிதவாழ்வில் ஏற்படும் மாற்றங்களுக்கு காரணம் என்று முடிவுக்குவந்தனர். இது தான் ஜோதிடவியலுக்கு அடித்தளமாக இருந்து அப்படியே தொடர்கிறது. 2) மற்றொரு கருத்து, கோள்களின் இயக்கம் பற்றி தொடர்ந்து ஆய்ந்தது. இந்த முயற்சியால்தான் பூமியை கோள்கள் சுற்றுகின்றன என்ற கருத்திலிருந்து வளர்ந்து சூரியனை கோள்கள் சுற்றுவது, நீள் வட்டப்பாதையில் சுற்றுவது போன்ற கண்டுபிடிப்புகளும், ஈர்ப்பு சக்தியால் தான் இவை சுற்றிவருகின்றன என்ற அற்புதமான முறையில் வானியல் விஞ்ஞானம் வளர்ந்தது. ஜோதிடம் இன்னும் பழைய கருத்திலிருந்து மீளாது மடமையை வளர்க்கிறது. நட்சத்திரம், ராசி போன்றவையைகூட நமது முன்னோர்கள் எப்படி கடைப் பிடித்தார்கள் என்பதை பார்த்தால் மேலும் வானவியல் வளர்ச்சியை புரிந்துகொள்ளமுடியும்.

## மாதத்திற்கு 32நாள் வருடத்திற்கு 13 மாதங்கள்?

சந்திரன் பூமியை சுற்றிவர 27 நாட்கள் ஆகின்றன. இப்படி சுற்றுவதால் சந்திரன் ஒவ்வொரு நாளும் ஒரு இடத்தில் இருக்கும். குறிப்பாக அமாவாசை முடிந்து மேற்குவானத்தில் தோன்றுகின்ற சந்திரன், தினந்தோறும் வளர்ந்துகொண்டே, இட மாறிக்கொண்டும் இருக்கும். தினசரி தோன்றுகிற சந்திரன் ஏதாவது ஒரு நட்சத்திர கூட்டத்தின் நடுவிலோ அல்லது ஓரத்திலோ இருக்கும். அந்த நட்சத்திர கூட்டத்தில் எது பிரகாச மாக விளங்குகிறதோ அதுதான் அன்றைய நட்சத்திரம். இப்படி 27 நாட்களுக்கும் 27 நட்சத்திரங்கள் குறிப்பிட்டு அதற்கு ஒரு பெயரையும் வைத்து அழைத்தனர்.

நட்சத்திரத்தைப் போன்றே நமது முன்னோர்கள் மாதங்களையும் தீர்மானித்தனர். அமாவாசையிலிருந்து பௌர்ணமி வரைக்கும் 27 நாட்கள், 27 நட்சத்திரங்கள். ஆனால் பௌர்ணமி அன்று சந்திரன் ஏதாவது ஒரு நட்சத்திரத்தில் இருக்கும். அந்த நட்சத்திரத்தின் பெயரையே அந்த மாதத்தின் பெயராக வைத்தனர். உதாரணமாக சித்திரை நட்சத்திரத்தில் பௌர்ணமி வருகிறது என்றால் அந்த மாதத்திற்கு சித்திரை என



படிப்பகம்

www.padippakam.com

பெயர் சூட்டினர். அதேபோன்று அஸ்வினி என்ற நட்சத்திரத்தில் பௌர்ணமி வருகிறது என்றால் அந்த மாதத்திற்கு "ஐப்பசி" என பெயரிட்டனர். நாம் தமிழ் மாதங்கள் என நினைத்துக்கொள்ள பெயர்கள் அனைத்தும் சமஸ்கிருதத்தில் நட்சத்திரங்களின் பெயர்களாகும்.

மேலே கூறியவைகளைத்தான் நமது முன்னோர்கள், பிறந்த நட்சத்திரம், மாதம் என்பதையும் பயிர் செய்ய அறுவடை செய்ய இன்னும் பல அன்றாட வேலைகளுக்கும் பயன்படுத்தினார்கள். இன்றைக்கும் பல பெரியவர்கள் பிறந்த தேதியை சொல்வதைவிட நட்சத்திரத்தைக் கூறுகின்றனர். இதிலிருந்து அடுத்த கட்டத்திற்கு விஞ்ஞானம் சென்றது. ஆனால் ஜோதிடம் இன்னும் பழைய கணக்கை வைத்து மக்களை வாட்டி வதைக்கிறது.

சந்திரன் பூமியை சுற்றி வருவதற்கு 27 நாட்கள் ஆகிறது. துல்லியமாக கூறுவதானால் 27 1/4 நாட்களாகும். இது நட்சத்திரத்தை மையமாக வைத்து சுற்றும் கணக்கு (SIDEREAL) என்றுபெயர். சந்திரன் பூமியை சுற்றுகிற அதே நேரத்தில் பூமி சூரியனை சுற்றிவருகிறது. இதனால் பூமி விலகிச்செல்லக்கூடிய நாட்களை சரிசெய்ய சந்திரனுக்கு கூடுதலாக 2 1/4 நாட்கள் தேவைப்படுகிறது. இதையும் சேர்த்து கணக்கிட்டால் சந்திரன் பூமியைச் சுற்றிவர 29 1/2 நாட்கள் தேவைப்படுகிறது. இது சூரியன் - பூமியின் நிலையை வைத்து கணக்கிடும் (SYNODIC PERIOD) முறை ஆகும். மேற்கண்ட 29 1/2 நாட்களை கணக்கிடுவதற்கு வசதியாக 30 நாட்களாக எடுத்துக்கொண்டு அதை ஒரு மாதமாகவும் நமது முன்னோர்கள் கருதினர். இதற்கு சந்திர (Luman Calender) காலண்டர் என்று பெயர்.

**நவீன காலண்டர்:**

ஒரு மாதத்திற்கு 29 1/2 நாட்கள் என்றால் 12 மாதத்திற்கு (29 1/2 X 12) மொத்தம் 354 நாட்கள் ஆகும். பூமி சூரியனை சுற்றிவருவதை தான் ஒரு வருடமாக கணக்கிடுகிறோம். அவ்வாறு பூமி சுற்றிவர 365 1/4 நாட்கள் ஆகிறது. அதாவது 11 1/4 நாட்கள் உதைக்கிறது. அதாவது சந்திரன் பூமியை சூரியனை சுற்றிவருவதை மாதங்கள் என்றால் பூமி சூரியனை சுற்றி வருவதை வருடம் எனக் கணக்கிட்டால் 11 1/2 மாறுபடுகிறது. இதை ஆங்கில மாதத்தில் ஒரு மாதத்தில் 1 1/2 நாட்களை கூட்டி 31 நாட்கள் எனவும் அடுத்த மாதத்தில் 1/2 நாளை கூட்டி 30 நாட்கள் எனவும், மீதமுள்ள 1/4 நாளை நான்காண்டுகளுக்கு ஒருமுறை கூட்டி பிப்ரவரி மாதத்தில் இணைத்தனர். தமிழில் இந்த 11 1/4 நாட்களை பங்கு போடுவதை ஆங்கிலமுறையை கடைப்பிடிக்கவில்லை. எனவே, ஒரு சில மாதங்களில் 32 நாட்களாக பிரித்துப்போட்டனர். இஸ்லாமியர்கள் இன்னும் பிறையைப் பார்த்தே பண்டிகைகளை கொண்டாடுவதால் பழைய கணக்கையே கடைப்பிடிக்கின்றனர். அவர்களது காலண்டரில் மூன்றுவருடத்திற்கு ஒருமுறை 13



படிப்பகம்

www.padippakam.com

மாதங்கள் வருகின்றன. மீதி நாட்களை சரிசெய்துகொள்கின்றனர். இது விஞ்ஞான ரீதியாக இல்லாவிட்டாலும் இதைத்தான் அவர்கள் பின்பற்றுகின்றனர்.

பூமி, சந்திரன், சூரியன் நட்சத்திரங்களையும், அவைகளின் இயக்கத்தையும் துல்லியமாக கணக்கிட்டு கால நேரத்தை தீர்மானித்துள்ளது விஞ்ஞானம். ஆனால், நமது பிறப்புக்கும், அவலங்களுக்கும் பலரின் சுகபோகங்களுக்கும் மேலே உள்ள நட்சத்திரம்தான் காரணம் எனக்கூறி மூளையை மழுங்கடிக்கிற வேலையைச் செய்கிற ஜோதிடம் விஞ்ஞானமாகுமா?

## என் ராசிக்கு எப்ப வேலை கிடைக்கும்?

நட்சத்திரத்தை வைத்து கணக்கிடும்முறை நமது நாட்டில் இருந்தது. பிற்காலத்தில் 'ராசி' என்ற ஒன்றும் உருவானது. இவை பாபிலோனிய நாட்டிலிருந்து வந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. சந்திரன் சுற்றிவரக்கூடிய பாதையில் உள்ள 27 நட்சத்திரங்களையும் 12 பாகங்களாக நமது முன்னோர்கள் பிரித்தனர். சந்திரனை 360 டிகிரி என வைத்துக்கொண்டு அதை 12 ராசிகளுக்கும் பிரித்தால் 360%12=30 பாகைகள் (டிகிரி) வரும். இந்த ஒவ்வொரு 30 பாகைகளும் ஒரு ராசி என்றனர். இந்த ராசியை சூரியனின் இருப்பைக் கொண்டு கணக்கிட்டனர். சந்திரன் ஒவ்வொரு நட்சத்திரக்கூட்டத்தில் ஒருநாள் இருப்பது போல் சூரியன் ஒவ்வொரு ராசி பாகையிலும் (டிகிரி) 30 நாட்கள் இருக்கும். கீழிருந்து நட்சத்திரக் கூட்டங்களை பார்க்கிறபோது அவை விலங்கு உருவத்தில் காணப்பட்டதால் விலங்கின் பெயரை (ஒன்றிரண்டு தவிர) ராசிக்கு வைத்தனர்.

எனவே, உனக்கு வேலை கிடைத்ததற்கும், வேலை கிடைக்காததற்கும், திருமணம் ஆகாததற்கும் இந்த ராசி தான் காரணம் என்று ஜோதிடம் கூறி னால் அதை விஞ்ஞானம் ஏற்க முடியுமா?

## கோள்களால் நமக்கு கோளாறா ?

கோள்களை பற்றி கணக்கு போடுவதிலேயே ஜோதிடவியல் சொதப்புகிறது. சந்திரன், சூரியன் இரண்டையும் சேர்த்து 7 கோள்கள் என்றும் கோள்களே இல்லாத ராகு, கேது ஆகியவற்றை கோள்கள் என நினைத்து நவக்கிரகங்களாக கணக்கிடுகிறது. இப்போது ராகு, கேதுவிற்கு வட தென்துருவம் என்றும், கோள்களின் நிழல்கள் என்றும் விளக்கம் கொடுக்கிறதே தவிர, விஞ்ஞானத்திற்கு வரவில்லை ஜோதிடம். சூரியன், சந்திரன் தவிர ஒன்பது கோள்கள் என்றும், ஒவ்வொரு கோளும் ஒன்று ஒன்றுக்கு மேற்பட்ட துணைக்கோள்களை கொண்டுள்ளது. என்பதை விஞ்ஞானம் நிரூபித்துள்ளது. மேலும் ஆய்வுகளை தொடர்கிறது.

## பொன்கிடைத்தாலும், புதன் கிடைக்காது!

இந்த வார்த்தைகள் ஏதோ புதன் கிழமைக்கு விசேஷ சக்தி இருக்



படிப்பகம்

www.padippakam.com

கிறது என்று அர்த்தமல்ல. இந்த கிரகம் சூரியனுக்கு மிக அருகாமையில் இருப்பதால் இவை வேகமாக தோன்றி மறைந்துவிடும். ரோமர்கள் இதை கடவுளின் தூதர் என அழைத்தனர். கிரேக்கர்கள் இது வேகமாக சுற்றிவிடுவதால் சுறுசுறுப்பான கிரகம் என நினைத்து இதுபோல் வியாபாரம் நடக்க வேண்டினர். நமது நாட்டில் இது பார்ப்பதற்கு அரிது என்பதால் பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது என்றனர். பிற்காலத்தில் இந்த கிரகத்தின் பெயரால் அமைந்த புதன்கிழமையை பலரும் விரும்பினர். இந்த கிழமைதான் நல்லது என்றால் அன்று உலகில் எங்கும் எந்த கெட்டதும் நடக்கக்கூடாது அல்லவா? இந்த கிரகமா நல்லது கெட்டதை தீர்மானிக்கிறது.

## செவ்வாய் வெறும்வாய்!

இதையாரும் விரும்புவதில்லை. காரணம் இதன் தோற்றம் அப்படி. இந்த கோள் மேற்பகுதி ரெட் ஆக்சைடுகளால் ஆனது. எனவே சூரிய ஒளி இதன் மீது பட்டு பிரதிபலிக்கும்போது இரத்த சிவப்பாக காட்சி தருகிறது. எனவே இதை நமது முன்னோர்கள் வெறுத்தனர். மேலும் இக்கோள்கள் வானில் தோன்றிய காலத்தில் கிரேக்க நாட்டில் சண்டைகள் நடந்தன. தீ பிடித்தல் நடத்தது. எனவே கிரேக்கர்கள் இதைப் போர்க்கடவுள் என அழைத்தனர். இப்படி இந்தக்கோளின் தோற்றம் பற்றிய தவறான கருத்தே நமது முன்னோர்களை வெறுக்கவைத்தது. இதே பிற்காலத்தில், செவ்வாய் வெறும் வாய். செவ்வாய் தோஷம் என மூட நம்பிக்கைக்கு வித்திட்டது.

## ஏழரை நாட்டு சனி!

சூரியனை சுற்றிவரக்கூடிய மிகவும் அழகான கிரகம் சனி. இதை சுற்றி ஒரு வளையம் அற்புதமாக இருக்கும். சாதாரண தொலை நோக்கிலேயே இவை தெரியும். இதையும் மக்கள் ஆகாத கிரகம் என்று கருதி வருகின்றனர். பூமியில் ஏதாவது ஒரு பகுதியில் பஞ்சம் அல்லது இயற்கை சீற்றஅழிவு ஏற்பட்டபோது மக்கள் இக்கிரகத்தை கண்டிருக்கலாம். அது தான் காரணம் என நினைத்து இந்த கிரகத்தை, வானவியல் வளராத காலத்தில் வெறுத்திருக்கலாம். கிரேக்கர்கள் வேளாண்மைக்கும் காலத்திற்கும் இதை கடவுளாக கருதுகின்றனர்.

இந்த கிரகம் சூரியனிலிருந்து 142.7 கோடி மைல்கள்தாண்டி உள்ளது. ஒரு முறை சூரியனைச் சுற்றிவர 30 ஆண்டுகள் ஆகும். ஒரு ராசியை கடப்பதற்கு 2 1/2 ஆண்டுகள் ஆகும். இதை நமது முன்னோர்கள் ஆகாத கிரகம் என்பதால் இது பிரவேசிக்கும் ராசியை வைத்து சனியின் பார்வை, உச்சம், நீச்சம் என்று கூறுவர். ஒருவரின் ராசிக்கு முன் 2 1/2 சனி பார்வை அவர் ராசியில் 2 1/2 சனி உச்சம் பின்பகுதி 2 1/2 நீச்சம் என ஏழரை ஆண்டுகளை சொல்லிவிடுவர். இதைக் கேட்டவன், நம்பியவன் 7 1/2 ஆண்டுகள் பாழ். சனி எனக்கென்ன என்று அதன் பாதையில் செல்கிறது. தன்னிடம் ஜாதக பலன்பார்க்க வந்த



படிப்பகம்

www.padippakam.com

வனிடம் ஜோதிடன் சனிக்கிரகத்துடன் முடிச்சுபோட்டு தெருவிலே அலைய விடுகிறான்.

ஒரு காலத்தில் கோள்கள், நட்சத்திரத்தை பார்த்து நேரம், விதைப்பு, அறுப்பு ஆகியவற்றை செய்தனர். வானவியல் வளராதபோது பூமியில் நிகழக்கூடியதற்கு நட்சத்திரம், கோள்கள்தான் காரணம் என நினைத்தனர். பிற்காலத்தில் வானவியல் வளர்ந்து கோள்களின் செயல்பாட்டை துல்லியமாக கணக்கிட்டு முன்னேறியது. கோள்களின் செயலுக்கும், பூமியில் மனிதனின் விதிக்கும் தொடர்பில்லை என்று நிரூபித்தது.

ஆனால் "ஜோதிடவியல்" நவீன காலத்திலும் அதே பழமையை பற்றிக்கொண்டு, மக்களை சிந்திக்க விடாமல் குழப்பிக்கொண்டிருக்கிறது.

## இ] குதர்க்கவாதமும் – சில்லரைத்தனமும்!

யாராவது ஒருவருடைய கணிப்புகள் ஏதாவது ஒருநேரத்தில் சரியாக இருந்தால் அதை விஞ்ஞானமாக ஏற்றுக்கொள்ள வேண்டியதுதானே என்று ஜோதிட ஆதரவாளர்கள் கேட்கிறார்கள். இது ஏதோ விஞ்ஞான கண்டுபிடிப்புகள் அதிர்ஷ்டவசமாக நடப்பது என்றும், பல சில்லரை விஷயங்கள்தான் விஞ்ஞானம் என்றும் குறைத்து மதிப்பீடு செய்யும் குதர்க்கவாதமாகும்.

விஞ்ஞானம் ஒருமுறை சோதனை செய்து தோல்வியடைந்தால் அவை கைவிடப்படுவதில்லை. அதே நேரத்தில் ஒரு பரிசோதனை ஒருமுறையில் வெற்றிபெற்றுவிட்டால் அதுவே இறுதியானதும் ஆகாது. மீண்டும் மீண்டும் பரிசோதித்து, ஏற்க வேண்டியது. ஆனால் ஜோதிடத்தில் இப்படிக் கூறமுடியுமா? விஞ்ஞானத்தின் வெற்றிகளைப் பட்டியலிடமுடியும். ஜோதிடத்தில் முடியுமா? யாராவது ஒருவரது கணிப்புகள் சரியானது என்று கூறுகிறார்களே, அதுயார், எத்தனை கணிப்புகளென கூறமுடியுமா? முடியாது.

## ஈ] டாக்டரும், ஜோதிடரும் ஒன்றா?

வானிலை அறிக்கை சில நேரங்களில் தவறாகிவிடுகிறது! மருத்துவர்கள் நோயை கிரகிப்பதும் சில நேரங்களில் தவறுகிறது. நோயை அறிவதில்கூட மருத்துவர்களிடையே மாறுபடுகிறது. இதையெல்லாம் விஞ்ஞானத்திற்கு உட்படுத்தும் போதும் ஜோதிடம் மட்டும் விஞ்ஞானமாகாதா என கேட்கின்றனர். என்ன சாதுர்யமான கேள்வி! ஜோதிடம் விஞ்ஞானம்தான் என் நிரூபிக்க எத்தனை கள்ளத்தனமாக, கபட வாதங்களை முன்வைக்கின்றனர்.

வானிலை அறிக்கை பல நேரங்களில் தவறாகிவிடுகிறது உண்மைதான். வானிலை அறிவிப்புகள் விஞ்ஞான கோட்பாடுகளுக்கு உட்பட்டது. வானிலை என்பது, விண்ணிலும், மண்ணிலும் ஏற்படக்கூடிய சிக்கலான மாற்றங்களை உடனுக்குடன் மதிப்பீடு செய்து அறிவிக்க



படிப்பகம்

www.padippakam.com

வேண்டியுள்ளது. வானிலையை அறிய மனிதன் உருவாக்கிய செயற்கைகோள்கள்தான் உதவுகின்றன என்பதை புரிந்து கொள்ளவேண்டும். இதை மேலும் துல்லியமாக அறிவிக்கவும், நவீன கருவிகளையும் பயன்படுத்திட வேண்டியுள்ளது. சூறாவளி மற்றும் வெள்ளம், புயல் அபாயங்களை முன்கூட்டியே அறிவிப்பதனால் லட்சக்கணக்கான மக்கள் பாதுகாக்கப்படுகின்றனர். ஜோதிடத்தால் இதை செய்ய முடியுமா?

மருத்துவத்துறையிலும் நோய் அறிந்து சிகிச்சை அளிப்பது என்பதில் குறைகள் உள்ளன. உயிரியல், மற்றும் உயிர்தொழில்நுட்பவியல் மூலமாக மனித உடலை முழுமையாக அறிய முடிகிறது. இதனால் அறுவை சிகிச்சை உட்பட முறைகளில் பிரமிக்கத்தக்க மாற்றங்கள் வந்துள்ளன. மேலும் வளரும். தற்போதுகூட ஒரு மருந்து சந்தைக்கு வரவேண்டும் என்றால், பல ஆண்டுகள் பல தடவைகள் பரிசோதித்த பிறகு விற்பனைக்கு அனுமதிக்கப்படுகிறது. இப்படி எந்த வரையறைக்குள்ளாவது ஜோதிடம் வருகிறதா? எனவே விஞ்ஞானத்தில் உள்ள சில குறைகளை பயன்படுத்தி, தன்னை "விஞ்ஞானம்" என பறைசாற்ற துடிக்கின்றனர் ஜோதிட ஆதரவாளர்கள்.

## உ] போலியா?

## சோலியைப்பார்:

போலி விஞ்ஞானிகள், போலி மருத்துவர்கள் இல்லையா? அது போலத்தான் போலி ஜோதிடர்கள் இருக்கிறார்கள். எனவே இதனால் இதை விஞ்ஞானம் இல்லை என்று கூறமுடியுமா? எனக் கேட்கின்றனர்.

எது விஞ்ஞானம்? எது போலி என பரிசோதனை செய்வதற்கு விஞ்ஞானத்தில் கோட்பாடுகள் உள்ளது. போலிகள் வரலாற்றின் குப்பைத் தொட்டியில் வீசப்பட்டுள்ளனர். நிரூபிக்கப்பட்டவை மேலும் மேலும் கவனிக்கப்பட்டுவரும். விஞ்ஞானத்தில் கோட்பாடு, பரிசோதனை, கவனித்தல் என்பன மூன்றும் ஒரு சுழல் படிகட்டுகள் மூலம் மீண்டும் மீண்டும்வரும். கோள்களின் சுற்றுப் பாதைக்கு ஈர்ப்பு சக்தி முக்கியமானது என நியூட்டன் கண்டுபிடித்தார். அதன்பிறகு மைய ஈர்ப்பு சக்தியை ஐன்ஸ்டீன் கண்டுபிடித்தார். இவை பல்வேறு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அதன்பிறகுதான் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதிலிருந்து இன்னும் பல புதிய கண்டுபிடிப்புகள் உருவாகும்.

ஆனால் ஜோதிடத்தில் யார் போலி? எது போலியானது? என எப்படி தீர்மானிப்பார்கள். மேற்கு நாடுகளில் புளூட்டோவிற்கு முக்கியத்துவம் உண்டு. சீனாவில் துருவ நட்சத்திரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இந்தியாவில் எதற்கு முக்கியத்துவம் உண்டு. கிரகங்கள் முதல் எண் ஜோசியம் பல்லியன் பலன்கள் வரை பார்க்கிறார்கள். இதில் எது போலி? எது நிஜம் என்பது எதைவைத்து அளவிடுவார்கள். அல்லது முரளி



படிப்பகம்

www.padippakam.com

மனோகர் ஜோஷி எந்த பாடத்திட்டத்தை பல்கலையில் அமுல்படுத்தி பட்டத்தைக் கொடுக்கப் போகிறார்.

## ஊ ] ஜோதிடம் சோதிக்கப்படவில்லையா?

விஞ்ஞானிகள் பிடிவாதக்காரர்கள். காரணம், அவர்கள் ஜோதிடத்தை படிக்காமல், பரிசோதிக்காமலேயே புறக்கணித்துவிடுகின்றனர் என்று குறை கூறுகின்றனர். இது உண்மைக்கு மாறான விமர்சனம்.

விஞ்ஞானிகள் ஜோதிடத்தைப் படித்து ஆராய்ந்து, ஒவ்வொன்றும் எப்படி தோல்வியை தழுவியது என்பதை விளக்கியுள்ளனர். இவை இந்திய இலக்கியங்களில் நிறையவே காணப்படுகிறது. இப்போது இன்னொரு உதாரணத்தை கூடச் சொல்லலாம். அமெரிக்காவின் மிசிகன் மாநில பல்கலைக்கழக மனோதத்துவ இயல் அறிஞர் பெர்னி சில்வர்மேன் ஒரு ஆய்வை மேற்கொண்டார். மிக்க மகிழ்ச்சியுடன் 2978 பேரை தேர்வு செய்து அவர்களை ஆய்வு செய்தார். இவர்களில் 478 ஜோடிகள் விவாகரத்து செய்துவிட்டனர். இந்த 478 ஜோடிகளும் நன்குபுகழ்பெற்ற இரண்டு ஜோதிடர்களின் ஆலோசனைப்படி, ஜோதிடப்படி திருமணம் செய்துகொண்டனர். இவர்கள் இந்த இரண்டு ஜோதிடர்களின் பெயரை இங்கு குறிப்பிடவில்லை. எனவே, அவரின் ஆய்வுப்படி ஜாதகப் பொருத்தங்கள் குடும்பவாழ்வை தீர்மானிப்பதில்லை என்பது தெளிவு. பிறந்த நட்சத்திரம், ராசி அனைத்தும் கடைசிவரை இணைந்தே வாழ்வார்கள் எனக் கூறுவதாக ஜோதிடர்கள் கூறினார்கள். ஆனால் நடந்ததோ விவாகரத்து! எனவே, கோள்களின் செயல்பாட்டிற்கும், இவர்களின் குடும்ப வாழ்விற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என தெளிவாகிறது.

## நீதித்துறைக்கு நேரம் எப்படியோ?

ஆந்திர நீதிமன்றத்தில் டாக்டர் பி.எம்.பார்கவா என்பவர் ஒரு வழக்கைத் தொடுத்தார். பல்கலை கழகத்தில் துவக்கப்படும் ஜோதிடக் கல்வியை தடை செய்யக் கோரினார். ஆனால் நீதிபதி இந்த வழக்கை தள்ளுபடி செய்தார். அதற்கு அவர் அளித்த விளக்கங்கள் எதிர்காலத்தில் நீதித்துறைக்கும், சட்டத்துறைக்குமே சவாலாக அமைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கலைக்களஞ்சியம், பிரிட்டானிகா-வில் ஜோதிடம் பற்றிய விளக்கத்தைப் படித்துக்காட்டி தீர்ப்பு கூறுகிறார். "விஞ்ஞானம் என்ற முறையில் ஜோதிடம், தனிமனிதவிதிகள், குழு, அல்லது நாடுகளில் விதிகள் ஆகியவற்றை முன்கூட்டியே அறிய, கோள்களும் நட்சத்திரங்களும் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றன என்பதை சரியாக புரிந்துகொள்ள பயன்படுகிறது" என்கிறார். "போலி விஞ்ஞானம் என்றால், நவீன மேற்கத்திய விஞ்ஞானம் இந்த ஜோதிடத்தை எதிர்க்கிறது" என்கிறார். மேலும் அவரது தீர்ப்பை முடிக்கிற



படிப்பகம்

www.padippakam.com

போது "நிபுணர்களின் கருத்துப்படி இந்த ஜோதிடம் தொடர்ந்து படிக்க வேண்டிய துறை" என்று கூறுகிறார்.

மேலும், நீதிமன்றம் இதில் போதிய பாண்டித்தியம் இல்லாததால் பல்கலைக்கழக மானியக்குழு நிபுணர்களின் கருத்தை ஏற்பதாக கூறுகிறார்". மேலும் ஜோதிடம் விஞ்ஞானமா இல்லையா என்பது ஒரு "பகிரங்க கேள்வி" என்று ஆந்திர உயர்நீதிமன்ற நீதிபதி கூறிவிடுகிறார்.

இந்த தீர்ப்பு சட்டத்திற்கும், நீதித் துறைக்கும் தலைகுனிவு என ஆய்வாளர் டி.ஜெயராமன் கருத்துக்களை தெரிவித்துள்ளார். இதேபோன்று ஆந்திரப்பிரதேச உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி அல்லாடி குப்புசாமியும் எழுந்துள்ள ஆபத்தை எதிர்கொள்ள வேண்டும் எனக் கூறி யுள்ளார்.

ஆந்திர நீதிபதி கலைக்களஞ்சியத்தில் ஜோதிடம் பற்றி கூறியவை. 19ம் நூற்றாண்டின் முற்பாதியில் அச்சானவை. விஞ்ஞானத்திற்கு நவீன கால சாட்சிகள் அவசியமானது. 1973ல் வெளியிடப்பட்ட கலைக் களஞ்சியம் பிரிட்டானிகாவில், "ஜோதிடத்தை லட்சக்கணக்கான மக்கள் நம்பினாலும் சமூகத்தின் அனைத்து மட்டத்தில் உள்ள அறிவாளிகளை பொறுத்தவரை ஜோதிடம் இறந்துவிட்டது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 1997ம் ஆண்டு அச்சான 15வது பதிப்பில் "16ம் நூற்றாண்டில் ஏற்பட்ட கோபர் நிகசின் புரட்சி உலகம் முழுவதும் ஜோதிடத்தை அடித்து தூள் தூளாக்கியது" என்று கூறப்பட்டுள்ளது.

எனவே, கலைக்களஞ்சியம் பிரிட்டானிகாவின் தற்போதைய பதிப்பு வரை பார்க்காமல் பழைய பதிப்பை படித்து சில பகுதியை மட்டும் கொண்டு தீர்ப்பு கூறப்பட்டுள்ளது.

நீதிமன்றத்திற்கு அனைத்து விஷயங்களையும் அறிந்திருக்க முடியாது தான். இதற்கு கடைபிடிக்க கூடிய முறைகள் என்ன? ஒரு சாலை விபத்தோ விமான விபத்தோ நடந்து விட்டால். அது ஓட்டுநர் அல்லது பைலட் தவறா அல்லது பொறியியல் தவறா என்பதில் நிபுணர்கள் கருத்து வேறுபாடு வரும். இதை நீதிமன்றம் எப்படித் தீர்க்கும். நிபுணர்களின் சாட்சியங்களை கேட்பது மூலமாகத் தான் முடியும். ஏன் சமீபத்தில் நர்மதா அணையின் உயரம்பற்றிய தீர்ப்புக்கு முன்னாள் உச்சநீதிமன்றம் பல நிபுணர்களின் மாறுபட்ட கருத்துக்களை பெற்றுத்தான் தனது தீர்ப்பை இறுதிப் படுத்தியது. ஆந்திர உயர்நீதிமன்றம் ஜோதிடக் கல்வியில் ஏன் இப்படி செய்யவில்லை.

ஜோதிடம் விஞ்ஞானமா இல்லையா என்பது "பகிரங்க கேள்வி" என்று கூறிவிட்டார் நீதிபதி. இது விஞ்ஞானம் என்றால் சட்டத்துறையில் தலையிடும் அல்லவா? குற்றவியல் சட்டத்தில் ஜோதிடமும் ஒரு சாட்சியாக மாறும்? குற்றவாளிக் கூண்டில் நிற்கக்கூடியவன், குற்றம் செய்யவில்லை. அவன் மீது கோள்கள் செலுத்தும் விதிதான் அவனை குற்றம் செய்ய தூண்டியது என்று முடிவுக்கு வரலாமா? இதனால் அவனை நிரபராதி என விடுதலை



படிப்பகம்

www.padippakam.com

செய்யலாமா? ஒருவன் பிறந்தவுடன் இவன் மிகப்பெரிய கொலைகாரனாக வருவான், எனவே இவனுக்கு இப்போதே தண்டனை கொடுத்துவிடலாம் என சட்டம் தீர்மானிக்குமா? ஜோதிடம் விஞ்ஞானம் எனில் இவையெல்லாம் நடக்கும். எனவே ஜோதிடம் விஞ்ஞானம் என்றால் ஏன் சட்டம், நீதித்துறையில் இடம்பெறவில்லை? எனவே, ஜோதிடத்தால், நீதிமன்ற தீர்ப்பால் பலமுன்னேற்றங்கள் தவிடுபொடியாகும். பழமையும், மூடப்பழக்கமும் கோலோட்சும்.

## அரசியல் சட்டத்திற்கு முரணானது

இந்திய அரசியல் சட்டம் 51ஏ-ல் இந்திய குடிமகனின் அடிப்படை கடமைகளில் ஒன்று, விஞ்ஞான கருத்துக்களை வளர்ப்பதாகும். ஆனால் இந்திய மக்களின் வரிப் பணம் இன்றைக்கு விஞ்ஞான கருத்தை வளர்க்கவா உதவுகிறது? அஞ்ஞான கருத்துக்கு அல்லவா அள்ளிவீசுகின்றனர்.

அரசியல் சட்டப் பிரிவு 28(1)ல் மத போதனை செய்யக்கூடிய கல்வி நிறுவனங்கள், அரசின் நிதி உதவியிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் இன்று பல்கலைக்கழக மானியக்குழு அரசின் நிதியுடன் ஒரு மதத்தின் போதனை செய்ய ஜோதிடக் கல்வியை தேர்வு செய்துள்ளது. இந்த தருணத்தில் எது மதக்கல்வி என்பதற்கு ஒரு தீர்வை வாசகர் கவனத்திற்கு கொண்டுவருவது நல்லது.

அமெரிக்காவின் அர்கான்சாஸ் மாநில அரசு பள்ளிக்கூட பாடத்தில், படைப்புக் கோட்பாட்டையும் பரிணாம கோட்பாட்டையும் சமமாக பாவித்து, பாட திட்டத்தை கொண்டு வந்து அரசு கொண்டுவந்த இந்த பாடத்திட்டத்தை எதிர்த்து தொடுக்கப்பட்ட வழக்கில் "உயிர்த்தோற்றம் பற்றிய படைப்புக்கோட்பாட்டை பள்ளியில் போதிப்பது என்பது சாராம்சத்தில் மதநம்பிக்கைகளை போதிப்பது ஆகும். மதத்தை அரசியலிலிருந்து பிரிக்க வேண்டும் என்ற சட்டத்தை படைப்புக்கோட்பாடு மீறுகிறது. தனது குடிமகனுக்கு அரசு மதநம்பிக்கைகளை போதிக்கக் கூடாது என்று கூறப்பட்டுள்ள அரசியல் சட்டகோட்பாட்டையும் இது மீறுவதாகும்" என தீர்ப்பு கூறினார்.

இந்த தீர்ப்பில் பள்ளிகளில் மதப் போதனைகளையே தடை செய்துள்ளது. ஆனால் நமது நாட்டில் ஆட்சி செய்யும் மத்திய அரசு அரசியல் சட்டத்தை மீறி, அனைத்து விதி முறைகளையும் மறைத்து பல்கலை கழகங்களிலேயே வேதஜோதிடக் கல்வி எனும் மதக்கல்வியை புகுத்துகிறது!

## ஜோதிடத்தை ஏன் மக்கள் நம்புகிறார்கள்?

ஜோதிடம் தோற்றுவிட்டது! இயற்கையின், பிரபஞ்சத்தின் செயல்பாட்டிற்கும் விஞ்ஞான ரீதியான விளக்கம் கிடைத்துவிட்டது. அறிவு ஜீவிகளும், முற்போக்குவாதிகளும் ஜோதிடத்தை புறக்கணித்துவிட்டனர். இருப்பினும் லட்சக்கணக்கான மக்கள் அதன் மீது நம்பிக்கை வைத்துள்ளனர். பாமர மக்கள் கைரேகை முதல் கம்ப்யூட்டர் ஜோதிடம் வரை பார்க்கின்றனர். பாமர மக்கள் மட் டுமா,



படிப்பகம்

www.padippakam.com

படித்தவர்கள் பதவியில் இருப்பவர் கூட ஜோதிடம், நேரம் பார்க்கின்றனர்.

தேர்தல் வந்தால் மக்களை மறந்து ஜோதிடர்களை நோக்கி ஓடுகின்றனர். பட்ஜெட் நல்ல நேரத்தில் தாக்கல் செய்வது. 9ம் எண்தான் எனது ஜெபம் என்று நினைத்தது. மஞ்சள் துண்டிற்கு மகிமை இருப்பதாக எண்ணியது. எண் ராசி பார்த்தவரின் பதவியும் ஒருமுறைபோனது. "மஞ்சள் துண்டு" மகிமையும் பலிக்காமல் பதவி பறிபோனது. மிகப்பெரிய கட்டிடங்கள், பாலங்கள், உட்பட நேரம் பார்த்து அதை துவக்குவது, முடிப்பது, திறப்பது என்றுக் காணப்படுகிறது.

இதற்குக் காரணம், விஞ்ஞான கருத்துக்கள் முழுமையாக மக்களிடையே. சென்றடையாததுதான். மேலும், முடிவெடிப்பதில் சிரமம், துன்பம், விரக்தி, ஆகியவையும் காரணம், இதைபோக்க புற உலகின் மீது சுமையை சுமத்தி வடிகால் தேடுகின்றனர். ஏதாவது ஒரு சக்தி வந்து நமது பிரச்சனையை தீர்க்காதா என்று முயற்சி செய்வதுதான் ஜோதிடத்தை நம்புவதற்கு காரணம்.

அரசியல், மற்றும் மேட்டுக்குடியில் இவைகாணப்படுவதற்குக் காரணம். ஜோதிடம் பார்த்து வெற்றி பெறுவோம் என்றவர் தோல்வி அடைந்தார். ஆனாலும் ஜோதிடம் அவரிடமிருந்து அகலவில்லை, மஞ்சள் துண்டுபோட்டால் பதவி இருக்கும் என நினைத்தார். ஆனால் பதவி போனது! மஞ்சள் துண்டு போகவில்லை! இதற்கு பதில் பிரபல விஞ்ஞானி அப்துல்கலாம் வார்த்தைகளில் கூறினால் சரியாக இருக்கும்.

பல நண்பர்கள் என்னிடத்தில் பறக்கும் தட்டு பற்றி விவாதிக்கிறபோது, ஜோதிடத்தில் விழுந்து விடுகிறார்கள், அது ஒரு கலை என்ற முறையில் அதை நான் எதிர்க்கவில்லை. ஆனால் அது ஒரு விஞ்ஞானம் என மாறுவேடம் தரித்து ஏற்றுக்கொள்ளச்சொன்னால் அதை நான் புறக்கணிப்பேன்".

எனவே இதை பலர் கலையாக நினைக்காமல், கடைப்பிடித்துவருகின்றனர். எனினும் ஜோதிடத்தைப் பற்றிய கடைசி எச்சரிக்கையுடன் இந்த எழுத்தை முடிப்பது நன்று. எனது எச்சரிக்கை அல்ல, 186 விஞ்ஞானிகள் 18 நோபல் பரிசு பெற்றவர்கள் உட்பட 1975ம் ஆண்டு உலக மக்களுக்கு கீழ்க்கண்ட அறிக்கையை விடுத்துள்ளனர்.

கீழே கையெழுத்திட்டுள்ள வானவியல் அறிஞர்கள், வான்இயற்பியல் விஞ்ஞானிகள் மற்றும் விஞ்ஞானிகளாகிய நாங்கள் பொதுமக்களை கீழ்க்கண்ட விஷயத்தில் எச்சரிக்கையுடன் இருக்க கோருகின்றோம். ஜோதிடர்கள் தனிப்பட்ட முறையிலோ, பொதுவிலோ கூறக்கூடிய மதிப்பீடுகள், ஆலோசனைகளை கேள்விக்கு அப்பாற்பட்டு நம்பவேண்டாம் என எச்சரிக்கிறோம். ஜோதிடத்தை நம்பக்கூடியவர்களே, அதில் எவ்வித விஞ்ஞான அடிப்படையும் இல்லை என்பதை புரிந்துகொள்ளுங்கள்.... நாம் இந்த உலகை எதிர்கொள்வோம், நமது எதிர்காலம் நமது கையில் உள்ளதேயன்றி நட்சத்திரங்களிடம் அல்ல"

*(தி .யுமனிஸ்ட் செ: அக்:1975.*

■



படிப்பகம்

www.padippakam.com

# அரைப்பாசிஸ வெறிகொண்ட சிவசேனா – ஓர் ஆய்வு

**அசோக் தவாலே** தமிழாக்கம் : கே.அறம்

சென்ற மாதத் தொடர்ச்சி

மும்பை மற்றும் பிவாண்டி நகர்களில் அத்தகைய நடவடிக்கைகள் யாவும் மிகவும் பகிரங்கமாகவே நடைபெற்றன. மாநில அரசானது அவற்றைப் பற்றியெல் லாம் துளிகூடக் கவலைப்படவில்லை. கலவரங்களின்போது காவல்துறையினரில் ஒரு பகுதியினர் செயலற்று நின்றனர். வேறு சிலரோ வகுப்புவெறிக்கு உறுதுணையாகச் செயல்பட்டனர். கலவரங்கள் ஓய்ந்த பிறகுங்கூட பால்தாக்கரேயின் மீதோ அல்லது வேறு எந்த ஒரு நபரின் மீதோ யாதொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேற்படி கலவரங்களைத் தூண்டியவர்கள் எஸ்.எஸ். கட்சியினர்தான் என்று மாநிலத்திலுள்ள இடதுசாரிகள் பகிரங்கமாகக் கண்டனஞ் செய்தார்கள். ஆளுங்கட்சிக்கோ, ஏனைய எதிர்க்கட்சிகளுக்கோ அத்தகைய துணிச்சல் ஏற்படவில்லை.

அதே 1984ம் வருடத்தில் எஸ்.எஸ். கட்சியானது மும்பையில் தனது முதல் மாநில மாநாட்டை நடத்தியது. மேற்படி மாநாட்டில் பேசிய பால்தாக்கரேயும், ஏனைய சிவசேனைத் தலைவர்களும் கடும் வகுப்புவெறியுடன் உரை நிகழ்த்தினர். மேலும் மகாராஷ்டிரம் முழுவதிலும் இந்துத்துவா கோஷத்துடன் தாங்கள் வியாபித்துப் பரவிடப் போவதாகவும் சூளுரைத்தனர்.

1984ம் ஆண்டில் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்டார். அதைத் தொடர்ந்து மக்களவைக்குத் தேர்தல்கள் நடைபெற்றன. அத்தேர்தலில் எஸ்.எஸ். கட்சியானது முதல் தடவையாக பாரதீய ஜனதாக் கட்சியுடன் கூட்டணி வைத்துக் கொண்டது. ஆனால் இந்திராகாந்தி படுகொலை செய்யப்பட்டதன் விளைவாகக் காங்கிரஸ் கட்சியின் மீது ஒரு அனுதாப அலை வீசிய காரணத்தால் மகாராஷ்டிர மாநிலத்திலுள்ள 48 மக்களவைத் தொகுதிகளில் 43 இடங்களில் காங்கிரஸ் கட்சியானது வெற்றி வாகை சூடியது. ஒரு இடத்தில் கூட வெற்றி பெற முடியாமற்போன உடனே எஸ்.எஸ். - பாரதீய ஜனதா கூட்டணியானது கலைக்கப்பட்டுவிட்டது. பின்னர் பல வருடங்கட்குப் பின்னர் அதே கூட்டணி உருவாயிற்று. 1985ம் வருடம் நடைபெற்ற மகாராஷ்டிர சட்டமன்றத் தேர்தலில் ஜகன் பூஜ்பால் என்ற ஒரே ஒரு எஸ்.எஸ். கட்சி வேட்பாளர் வெற்றி பெற்றார். ஆகக்கூடி எஸ்.எஸ். கட்சியானது மகாராஷ்டிரத்தில் அரசியல் ரீதியாக கேட்பாரற்றுக் கிடந்தது.



படிப்பகம்

www.padippakam.com

## சிவசேனைக் கட்சியானது மீண்டும் எழுச்சி பெறுகிறது

1985ம் வருடத்திய மும்பை நகர்மன்றத் தேர்தல்களின்போது எஸ்.எஸ். கட்சியானது மீண்டும் எழுச்சி பெற்றது. சட்டமன்றத் தேர்தல்களின்போது 288 சட்டமன்றத் தொகுதிகளில் எஸ்.எஸ். கட்சிக்கு ஒரு இடம் மட்டுமே கிடைத்தது என்று பார்த்தோம். சட்டமன்றத் தேர்தல்கள் நடந்து முடிந்த ஒரு சில மாதங்களுக்குப் பின்னர் மும்பை நகர்மன்றத் தேர்தல்கள் நடைபெற்றன. தேர்தல்கள் நடைபெறுவதற்குச் சில நாட்களுக்கு முன்னதாக எஸ்.எஸ். கட்சி சார்பில் மகாராஷ்டிர மேலவையில் உறுப்பினராக இருந்த பிரமோத் நவால்கர் மும்பை நகரை மகாராஷ்டிர மாநிலத்திலிருந்து தனியாகப் பிரிக்கும் யோசனை எதுவும் உள்ளதா என்றொரு கேள்வியை மேலவையில் எழுப்பினார். அதற்குப் பதிலளித்த மாநில முதல்வர் வசந்த தாதா பட்டீல் அத்தகைய யோசனை இருக்கிறதா? இல்லையா? என்பது தமக்குத் தெரியாது என்றும், ஆனால் அப்படி ஒரு முயற்சியானது மேற்கொள்ளப்படுமானால் நாம் யாவரும் அணிதிரண்டு அதற்கு எதிராகப் போராடுவோம் என்றும் கடுமையாகக் கூறினார். ஆனால் உண்மையில் அப்படிப்பட்ட எந்த ஒரு யோசனையும் எவராலும் முன்மொழியப்படவேயில்லை. அதை எஸ்.எஸ். கட்சியும், வசந்த தாதா பட்டீலும் நன்கறிவார்கள். இருந்தபோதிலும் எஸ்.எஸ். கட்சியினர் கற்பனையான அந்தப் பிரச்சனையை ஊதிப் பெரிதாக்கிக் கொண்டு நகரமெங்கும் பிரதேச உணர்வுகளைத் தூண்டிவிட்டனர். அதன் விளைவாக 170 நகர்மன்ற இடங்களில் 74 இடங்கள் சிவசேனைக் கட்சியினருக்குக் கிடைத்தது.

வசந்த தாதா பட்டீல் இரண்டு விதக் காரணங்களுக்காக மேற்படி உத்தியைக் கையாண்டார். அந்தச் சமயத்தில் அன்றையப் பிரதமர் ராஜீவ்காந்திக்கும், அவருக்குமிடையிலான உறவுகளில் சில கசப்பான அனுபவங்கள் உருவாகியிருந்தன. எனவே அவர் காங்கிரஸ் மேலிடத்துக்கு ஒரு அதிர்ச்சி வைத்தியம் கொடுக்க விரும்பினார். இரண்டாவதாக மகாராஷ்டிர மாநிலக் காங்கிரஸ் கமிட்டிக்கும், அவருக்கும் இடையிலான உறவுகள் அவ்வளவு திருப்திகரமாயில்லை. மாநில காங்கிரஸ் கமிட்டிக்கும், மும்பை நகர காங்கிரஸ் கமிட்டிக்கும் தொடர்ந்து உரசல்களும், மோதல்களும் இருந்துகொண்டேயிருந்தன.

எனவே மகாராஷ்டிர மாநிலக் காங்கிரஸ் கமிட்டியிலுள்ள பல்வேறு பிரிவினரும் சிவசேனைக் கட்சியை வளர்த்துவிடத் திட்டமிட்டனர். வசந்த தாதா பட்டீலின் நடவடிக்கைக்கு அதுவும் ஒரு காரணமாகும்.

வெற்றி போதை தலைக்கேறிய எஸ்.எஸ். கட்சியானது மும்பை நகரிலுள்ள சகல வெளி நபர்களும் உடனடியாக வெளியேற்றப்படுவதற்காக அஸ்ஸாமில் நடப்பதைப் போன்றதோர் கிளர்ச்சியை நடத்தப்போவதாக அறிவித்தது. பால்தாக்கரே மேலும் ஒரு படி முன் சென்று 1972ம் வருடத்துக்குப் பின்னால் மும்பையில் வந்து குடியேறியவர்கள் யாவரும் உடனடியாக விரட்டியடிக்கப் பட வேண்டும் என்று கூறத் தொடங்கினார். தவிர, இனிமேல் எந்த ஒரு


படிப்பகம்

www.padippakam.com
வெளிநபரும் மும்பையில் வந்து குடியேறுவதற்குத் தடை விதிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார். அவரது மேற்படி கோரிக்கைகள் எல்லாம் நடைமுறைக்கு வரவேயில்லை என்றாலுங்கூட அவரும் அவரது எஸ்.எஸ். கட்சியினரும் அடிக்கடி மேற்கூறப்பட்ட மாதிரியான மிரட்டல்களில் ஈடுபடுவதென்பது ஒரு வாடிக்கையாகவே இருந்து வந்தது.

மும்பை நகர்மன்றத்தில் பெரிய அளவில் இடங்களைக் கைப்பற்றிய எஸ்.எஸ். கட்சியினர் நகர்மன்றத்தின் நிதியாதாரங்களையெல்லாம் காலிபண்ணுவதற்குத் திட்டமிட்டனர். மும்பை நகர்மன்றமானது நாட்டிலேயே மிகவும் பணக்கார நகர்மன்றமாகும். அதனுடைய வருட வருமானமானது சில மாநில அரசுகளின் வருட வருமானங்களைவிட அதிகமாகும். அத்தகைய மும்பை நகர்மன்றத்தில் ஊழல்கள் தலைவிரித்தாடின. சிவசேனைக் கட்சியினர் அந்த ஊழல்களைப் பயன்படுத்திக் கொண்டு தங்கள் கட்சியின் வளர்ச்சிக்கான நிதியாதாரங்களைத் திரட்டிடத் திட்டமிட்டனர். மும்பை நகர்மன்றத்தில் அபரிமிதமான இடங்களைக் கைப்பற்றிய அவர்கள் தங்களது 2வது மாநில மாநாட்டை மகத் (Mahad) என்ற இடத்தில் நடத்தினர்.

1986ம் வருடத்தில் சரத்பவார் மீண்டும் காங்கிரஸ் கட்சியில் வந்து சேர்ந்து கொண்டார். அதன் விளைவாகவும் மகாராஷ்டிர மாநிலமெங்கிலும் எஸ்.எஸ். கட்சியினர் வேக வேகமாக வளரத் தொடங்கினர். அது காங்கிரஸ் கட்சிக்குச் சரியான எதிர்க்கட்சி இல்லாமலிருந்த நேரமாகும். அத்தகைய சூழ்நிலைகளைப் பயன்படுத்திக்கொண்டு எஸ்.எஸ். கட்சியும், பாரதீய ஜனதாக் கட்சியும் தங்களது வகுப்புவாத செயல் திட்டங்களின் அடிப்படையில் முன்னேறத் தொடங்கினர். மேலும் காங்கிரஸ் கட்சிக்குள் பற்பல உட்கட்சிச் சண்டைகள் நடந்து கொண்டேயிருந்தன. அதன் விளைவாக காங்கிரஸ் கட்சியானது மாநில முதல்வர்களை அடிக்கடி மாற்றிக்கொண்டேயிருந்தது. அம்மாநிலத்தில் பத்து வருடங்களுக்குள் ஆறு முதல்வர்கள் மாறிமாறி பதவி வகிக்க நேர்ந்தது. இத்தகைய சூழ்நிலைகளும் மகாராஷ்டிர மாநிலத்தில் சிவசேனைக் கட்சியும், பாரதீய ஜனதாவும் வளர்ந்தோங்கிடுவதற்கான சூழ்நிலைகளைத் தோற்றுவித்தன.

மேலும் 80களின் பிற்பகுதியிலும் 90களின் ஆரம்பத்திலும் ஷரத் ஜோஷியின் தலைமையின் கீழ் செயல்பட்ட "ஷேட்காரி சங்காதனா" என்ற இயக்கமானது பலவீனமடையத் தொடங்கியது. அதன் விளைவாகவும் எஸ்.எஸ். கட்சியினர் மற்றும் பாரதீய ஜனதாக் கட்சியினர் வளர்ச்சியடையத் தொடங்கினர். மகாராஷ்டிர மாநிலத்திலுள்ள நிலப்பிரபுத்துவ மற்றும் பணக்கார விவசாயிகளின் பிரதிநிதியாக விளங்கிய ஷரத் ஜோஷியின் "ஷேட்காரி சங்காதனா" என்ற அமைப்பானது விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான விலைகள் கிடைக்க வேண்டும் என்ற ஒரே ஒரு கோரிக்கையை முன்வைத்துப் போராடியது. மேற்படி அமைப்பானது மகாராஷ்டிர மாநிலத்திலுள்ள பல்லாயிரக்கணக்கான விவசாயிகளைத் திரட்டி போராடியது. வெங்காயம், புகையிலை, கரும்பு, பருத்தி ஆகிய பொருட்களுக்கு நியாயமான விலைகள் கிடைக்க வேண்டும் என்பது அவர்களது கோரிக்கையாகும். அவர்கள் அரசியலில் பங்கெடுக்காவிட்டா லுங்கூட,


படிப்பகம்

www.padippakam.com

80களில் அரசியலில் ஒரு மூன்றாவது அணி வேட்பாளர்களை ஆதரிக்கத் தொடங்கினார்கள். 90களில் ஷரத் ஜோஷி வெட்கங்கெட்ட முறை யில் தாராள மயமாக்கல் கொள்கைகளையும், காட் உடன்படிக்கையையும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு நபராகச் சிறுமைப்பட்டுப் போனார். அதன் விளைவாக அவருடைய இயக்கத்துக்கு விவசாயிகள் மத்தியிலிருந்த செல் வாக்கு மங்கிப் போய்விட்டது. அதற்குப் பின்னர் விவசாயிகளது கிளர்ச்சி களும் குறைந்துபோயின. ஷேட்காரி சங்காதனா மற்றும் காங்கிரஸ் கட்சி ஆகிய இயக்கங்களால் கைவிடப்பட்ட மகாராஷ்டிர மாநில விவசாயிகள் எஸ்.எஸ். கட்சி மற்றும் பாரதீய ஜனதாவினரின் பின்னால் அணிவகுக்கத் தொடங்கினர்.

அதற்குப் பிறகு ஷரத் ஜோஷி "சுதந்திர பாரதக் கட்சி" என்ற பெயரில் ஒரு புதிய கட்சியைத் தொடங்கினார். அந்தக் கட்சியானது தேர்தல்களில் அடியோடு துடைத்தெறியப்பட்டது. ஷரத் ஜோஷியும் இரண்டு தடவைகள் தோல்வியடைய நேரிட்டது. 1999ம் ஆண்டில் அவர் பலவீனமானதோர் அரசியல் சந்தர்ப்பவாதியாகச் சிறுமைப்பட்டுப் போனார். அவர் மிகுந்த செல்வாக்குடன் விளங்கிய காலத்தில் சிவசேனை மற்றும் பாரதீய ஜனதாக் கட்சிகளை வகுப்புவெறி பிடித்த கழுகுகள் என்றெல்லாம் பற்பல மேடைகளில் வசை பாடியுள்ளார். அதே ஷரத் ஜோஷி இன்றைக்கு எஸ்.எஸ்.- பாரதீய ஜனதாக் கூட்டணியில் தன்னுடைய கட்சிக்காரர்களுக்கும் ஒரு சில இடங்களை ஒதுக்கித் தரும்படி மன்றாடிக் கொண்டுள்ளார். தாக்கரே அவரது வேண்டுகோளை நிராகரித்துவிட்டார். உடனே ஜோஷி சரத் பவார் பக்கம் தன் பார்வையைத் திருப்பினார். "சரத்பவார் இந்திய நாட்டின் கோர்பச்சேவாக மாறுவார்" என்றெல்லாம் புகழ்மாலை சூடினார். மேலும் "சரத்பவார் இந்திய பிரதமராவார் என்றும், பண்டித நேருவால் ஏற்படுத்தப்பட்ட வழிமுறைகளுக் கும் லைசென்ஸ் - பெர்மிட் ஆட்சிக்கும் ஒரு முடிவு கட்டுவார்" என்றெல்லாம் ஷரத் பவார் முழக்கமிட்டார். தற்சமயம் ஷரத் ஜோஷியும் அவருடைய சங்காதனா அமைப்பில் எஞ்சியுள்ள நபர்களும் தேசியவாதக் காங்கிரஸ் கட்சியில் சேரலாமா அல்லது பாரதீய ஜனதாக் கட்சியில் இணைந்து விடுவோமா என்று யோசனை செய்து கொண்டுள்ளனர்!

## இந்துத்துவா இயக்கங்களும், மாநிலந்தழுவிய வகுப்புக் கலவரங்களும்

1986ம் வருடம் நவம்பர் மாதத்தில் எஸ்.எஸ். கட்சியானது மாநிலமெங் கிலும் தனது பாணியில் இந்துத்துவாப் பிரச்சாரத்தை முடுக்கி விடுவதற்காக "காவியுடை வாரம்" ஒன்றுக்கு ஏற்பாடு செய்தது. அன்றையப் பிரதமர் ராஜீவ் காந்தி ஷா பானு வழக்கு மற்றும் அயோத்தி ஆலயத்தைத் திறந்து விடுதல் ஆகிய பிரச்சனைகளில் சந்தர்ப்பவாத நிலைபாடுகளை மேற்கொண்ட ஒரு பின்னணியில் எஸ்.எஸ். கட்சியினரின் மேற்படி நடவடிக்கையானது தொடங்கப்பட்டது. "காவியுடை வாரம்" என்ற பெயரால் அவர்கள் மாநில மெங்கிலும் மூர்க்கத்தனமான முறையில் வகுப்புவெறியைத் தூண்டிவிட் டனர். மேலும் மகாராஷ்டிர கிராமங்களிலும் கூட தங்கள் கட்சியினரின்



படிப்பகம்

www.padippakam.com

பயிற்சி முகாம்களை நடத்தத் தொடங்கினர். அதன் விளைவாக மாநிலத்தில் வகுப்புக் கலவரங்களுக்கு வித்திடப்பட்டது.

மகாராஷ்டிர மாநிலத்தில் 80களில் தொடர்ந்து வகுப்புக் கலவரங்கள் நடைபெறத் தொடங்கின. 1982ம் வருடத்தில் வி.எச்.பி. அமைப்பானது "ஜன ஜக்ரான் யாத்திரை" என்ற பெயரில் ஒரு வெறியூட்டும் பிரச்சாரத்தை ஆரம்பித்து நடத்தியது. 1984ம் வருடம் எஸ்.எஸ். கட்சியினரும் வி.எச்.பி. ஆட்கள் கூடச் சேர்ந்து கொண்டு மாநிலமெங்கும் வகுப்புவெறியைத் தூண்டிவிடத் தொடங்கினர். சுமார் 100 இடங்களில் பல நகரங்கள், கிராமங்கள் உட்பட தலித்துகள் மீது வகுப்புக் கலவரங்கள் தூண்டிவிடப்பட்டன. எஸ்.எஸ். கட்சியினரால் தொடங்கி வைக்கப்பட்ட மேற்படி தீய நடவடிக்கைகளுக்கு முக்கியமாக ஆர்.எஸ்.எஸ்.காரர்களுடைய ஆதரவும், சில சமயங்களில் உள்ளூர் காங்கிரஸ் பெருந்தலைகளின் ஆதரவும் கிடைத்தது. இதனால் ஏற்பட்ட வகுப்புவாத மற்றும் ஜாதீயச் சூழ்நிலைகளை அடிப்படையாகக் கொண்டு எஸ்.எஸ்.கட்சி மற்றும் பாரதீய ஜனதாவினர் தங்களது தளங்களை வலுப்படுத்திக்கொண்டனர்.

இத்தகைய சூழ்நிலைகளில் 1987 டிசம்பரில் மும்பையிலுள்ள மத்தியதர வர்க்கப்பகுதியான "வில் பார்லே" என்ற தொகுதியில் ஒரு உபதேர்தல் நடைபெற்றது. இந்த உபதேர்தலில்தான் முதல் தடவையாக எஸ்.எஸ்.கட்சி யானது இந்துத்துவா கோஷத்துடன் தேர்தலில் போட்டியிட முன்வந்தது. பாரதீய ஜனதாக் கட்சியினர்கூட அவ்வாறு செயல்படத் தயங்கிக் கொண்டி ருந்தனர். அந்தச் சமயத்தில் பாரதீய ஜனதாக் கட்சியானது உண்மையாகவே ஜனதாதள வேட்பாளருக்காகப் பிரச்சாரஞ் செய்தது. ரமேஷ்பிரபு என்ற எஸ்.எஸ். கட்சிவேட்பாளர் வெற்றிபெற்றார். உடனே மேற்படி வெற்றியானது தங்களுடைய இந்துத்துவா கோட்பாட்டுக்குக் கிடைத்ததோர் வெற்றியாகும் என்று சிவசேனைக் கட்சியினர் பிரகடனஞ் செய்தனர்.

அந்த வெற்றியையொட்டி 1988ம் வருடத்தில் நடைபெற்ற ஔரங்காபாத் நகர்மன்றத் தேர்தல்களிலும் எஸ்.எஸ்.கட்சியினர் வெற்றிபெற்றனர். வேகமாக வளர்ந்துகொண்டிருந்த அந்த நகரத்தில் முஸ்லீம்கள் மற்றும் தலித்துக்கள் பெருமளவில் வசித்துவந்தனர். மேலும் அந்த நகரமானது மாத்வாடா பகுதி யில் முக்கியமானதோர் அரசியல் கேந்திரமாக விளங்கியது. மும்பை மற்றும் தானேக்கு அப்பாலுள்ள இந்தப் பகுதியில் எஸ்.எஸ்.கட்சியினர் முதல் முறை யாக வெற்றிபெற்றதானது மிகப்பெரிய சாதனையேயாகும். அதே வருடத்தில் பஞ்சாப் மாநிலத்தில் பயங்கரவாத நடவடிக்கைகள் தீவிரமடையத் தொடங்கி யிருந்தன. அத்தகைய சூழ்நிலையில் பால்தாக்கரே மும்பையில் வசித்துவரு கின்ற சீக்கிய மக்களைப் பகிஷ்கரிக்கும்படியாக ஒரு அறைகூவல் விடுத்தார்.

நகரில் தொழில்கள் நடத்திவந்த சீக்கிய வர்த்தகர்களிடமிருந்து கோடி கோடியாகக் கப்பம் வசூலித்துக்கொண்டபின்னர்தான் எஸ்.எஸ்.கட்சியினர் தங்களது பயங்கரவாத நடவடிக்கைகளை நிறுத்திக்கொண்டனர்.

1989ம் வருடமானது எஸ்.எஸ்.கட்சியின் நலன்களுக்குச் சாதகமானதோர்



படிப்பகம்

www.padippakam.com

திருப்புமுனையாக அமைந்தது. இத்தனை வருடங்களாக அவர்களது "மார்மிக்"ஏடானது ஒரு வார ஏடாக வெளிவந்துகொண்டிருந்தது. எஸ் எஸ். கட்சியினர் அந்த ஏட்டையுந்தவிர "சாமனா" என்ற பெயரில் ஒரு தினசரியையும் 1989ல் தொடங்கி நடத்தத் தொடங்கினர். " சாமனா" என்றாலே "மோதல்" என்று அர்த்தம். 1989 - 90 களில் நடந்த நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தேர்தல்களைக் கருத்தில்கொண்டு மேற்படி தினசரியானது தொடங்கப்பட்டது. தங்கள் வசமிருந்த அந்தத் தினசரி ஏட்டைப் பயன்படுத்திக்கொண்டு அவர்கள் தங்களுடைய விஷங்கக்கும் பிரிவினைப் பிரச்சாரங்களை மேலும் வெறித்தனமான முறையில் நடத்திடத் தொடங்கினர்.

1989ம் வருடம் ஏப்ரல் மாதத்தில் தானே நகரில் அதிர்ச்சிகரமானதோர் சம்பவமானது நிகழ்ந்தது. தானே நகர்மன்ற மேயர் பதவிக்குப் போட்டியிட்ட எஸ்.எஸ்.கட்சியின் வேட்பாளர் தோற்றுப்போனார். எஸ்.எஸ்.கட்சியைச் சேர்ந்த நகர்மன்ற உறுப்பினர்களில் சிலர் கட்சிமாறி வாக்களித்ததுதான் அதற்குக் காரணமாகும். அது, தொடர்ந்து ராணுவக் கட்டுப்பாட்டுடன் விளங்கிவருகின்ற அவர்களுடைய கட்சியின் வரலாற்றில் முன் எப்போதுமே நடந்திராததோர் நிகழ்ச்சியாகும். துரோகிகளின் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தாக்கரே எச்சரித்தார். அவர் அவ்வாறு எச்சரிக்கை விடுத்த ஒரு சில நாட்களுக்குள்ளாகவே சந்தேக வட்டத்துக்குள் இருந்த அவர்களுடைய நகர்மன்ற உறுப்பினரான சிரிதர் கோப்கார் என்பவர் எஸ்.எஸ்.கட்சியின் அடியாட்களால் படுகொலை செய்யப்பட்டார். மேற்படி சம்பவம் நடந்து முடிந்து 2 மாதங்களுக்குப்பின்னர் பாரதீய ஜனதா கட்சியானது எஸ்.எஸ். கட்சியினருடன் தேர்தல் கூட்டணி அமைத்திடுவதற்கு முன்வந்தது.

பிரமோத் மகாஜன் மற்றும் கோபிநாத் முண்டே ஆகியோரின் வற்புறுத்தல்கள் காரணமாக எல்.கே.அத்வானியின் ஆசிகளுடன் மேற்படி கூட்டணியானது உருவாக்கப்பட்டது. மேற்படி முடிவுக்கு மகாராஷ்டிர மாநில பாரதீய ஜனதாக் கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்களுடைய ஆதரவும் கிடைத்தது. மேற்படி முடிவு மேற்கொள்ளப்பட்ட பலாம்பூர் கூட்டத்தில் பாரதீய ஜனதாக் கட்சியானது வி.எச்.பி.அமைப்பினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ள ராமஜென்மபூமி கிளர்ச்சிகளுக்கு வெளிப்படையான ஆதரவளிப்பது என்றதோர் முடிவும் மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறுதான் இந்துத்துவா அடிப்படையில் சிவசேனைக் கட்சிக்கும் பாரதீய ஜனதாவினருக்குமிடையிலான கூட்டணியானது தொடங்கியது. மேற்படி கூட்டணியானது இன்றளவும் தொடர்கதையாக நீடிக்கின்றது என்பதை நாமறிவோம்.

## ஜாதீயம் என்ற துருப்புச்சீட்டு

எஸ்.எஸ்.கட்சியினர் மிகவும் வெறியுணர்வுடன் வகுப்புவாதத் துருப்புச்சீட்டைப் பயன்படுத்திவந்த அதே சமயத்தில் மக்களிடையே ஜாதீய உணர்வுகளைத் தூண்டிவிட்டு அதில் குளிர்காய்வதற்கும் திட்டமிடத் தொடங்கினர். 1974ம் வருடத்திலேயே அவர்கள் தலித் விடுதலைச் சிறுத்தைகள் மீது தாக்குதல் தொடுத்தனர் என்பதை நாம் முன்னரே



படிப்பகம்

www.padippakam.com
குறிப்பிட்டுள்ளோம். அவர்கள் 80களின் நடுப்பகுதியில் தொடங்கி தலித் மக்கள் மீது பற்பல தொடர் தாக்குதல்களை அரங்கேற்றத் தொடங்கினர். குறிப்பாக அத்தகைய தாக்குதல்கள் மரத்வாடா மற்றும் விதர்ப்பா பகுதிகளில் உள்ள கிராமப்புறங்களில் நிகழ்த்தப்பட்டன. பின்னர் அவை இதர பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டன. தலித் மக்களுக்குப் புறம்போக்கு நிலங்கள் கொடுக்கப்படக்கூடாது என்று சிவசேனையினர் எதிர்ப்புக்குரல் எழுப்பினர். எஸ்.எஸ்.கட்சியினர் தலித்துகளுடைய வயல்களுக்குச்சென்று பயிர்களை நாசப்படுத்துவது, அவர்களது குடிசைகளைப் பிய்த்தெறிவது போன்ற அராஜகச் செயல்களைக் கட்டவிழ்த்துவிட்டனர். மேற்கூறப்பட்ட தாக்குதல்களின்போது ஒரு சில தலித்துக்கள் கொலை செய்யப்பட்டதும் உண்டு. எஸ்.எஸ்.நபர்களால் அம்பாதாஸ் ஸாவனே என்ற முக்கியமான தலித் தலைவரும் படுகொலை செய்யப்பட்டார். அவ்வாறு தாக்குதல்களுக்கு உள்ளான பெரும்பாலான தலித்துக்கள் யாவருமே ஏழை, எளிய விவசாயக் கூலிகளாவார்கள். அவர்களில் ஒருசில ஏழை விவசாயிகளும் உண்டு. தாக்குதல்களை நடத்திய நபர்கள் அனைவருமே மகாராஷ்டிர மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட இனங்களைச் சேர்ந்த நிலப்பிரபுக்களாவர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மண்டல் குழு அறிக்கையானது வெளியாயிற்று. அதன் விளைவாக நாட்டில் பற்பல சர்ச்சைகள் கிளம்பின.

ஜாதீய அடிப்படைகளில் அமுலாக்கப்படுகிற சகலவித இட ஒதுக்கீடு களையும், தான் கடுமையாக எதிர்ப்பதாக பால்தாக்கரே பகிரங்கமாகப் பிரகடனஞ் செய்தார். இதர பிற்பட்ட மக்கள் மட்டுமின்றி தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்குங்கூட இட ஒதுக்கீடுகள் அமுலாக்கப்படக்கூடாது என்று அவர் வாதாடினார். அவர் அவ்வாறு அறிவித்ததைக் கண்ணுற்ற அரை நிலப்பிரபுத்துவ மேல்ஜாதிக்காரர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. எனவே அவர்கள் அனைவருமே எஸ்.எஸ்.கட்சி யில் வந்து தங்களை இணைத்துக்கொண்டது மட்டுமின்றி தலித்துக்கள் மீது முன்னைவிடக் கொடுமையான வகையில் வெங்கொடுமைகளைச் செயல்படுத்திடத் தொடங்கினர்.

1987ம் ஆண்டில் எஸ்.எஸ்.கட்சியினரின் ஜாதீயக் கண்ணோட்டமானது நாடெங்கும் மிகவும் முக்கியத்துவம் பெற்றது. மகாராஷ்டிர அரசாங்கமானது மகாத்மா ஜோதிபாபூலேயின் மற்றும் டாக்டர் அம்பேத்கார் ஆகியோரது நினைவை முன்னிட்டு அவர்கள் எழுதிய சகல நூல்களையும் முழுமையாகப் பதிப்பித்து வெளியிடும் ஒரு திட்டத்தைத் தொடங்கியது.

அந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக அரசானது டாக்டர் அம்பேத்காரால் எழுதப்பட்டு அதுநாள் வரைக்கும் பதிப்பிக்கப்படாமலிருந்த "இந்துமதத்தின் புரியாத புதிர்கள்" என்ற நூலை வெளியிட்டது.

அந்த நூலில் டாக்டர் அம்பேத்கார் சமூகநீதியின் அடிப்படையில் பாரபட்சமற்ற வகையில் இந்து மதத்தைப் பற்றியதோர் ஆராய்ச்சியை மேற்கொண்டிருந்தார். இந்து கடவுளர்கள் சம்பந்தமான பல வாழ்க்கைக்


படிப்பகம்

www.padippakam.com

கதைகளை அவர் தனது மேற்படி நூலில் விவரித்திருந்தார். மேற்படி நூலில் "ராமர் மற்றும் கிருஷ்ணர் ஆகியவர்களது புதிர்கள்" என்ற ஒரு பகுதியும் இருந்தது.

டாக்டர் அம்பேத்காரின் மேற்படி "புதிர்கள்" என்ற நூலானது இந்து மதத்தையும், இந்துக் கடவுளர்களையும் சகிக்க முடியாத அளவுக்கு இழிவுபடுத்துகிறது என்றும் அதனால் மேற்படி நூலானது உடனடியாகத் தடை செய்யப்பட்டாக வேண்டும் என்றும் எஸ்.எஸ்.கட்சியினர் கோரினார்கள். அவர்கள் அந்தப் பிரச்சனையை மையமாகக் கொண்டு 1988ம் வருடம் ஜனவரி 15ம் நாளன்று மும்பை நகரில் மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தினார்கள். மேலும் மாநிலமெங்கும் பற்பல குழப்பங்களை ஏற்படுத்தினார்கள்.

மேலும் அவர்கள் டாக்டர் அம்பேத்கார் மீது வசைமாரி பொழிந்தார்கள். 1988 பிப்ரவரி 5ம் நாளன்று தலித் அமைப்புக்களும் திரண்டெழுந்து எஸ்.எஸ். கட்சியினருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை நடத்தியதோடு, டாக்டர், அம்பேத்காரின் மேற்படி நூலை உடனடியாக வெளியிட்டாகவேண்டும் என்று வற்புறுத்தினார்கள்.

அதே சமயத்தில் "ஸோபார்" என்ற ஆர்.எஸ்.எஸ். சார்புள்ள ஒரு ஏட்டில் மகாத்மா ஜோதிபா பூலேயைப் பற்றிய மோசமான அவதூறுச் செய்திகள் வெளியாயின. மகாத்மா ஜோதிபா பூலே சமூக நீதிக்காகப் போராடிய தீவிரமானதோர் தலைவராவார். அவரை டாக்டர் அம்பேத்கார் தன்னுடைய குருவாகக் கருதிப் போற்றி வந்துள்ளார். இவ்வாறு சங் பரிவார் கூட்டத்தைச் சேர்ந்த மேல்ஜாதி ஆட்களுடைய துவேஷமான கண்ணோட்டங்கள் உள்ளங்கை நெல்லிக்கனி போன்று வெளிச்சத்திற்கு வந்தன.

1978 முதல் 1994ம் ஆண்டு வரைக்கும் 16வருட காலமாக மகாராஷ்டிர மாநிலத்தில் ஒரு பிரச்சனையானது கொந்தளித்துக் குமுறிக்கொண்டேயிருந்தது. அதாவது அவுரங்காபாத் நகரில் செயல்பட்டுவரும் மரத்வாடா பல்கலைக் கழகத்திற்கு டாக்டர் அம்பேத்காரின் பெயர் சூட்டப்படவேண்டும் என்பது தான் அந்தக் கோரிக்கையாகும். 1978ம் வருடம் ஜூலை 27ம் நாளன்று மகாராஷ்டிர மாநில சட்டமன்றத்தில் மேற்படி கோரிக்கையை ஆதரித்து ஏக மனதாக ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுவிட்டது. ஆனால் அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட மறு நிமிடத்திலேயே மரத்வாடா பகுதியில் வாழ்ந்துவந்த தலித்துக்கள் மீது பயங்கரமான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. அதன் விளைவாக மேற்கூறப்பட்ட சட்டமன்றத் தீர்மானமானது தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது. காங்கிரசில் உள்ள நிலப்பிரபுத்துவ சக்திகள்தான் தலித்துகளுக்கு எதிரான அத்தகைய வன்முறைகளில் ஈடுபட்டன. அத்தகைய வன்முறைகளுக்கு ஆதரவாக ஜனசங்கத்தைச் சேர்ந்த மேட்டுக்குடியினரும் செயல்பட்டார்கள். எஸ்.எஸ்.கட்சியினரும் வெளிப்படையாக சட்டமன்றத்தீர்மானத்திற்கு எதிராக 16 வருட காலமாகக் குரலெழுப்பிவந்தனர். ஆனால், 1978ம் வருடத்திற்குப் பின்னர் எஸ்.எஸ்.



படிப்பகம்

www.padippakam.com
கட்சியினரின் செல்வாக்கானது மும்பை மற்றும் தானே பகுதிகளுக்குள் முடங்கிப்போய்விட்டது. 1980ம் ஆண்டு தலித் மற்றும் பல இடதுசாரி அமைப்புக்கள் பல்கலைக்கழகப் பெயர் மாற்றக் கோரிக்கையை வலியுறுத்தி பற்பல மக்கள் இயக்கங்களை முன்னின்று நடத்தின. ஆனால் தொடர்ந்து ஆட்சிக்கட்டிலில் இருந்த காங்கிரஸ் ஆட்சிகள் அதற்குச் சம்மதிக்கவில்லை. மீண்டும் ஒரு கலவரம் வெடித்துவிடக்கூடும் என்று ஆட்சியாளர்கள் அஞ்சியதுதான் அதற்குக் காரணமாகும்.

1993ம் வருடம் நவம்பர் 25ம் நாளன்று கௌதம் வரக்மெர் என்ற தலித் சிறுத்தைகள் அமைப்பைச் சேர்ந்த ஒரு இளைஞர் மேற்படி பெயர்மாற்றும் கோரிக்கையை வற்புறுத்துவதற்காக தன்னுடைய உயிரை மாய்த்துக்கொண்டார். அவருடைய உயிர்த்தியாகமானது மாநிலமெங்கும் மக்களுடைய உணர்வுகளைத் தட்டியெழுப்பியது. தலித் மற்றும் இடதுசாரி அமைப்புக்கள் ஓரணியாகத் திரண்டெழுந்து மாநிலத்திலுள்ள எல்லா மாவட்டத்தலை நகர்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தினார்கள். எஸ்.எஸ்.கட்சியினர் தாங்களும் ஒரு பந்த் நடத்தி அதன் மூலம் பெயர்மாற்றம் செய்யக்கூடாது என்ற தங்களது கோரிக்கையை வலியுறுத்திட முயன்றார்கள். ஆனால் அவர்களுக்கு மக்களது ஆதரவு கிடைக்கவில்லை. 1994ம் வருடம் ஜனவரி 14ம் நாளன்று மாநில அரசானது பல்கலைக்கழகத்தின் பெயரை மாற்றுவதற்கு இசைந்தது.

மேற்கூறப்பட்ட சம்பவங்களின் வாயிலாக எஸ்.எஸ்.கட்சியினரின் ஜாதீய வெறி உணர்வுகளை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள இயலும். அவர்களது அத்தகைய நடவடிக்கைகள் ஓரளவுக்கு தேர்தல்களில் லாபங்களைப் பெற்றுத் தந்தன என்பது உண்மையே.

## ஒரு பிற்போக்கான மாற்றுத்திட்டம் உதயமாகிறது

1989ம் வருடத்திய மக்களவைத் தேர்தல்களின்போது எஸ்.எஸ்.கட்சியினரும் பாரதீய ஜனதாக் கட்சியும் முதல்முதலாகக் கூட்டணி அமைத்துக் கொண்டு தேர்தலில் போட்டியிட்டன. மகாராஷ்டிர மாநிலத்திலுள்ள 48 மக்களவை இடங்களில் 14 இடங்களில் வெற்றிபெற்றனர். மேற்படி இரண்டு கட்சிகளுக்குமிடையே அடிப்படையானதோர் உடன்பாடு செய்துகொள்ளப்பட்டது. அதாவது மக்களவைத் தேர்தலில் பாரதீய ஜனதாவுக்கு அதிகமான இடங்களும், மாநில சட்டமன்றத் தேர்தலில் எஸ்.எஸ்.கட்சிக்கு அதிக இடங்களும் தரப்படவேண்டும் என்பதுதான் அந்த இரு கட்சிகளுக்குமிடையிலான உடன்பாடாகும். அதன்படி 6 மக்களவை இடங்களில் போட்டியிட்ட எஸ்.எஸ். கட்சிக்கு 4 இடங்களில் வெற்றி கிடைத்தது. 33 இடங்களில் போட்டியிட்ட பாரதீய ஜனதாக் கட்சியினர் 10 இடங்களில் வெற்றிபெற்றனர். அதற்குப்பிறகு நடைபெற்ற தேர்தல்களில் எஸ்.எஸ்.கட்சியினருக்குச் சாதகமான முறையில் இடங்கள் ஒதுக்கப்பட்டன. 1999ம் வருடத்திய நாடாளுமன்றத் தேர்தல்களின்போது எஸ்.எஸ்.கட்சியினர் 22 இடங்களிலும், பாரதீய ஜனதாவினர் 26 இடங்களிலும் போட்டியிட்டனர்.

1989ம் வருடத்திய நாடாளுமன்றத் தேர்தல்களில் காங்கிரஸ் கட்சியானது


படிப்பகம்

www.padippakam.com

28 இடங்களிலும் எஸ்.எஸ்.- பாரதீய ஜனதாக் கூட்டணி 14 இடங்களிலும் வெற்றிபெற்றன. அந்தக் கூட்டணிக்கு 28 சதவீத வாக்குகள் கிடைத்தன. அந்த வெற்றியினால் உற்சாகமடைந்த எஸ்.எஸ். - பாரதீய ஜனதா கூட்டணியானது 1990ம் வருடத்தில் சட்டமன்றத் தேர்தலில் பூரணமான பெரும்பான்மை பெற்றிட வேண்டும் என்று திட்டமிட்டுக் கொண்டு செயல்பட்டது. 1989ம் வருடத்திய நாடாளுமன்றத் தேர்தலில் பாரதீய ஜனதாவினருக்கு தேசிய அளவில் 88 இடங்கள் கிடைத்திருந்தன. அத்தகையதோர் சூழ்நிலையில் மகாராஷ்டிர மாநிலத்திலுள்ள ஆளும் வர்க்கங்களில் ஒரு கணிசமான பகுதியானது. எஸ்.எஸ். - பாரதீய ஜனதாக் கூட்டணிக்குச் சாதகமாகச் செயல் படத் தொடங்கியது. மேற்படி வகுப்புவாதக் கூட்டணிக்கு நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தேர்தல்களின் போது பெருமளவுக்கு பண உதவிகளும் கிடைத்தன.

1990ம் வருடத்திய மாநில சட்டமன்றத் தேர்தல்களில் எஸ்.எஸ். - பாரதீய ஜனதாக் கூட்டணிக்கு 94 இடங்கள் கிடைத்தன. (எஸ்.எஸ்.கட்சிக்கு 52 இடங் கள், பாரதீய ஜனதாவுக்கு 42 இடங்கள்) சரத்பவார் தலைமையிலான காங்கிரஸ் கட்சிக்கு 141 இடங்கள் கிடைத்தன. 288 உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றத்தில் பெரும்பான்மை பெறுவதற்குக் காங்கிரஸ் கட்சிக்கு மேலும் 4 இடங்கள் தேவைப்பட்டது.

அந்தப் பிரச்சனையை போட்டி காங்கிரஸ் மற்றும் சுயேச்சைகளின் உதவியுடன் காங்கிரசார் வெற்றிகரமாகச் சமாளித்தனர். மூன்றாவது அணிக்கு 37 இடங்கள் கிடைத்தன. மேற்கண்ட தேர்தல் முடிவுகளானவை மகாராஷ்டிர மாநில அரசியலில் ஒரு வலதுசாரிப் பிற்போக்கு மாற்று சக்தியானது வளர்ச்சி பெற்று வருவதை எடுத்துரைத்தது.

1991ம் வருடத்திய நாடாளுமன்றத் தேர்தல்கள் ராஜீவ்காந்தியின் படுகொலையை ஒட்டி நடைபெற்றன. காங்கிரஸ் கட்சிக்கு 38 இடங்களும், எஸ்.எஸ். - பாரதீய ஜனதாக் கூட்டணிக்கு 9 இடங்களும் கிடைத்தன. (எஸ்.எஸ்.4, பாரதீய ஜனதா 5) ஆனால் அந்தக் கூட்டணிக்குக் கிடைத்த வாக்குக ளின் சதவீதமானது ஓர்ளவுக்கு அதிகரித்திருந்தது.

## நாதுராம் கோட்ஸே மற்றும் அடால்ப் ஹிட்லருக்குப் புகழ்மாலைகள் சூட்டப்படுதல்

1991ம் வருடம் மே மாதம் மக்களவைத் தேர்தல்களின் போது மேற்கண்ட நடைமுறைகள் பின்பற்றப்பட்டன. அவுரங்காபாத், பூனே, கோல்காபூர் ஆகிய நகரங்களில் தேர்தல் பொதுக்கூட்டங்களில் பேசும்போது மகாத்மா காந்தியைப் படுகொலை செய்த வகுப்புவெறி பிடித்த நாதுராம் விநாயக் கோட்ஸேக்கு பால்தாக்கரே புகழாரம் சூட்டினார். "நாங்கள் (அதாவது எஸ்.எஸ்.கட்சியினர்) நாதுராம் கோட்ஸேயைப் பற்றி மிகவும் பெருமைப் படுகிறோம். நம்முடைய நாடானது 2வது தடவையும் பிரிவினை செய்யப்படு வதிலிருந்து அவர்தான் காப்பாற்றினார். நாதுராம் கோட்ஸே எவரிடமும் கைக்



படிப்பகம்

www.padippakam.com

கூலி வாங்கிக்கொண்டு கொலை செய்யவில்லை. அவர் மகாத்மா காந்தி இந்திய நாட்டுக்குத் துரோகம் செய்வதைக் கண்டு கொதித்தெழுந்தவர் ஆவார். நாடு துண்டாடப்படுவதற்கு, தாம் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை என்றும், அதற்காக, தாம் உயிர்த்தியாகம் செய்யவும் தயார் என்றும் மகாத்மா காந்தி கூறினார். ஆனால் நாடு துண்டாடப்பட்ட சமயத்தில் அவர் எதுவுமே செய்யவில்லை." மேற்கண்ட மாதிரி பால்தாக்கரே பற்பல பொதுக்கூட்டங்களில் பேசினார். 1991ம் வருடம் மே 17ம்நாளன்று பிடிஐ செய்தி நிறுவனமானது மேற்படி பேச்சை வெளியிட்டது. மேலும் சிவசேனைக் கட்சியினரின் ஏடான "சாம்னா" ஏட்டிலும் பால்தாக்கரேயின் மேற்கண்ட உரையானது பிரசுரிக்கப்பட்டிருந்தது.

அதேபோன்று தாக்கரே பல தடவைகளில் தனது பேச்சுக்கள், எழுத்துக்கள் மூலமாக ஜெர்மன் நாஜிகளின் தலைவனான அடால்ப் ஹிட்லரைப் புகழ்ந்து பேசியும், எழுதியும் வந்துள்ளார். ஹிட்லருடைய வாழ்க்கையைப் புகழ்ந்து பால் சாமந்த் என்ற காவியுடைத் தலைவர் ஒரு நூலை எழுதியுள்ளார். தாக்கரே அந்த நூலை எப்போதும் தன் வசம் வைத்திருப்பது வழக்கம். ஹிட்லரை ஒரு மிகப்பெரியதோர் தேசபக்தர் என்று பால்தாக்கரே புகழ்ந்து பேசுவது வழக்கம். அது மட்டுமின்றி பால் சாமந்த் எழுதிய ஹிட்லரின் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகத்தை 200 பிரதிகள் அச்சிட்டுத் தனது கட்சியிலுள்ள தானைத் தளபதிகளுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார்.

## பத்திரிகைகள் மற்றும் நீதித்துறையின் மீது தாக்குதல் தொடுத்தல்

மேற்கூறப்பட்ட மாதிரி ஒரு பாசிஸ்ட் சிந்தனைப் போக்கைக் கொண்டிருந்த எஸ்.எஸ். கட்சியினர் பத்திரிகைகள், நீதித்துறை மற்றும் கலை இலக்கியங்கள் ஆகியவற்றின் மீது தொடர்ந்து தாக்குதல்களைத் தொடுத்து வந்தனர். முதலில் பேனாவின் உதவியால் தாக்குதல் தொடுத்த அவர்கள் பின்னர் கம்புகளையும், கற்களையும் கொண்டு மாறுபட்ட கருத்தோட்டம் உடையவர்களைத் தாக்கத் தொடங்கினார்கள். பால்தாக்கரேயின் மார்மிக் ஏட்டிலும் பி.கே. ஆத்ரேயின் "மராத்தா" என்ற ஏட்டிலும் பல வருடங்களாக வாதப் பிரதிவாதங்கள் நடந்தன. ஆத்ரே மிகச்சிறந்ததோர் எழுத்தாளரும், பேச்சாளருமாவார். மேலும் அவர் சம்யுக்த மகாராஷ்டிரா இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவர். அவர் ஒரு ஜனநாயக எண்ணம் படைத்த அறிஞர். மேலும் அவர் மதச் சார்பின்மையை ஆதரித்துத் தொடர்ந்து குரல் கொடுப்பவருங்கூட. அத்தகைய மகத்தான மக்கள் தலைவரைப் பற்றி பால்தாக்கரே தன்னுடைய மார்மிக் ஏட்டில் "ஆத்ரே ஓர்லியைச் சேர்ந்த ஓநாய்" என்றெல்லாம் மிகவும் கீழ்த் தரமான முறையில் எழுதினார். ஆத்ரேயின் பத்திரிகை அலுவலகமானது ஓர்லியில் இருந்து செயல்பட்டு வந்தது என்பதை நாம் இங்கு குறிப்பிட விரும்புகிறோம். மேலும் பால்தாக்கரே "ஆத்ரே மிகவும் கீழ்த்தரமாகப் பேசக்கூடிய கம்யூனிஸ்ட்டாவார்" என்றும் அவர் மீது வசை பொழிவதுண்டு.



படிப்பகம்

www.padippakam.com

1967ம் வருடத்திய தேர்தல்களின் போது எஸ்.எஸ். குண்டர்கள் ஆத்ரேயின் மீது ஒரு கொலைவெறித் தாக்குதலை நடத்தினார்கள். அவர் மயிரிழையில் உயிர் தப்பினார்.

இவ்வாறு எஸ்.எஸ். கட்சியினரின் சட்டவிரோத நடவடிக்கைகளைப் பற்றி எவ்வளவோ சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால் இங்கு அவர்களது வன்முறை வெறியாட்டங்களில் ஒரு சிலவற்றை மட்டும் எடுத்துக் கூறிட விரும்புகிறோம்.

1991 அக்டோபர் மாதத்தில் எஸ்.எஸ். குண்டர்கள் "மகா நகர்" என்ற மராத்தி ஏட்டின் அலுவலகத்தைத் தாக்கினார்கள். எஸ்.எஸ். கட்சியினர் மும்பை வாங்க்டே விளையாட்டு மைதானத்தில் உள்ள கிரிக்கெட் மைதானத்தை நாசப்படுத்தி இந்தியா - பாகிஸ்தான் கிரிக்கெட் விளையாட்டை நடக்க விடாமற் செய்ததைக் கண்டித்து "மகா நகர்" ஏட்டில் எழுதியதால்தான் மேற்படி பத்திரிகை அலுவலகத்தைத் தாக்கினார்கள். மேற்கூறப்பட்ட தாக்குதலைக் கண்டித்து அனைத்துப் பத்திரிகையாளர்களும் தெருவிலிறங்கி ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். அப்போது எஸ்.எஸ். அடியாட்கள் "நவபாரத் டைம்ஸ்" ஏட்டைச் சேர்ந்த மணிமாலாவைக் கடப்பாரையால் தாக்கி அவரது மண்டையில் படுகாயம் ஏற்படுத்தினார்கள். அதேபோன்று எஸ்.எஸ். கட்சியினரின் சட்டவிரோதச் செயல்களைத் தொலைக்காட்சிப் பேட்டியின் போது விமர்சனம் செய்த மற்றொரு பெண் பத்திரிகையாளரைப் பற்றி ஒழுக்கக் கேடான முறையில் சாமனா என்ற எஸ்.எஸ். ஏட்டில் தலையங்கமே எழுதினார்கள்.

1993ம் வருடம் "மகா நகர்" பத்திரிகையாசிரியரான நிகில் வாகலே ஒரு கருத்தரங்கில் உரையாற்றிக் கொண்டிருந்தபோது அவரைத் தாக்கினார்கள். எஸ்.எஸ். கட்சியினரின் மேற்கூறப்பட்ட அடாவடித்தனங்களைக் கண்டித்து மும்பையிலுள்ள எஸ்.எஸ். அலுவலகத்துக்கு முன்பாக பெரியதோர் தர்ணா நடத்தப்பட்டது. அந்தத் தர்ணாப் போராட்டத்தில் நிகில் சக்ரவர்த்தி, என்.ராம், பிரபாஷ் ஜோஷி போன்ற அனைத்திந்தியப் பத்திரிகையாளர்களும் பங்கேற்றார்கள். மேலும் பல அறிவுஜீவிகளும், இடதுசாரித் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

ஆறு மாதங்கட்குப் பின்னர் 1994ம் வருடம் பிப்ரவரி மாதத்தில் பால் தாக்கரேயின் நேரடித் தலைமையில் திரண்ட எஸ்.எஸ். அடியாட்கள் அவுரங்காபாத் நகரில் பன்னிரண்டுக்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்களை மிருகத்தனமாகத் தாக்கினார்கள். அந்தத் தாக்குதலை முன்னின்று நடத்தியவர்களில் மனோகர் ஜோஷியும் ஒருவர். பிறிதொரு சமயத்தில் "லோகமாதா" என்ற மராத்தி தினப் பத்திரிகை அலுவலகமானது எஸ்.எஸ். அடியாட்களின் தாக்குதலுக்கு உள்ளானது. இவையெல்லாம் போக "மார்மிக்",



படிப்பகம்

www.padippakam.com
"சாமனா" போன்ற எஸ்.எஸ். ஏடுகளில் தொடர்ந்து ஏனைய பத்திரிகையாளர் களை மிகவும் கொச்சையான முறையில் எழுதி வந்துள்ளனர்.

அதேபோன்று நீதித் துறையானது எஸ்.எஸ். கட்சியினரைக் கண்டனஞ் செய்து தீர்ப்பு வழங்குகின்ற சமயங்களிலெல்லாம் பால்தாக்கரே நீதித்துறை யைப் பகிரங்கமாகத் தாக்கித் தனது பத்திரிகைகளில் அறிக்கைகள் விடுவது, தலையங்கங்கள் எழுதுவது போன்ற நடைமுறைகளைக் கையாண்டு வந்துள்ளார். உதாரணமாக 1991ல் மகாராஷ்டிர உயர்நீதிமன்றமானது ஒருசில எஸ்.எஸ். மற்றும் பாரதீய ஜனதா எம்.எல்.ஏக்களைப் பதவி நீக்கும் வகை யிலான ஒரு தீர்ப்பை வழங்கிய சமயத்தில் பால்தாக்கரே, நீதித்துறையானது "பாரபட்சமாக நடந்து கொள்வதாகக்" கூறி அத்துறையைப் பற்றி மிகவும் கேவலமான சொற்களால் வசைமாரி பொழிந்திருந்தார். அவரது மேற்கூறப்பட்ட பேச்சானது "இண்டிபெண்டண்ட்" என்றதோர் தினசரிப் பத்திரிகையில் வெளியாகியிருந்தது. மேலும் நீதிமன்றத்துக்குக் கடுமையான எச்சரிக்கைகளை விடுத்திருந்தார். (டைம்ஸ் ஆப் இந்தியா, 20.4.1991)

மேலும் இலக்கியத் துறையிலும், கலைத்துறையிலும் ஈடுபட்டுள்ள பற்பல முக்கியமான நபர்களைத் தாக்குவதென்பது எஸ்.எஸ். கட்சியினரின் வாடிக்கையானதோர் நடைமுறையாகவே விளங்கி வந்துள்ளது.

## வகுப்புவெறி பிடித்த எஸ்.எஸ். அமைப்புக்குள்ளே நடந்தேறிய கலகங்கள்

1991ம் வருடம் நாகபுரியில் மாநில சட்டமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது எஸ்.எஸ். கட்சியின் 17 எம்எல்ஏக்கள் சகான் பூஜ்பால் தலைமையில் காங்கிரஸ் கட்சிக்குத் தாவி விட்டனர். அவர்களது எண்ணிக்கையானது எஸ்.எஸ். கட்சியின் மொத்த எம்எல்ஏக்களில் மூன்றில் ஒரு பகுதியாக இருந்ததால் கட்சித் தாவல் சட்டத்தின்படி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இயலவில்லை. எஸ்.எஸ். கட்சியின் 3வது பெரிய தலைவர் சகான் பூஜ்பால் என்பதை நாம் இங்கு குறிப்பிட விரும்புகிறோம். அவர் மகாராஷ்டிர மாநிலத்தின் கிராமப்புறங்க ளில் சிவசேனைக் கட்சியைக் கட்டி வளர்த்தவராவார். அவர் எஸ்.எஸ். கட்சியை விட்டு வெளியேறியதானது அந்தக் கட்சிக்கு மிகப்பெரிய பின் னடைவாகும். பால்தாக்கரே மண்டல் கமிஷன் பிரச்சனையில் பிற் படுத்தப்பட்டோருக்கு விரோதமாகச் செயல்பட்டதால் சகான் பூஜ்பால் அக் கட்சியை விட்டு வெளியேறினார். மேலும் அவருக்குத் தலைமையின் மீது பற்பல தனிப்பட்ட வெறுப்புக்களும் உண்டு.

மேற்கூறப்பட்ட நிகழ்ச்சிக்குப் பிறகு பால்தாக்கரே தனது கட்சியிலுள்ள ஏனைய தலைவர்களைப் பற்றியும் சந்தேகப்படத் தொடங்கினார். அதன் எதிரொலியாக அன்று முதற்கொண்டு கட்சியின் உயர்மட்டப் பதவிகளில்


படிப்பகம்

www.padippakam.com

தனது குடும்ப வாரிசுகளை அமர்த்தத் தொடங்கிவிட்டார். மேலும் கட்சிக்கு ஒரு அதிர்ச்சி வைத்தியம் கொடுப்பதற்காக பால்தாக்கரே, தான் கட்சியிலிருந்து ராஜினாமாச் செய்யப் போவதாக 1992ம் வருடம் ஜூலை மாதத்தில் ஒரு அறிவிப்பை வெளியிட்டார். உடனே பல்லாயிரக்கணக்கான எஸ்.எஸ். தொண்டர்கள் மிகப் பிரம்மாண்டமானதோர் பேரணியை நடத்தி "பால்தாக்கரே ராஜினாமா செய்யவே கூடாது" என்று வேண்டிக் கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றினார்கள். ஆக, பால்தாக்கரேயின் அந்த ராஜினாமா நாடகமானது எதிர்பார்த்த பலனை அளித்தது! அதன் மூலம் கட்சிக்குள் தனது இடத்தை உறுதிப்படுத்திக் கொண்ட அவர் வாரிசு அரசியலைத் துணிந்து செயல்படுத்தத் தொடங்கினார்.

## அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான முயற்சிகள் மற்றும் மும்பையில் நடைபெற்ற பயங்கரக் கலவரங்கள்

1992ம் வருடத்துக்குப் பின்னர் எஸ்.எஸ். கட்சியும் பாரதீய ஜனதாக் கட்சியும் வியக்கத்தக்க வகையில் வளர்ச்சியடைந்தன. அதற்கு மூன்று அடிப்படையான காரணங்கள் உண்டு.

1. மும்பை மற்றும் மகாராஷ்டிரத்தை உலுக்கிய படுபயங்கரமான கலவரங்கள். பாபர் மசூதியானது தகர்க்கப்பட்ட பின்னர் மேற்படிக் கலவரங்கள் வெடித்தன. 1993ம் வருடம் மார்ச் மாதத்தில் பம்பாய் நகரின் பல பகுதிகளில் குண்டுகள் வெடித்தன. அதன் விளைவாகப் பல அப்பாவிப் பொது மக்கள் பலியானார்கள்.
2. 1993 - 95ம் வருடங்களில் சரத்பவார் தலைமையில் செயல்பட்டு வந்த மாநிலக் காங்கிரஸ் ஆட்சியானது சகல துறைகளிலும் திவாலாகிக் கொண்டிருந்தது.
3. மேலும் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு காங்கிரஸ் கட்சிக்குள் உட்கட்சி சண்டைகளும், கோஷ்டிப் பூசல்களும் தலைவிரித்தாடின.

1992ம் வருடம் டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற மும்பை கலவரங்கள் நம்முடைய நாடு விடுதலையடைந்த பின்னர் நடைபெற்ற மிகப் பயங்கரமானதோர் வகுப்புக் கலவரமாகும்.

எஸ்.எஸ். கட்சியும், சங் பரிவார் அமைப்புகளும் அணி சேர்ந்துகொண்டு திட்டமிட்ட ரீதியில் சிறுபான்மை மக்களின் மீது தங்களது வெறிப் பிரச்சாரங்களைப் பரப்பின. அவர்கள் வெறும் பிரச்சாரம் மட்டுமின்றி அம்மக்கள் மீது நேரடியாகத் தாக்குதல்களையும் தொடுத்தனர். அவர்கள் அன்று அரங்கேற்றிய வெறித்தனமான தாக்குதலானவை ஜெர்மானிய யூதர்கள் மீது நாஜிகள் நடத்திய மிகவும் ஈனத்தனமான நடவடிக்கைகளைப் போன்றவையாகும். எஸ்.எஸ். கட்சியிலுள்ள ஆண் குண்டர்கள் மட்டுமின்றி



படிப்பகம்

www.padippakam.com

அந்தக் கட்சியிலிருந்த பெண்களுங்கூடச் சேர்ந்து நின்று சிறுபான்மை மக்களைத் தாக்கினார்கள். அதுசமயம் மாநிலத்திலும், மத்தியிலும் ஆட்சியிலிருந்த காங்கிரஸ் அரசாங்கங்கள் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக எந்த ஒரு நடவடிக்கையையும் எடுக்காமல் ஒருவித அலட்சிய மனப்பான்மையுடன் நடந்து கொண்டன. இது மிகவும் வேதனைப்பட வேண்டிய அம்சமாகும். மேலும் மும்பை கலவரத்தின்போது காவல்துறையினர், தாதாக் கும்பல்கள், நகரின் பெருந்தனக்காரர்கள், பல்வேறு கிரிமினல் குற்றவாளிகள் ஆகிய அனைவருமே அணிதிரண்டு நின்று சிறுபான்மை மக்களைக் கொடுமைப் படுத்தினார்கள். மேற்கூறப்பட்ட காரணங்களால் மும்பை கலவரமானது பாமர மக்களுக்கு மிகப்பெரிய சேதங்களை ஏற்படுத்தியது.

இத்தகைய சூழ்நிலைகளின் விளைவாக மகாராஷ்டிர மாநிலமெங்கும் வகுப்புத் துவேஷங்கள் கொழுந்து விட்டெரிந்தன. அத்தகைய பின்னணியைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு எஸ்.எஸ். கட்சியும், பாரதீய ஜனதாவும் 1995ம் வருடத்திய சட்டமன்றத் தேர்தல்களில் 138 இடங்களைக் கைப்பற்றினார்கள். அறுதிப் பெரும்பான்மை கிடைப்பதற்கு அவர்களுக்கு 7 இடங்கள் மட்டுமே தேவைப்பட்டன. அவர்களுக்குக் காங்கிரஸ் கட்சியிலுள்ள கலகக் கோஷ்டியைச் சேர்ந்த 40 சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஆதரவு கிடைத்தது. 171 இடங்களில் போட்டியிட்ட சிவசேனைக் கட்சியானது 73 இடங்களில் வென்றது. 117 இடங்களில் போட்டியிட்ட பாரதீய ஜனதாக் கட்சியானது 65 இடங்களில் வெற்றி பெற்றது. செல்லாக்காசாகிக் கொண்டிருந்த காங்கிரஸ் கட்சிக்கு வெறும் 80 இடங்கள் மட்டுமே கிடைத்தன. மூன்றாவது அணிக்கு 23 இடங்கள்தான் கிடைத்தன.

1995ம் வருடத்தில் மார்ச் 14ம் நாளன்று எஸ்.எஸ். கட்சியும், பாரதீய ஜனதாவும் இணைந்து ஒரு கூட்டணி அரசை அமைத்தன. எஸ்.எஸ். கட்சியைச் சேர்ந்த மனோகர் ஜோஷி முதலமைச்சராகவும், பாரதீய ஜனதாவைச் சேர்ந்த கோபிநாத் முண்டே உதவி முதலமைச்சராகவும் பதவியேற்றனர். 30 வருட காலமாகப் பல்வேறு தகிடு தத்தங்களைச் செய்து இந்த அரைப் பாசிஸ்ட் இயக்கமானது மகாராஷ்டிர மாநிலத்தில் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியது. மேற்படி இரண்டு கூட்டணிக் கட்சிகளுமே தத்துவார்த்த அடிப்படையில் பாசிஸ்ட் கண்ணோட்டமுள்ளவைதான். சரியாக அன்றிலிருந்து மூன்றாண்டுகட்குப் பின்னர் அவர்கள் மத்திய அரசிலும் அரியணை ஏறினார்கள்.

## நான்காவது கட்டம் 1995–1999
## ஆட்சியதிகாரத்திலிருந்த ஆண்டுகள்

சிவசேனை-பாரதீய ஜனதா கூட்டணி அரசு மனோகர் ஜோஷியின் தலைமையில் அமைந்தது. பதவியேற்றவுடனேயே அந்தக் கூட்டணி



படிப்பகம்

www.padippakam.com

அரசானது தனது வர்க்கச் சார்புக்கு ஏற்ற வகையில் தாங்கள் நரசிம்மராவ் தலைமையின் கீழ் இருந்த மத்தியக் காங்கிரஸ் ஆட்சியாளர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கையைப் பரிபூரணமாக ஆதரிப்பதாக அறிக்கை வெளியிட்டனர். காங்கிரஸ் ஆட்சியினால் அமுலாக்கப்பட்ட தனியார்மயம், தாராளமயம் மற்றும் உலக மயம் ஆகிய பொருளாதாரக் கோட்பாட்டை மகாராஷ்டிரா மாநிலத்தில் பதவிக்கு வந்த் சிவசேனை-பாரதீய ஜனதாக் கூட்டணி ஆட்சியானது முழுமையாக ஏற்றுக்கொண்டது. தேர்தல் காலத்தில் மேற்படி கூட்டணியானது மகாராஷ்டிர மக்களுக்கு 500க்கும் மேற்பட்ட வாக்குறுதிகளை அளித்திருந்தது. அவர்கள் தங்களது பதவிக் காலத்தில் அந்த வாக்குறுதிகளையெல்லாம் செயல்படுத்த முடியாமல் மிகவும் திணறினார்கள். ஆனால் புதிய பொருளாதாரக் கொள்கையை அமுல்படுத்துவோம் என்ற இந்த ஒரு வாக்குறுதியை மட்டும் ஒரு எழுத்துக்கூட பிசகாமல் முழுமையாகச் செயல்படுத்தினார்கள்.

## எண்ணிலடங்கா பொய் வாக்குறுதிகள்

சிவசேனைக் கட்சி - பாரதீய ஜனதா கூட்டணி அரசாங்கம் பதவிக்கு வந்த முதல் வருடத்திலேயே மகாராஷ்டிர மக்களுக்கு 252 வெவ்வேறு விதமான வாக்குறுதிகளை அளித்தது. அந்த வாக்குறுதிகளைப் பற்றிக் கேலியாகக் குறிப்பிட்ட ஒரு மராத்திய தினசரியானது பின்வருமாறு எழுதியது:

"எஸ்.எஸ். - பாஜக கூட்டணி இத்தனை வாக்குறுதிகளை அள்ளி வீசியதற்காக அவர்களுக்கு கின்னஸ் புத்தகத்தில் இடமளிக்கலாம்!" அவர்களது மேற்கூறப்பட்ட வாக்குறுதிகளில் அவர்களால் பெரிதும் விளம்பரப்படுத்தப்பட்ட ஐந்து வாக்குறுதிகளது கதி என்னவாயிற்று என்பதைப்பற்றி மட்டும் நாம் இங்கு ஆராய்வோமாக.

முதலாவதாக 27 லட்சம் வேலை வாய்ப்புக்களை உருவாக்கிடப்போவதாக அறிவித்தார்கள். பிறகு அந்த எண்ணிக்கையானது 32 லட்சமாக உயர்த்தப்பட்டது. அவர்கள் பதவியேற்ற சமயத்தில் 1995ம் வருடம் மார்ச் மாதத்தையொட்டி மகாராஷ்டிர மாநிலத்தில் 34.64 லட்சம் பேர் வேலை கேட்டு வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்திருந்தனர். 1999ம் வருடம் அக்டோபரில் அவர்களது கூட்டணி ஆட்சியானது பதவி விலகிய நேரத்தில் மாநிலத்தில் வேலை இல்லாமல் இருந்தவர்கள் தொகையானது 42.27 லட்சமாக உயர்ந்திருந்தது. எஸ்.எஸ்.கட்சியின் முக்கிய தலைவரான ராஜ் தாக்கரே தங்கள் கட்சியை விளம்பரப்படுத்துவதற்காக " சிவ உத்யோக் சேனை" என்றதோர் அமைப்பை உருவாக்கி அதன் சார்பில் மைக்கேல் ஜாக்சன் போன்றவர்களது கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்திருந்தார். (இவர்கள் இந்தியக் கலாச்சாரத்தை வளர்க்கப்போவதாக வேறு தம்பட்டமடித்துக் கொண்டிருந்தனர்). ஆனால் அந்தக் கலை நிகழ்ச்சிகளின் விளைவாகப் பெரிய அளவில் நஷ்டங்கள் ஏற்பட்டதுதான் மிச்சம். வேலையற்ற ஏழை,



படிப்பகம்

www.padippakam.com
எளிய இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்களை உருவாக்கித் தருவதாகக் கூறிக்கொண்டு அவர்கள் பெருமளவில் லஞ்ச ஊழல்களுக்கு வழிவகைகளை உருவாக்கினார்கள்.

இரண்டாவதாக மும்பை நகரிலுள்ள குடிசைவாழ் ஏழைகளுக்கு நிரந்தரமான வீடுகள் கட்டித்தரப்போவதாக உறுதியளித்தனர். இந்தத் திட்டமானது கட்டிடத்துறையில் ஈடுபட்டுள்ள பெரிய பெரிய காண்ட்ராக்டர்கள் கொள்ளையடிப்பதற்குத்தான் வழி வகுத்தது. அந்தக் காண்ட்ராக்டர்கள் ஒரு சில குடிசைவாசிகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்துவிட்டு மீதியுள்ள காலி மனைகளை விற்றுக் கோடி கோடியாகச் சம்பாதித்திட வேண்டும் என்று திட்டங்கள் தீட்டப்பட்டன. ஆனால் திடீரென்று மும்பை மற்றும் அதன் சுற்று வட்டாரங்களில் மனைகளின் விலைகள் வீழ்ச்சியடைந்ததால் அவர்களது திட்டங்கள் பலிக்கவில்லை. கட்டிடக் காண்ட்ராக்டர்கள் காணாமலேயே போய்விட்டனர். நான்காண்டு காலத்தில் வெறும் 2000 வீடுகள் மட்டுமே கட்டி முடிக்கப்பட்டன. மேற்படி 2000 வீடுகள் கட்டுவதற்கான திட்டங்கள் கூட முந்தையக் காங்கிரஸ் ஆட்சி காலத்தில் உருவாக்கப்பட்டவைதான் என்பதை நாம் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். ஆகக்கூடி 40லட்சம் பேர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதாகக் கூறிய அவர்களால் வெறும் 10,000 பேர்களுக்கு மட்டுமே வீட்டு வசதி செய்துதர முடிந்தது.

அவர்கள் மற்றும் ஒரு தேர்தல் வாக்குறுதியை அளித்திருந்தனர். அதாவது மாநிலத்திலுள்ள சகல பகுதி மக்களுக்கும் ஒரு ரூபாய்க்கு ஒரு தட்டு நிறைய உணவு வழங்கப்படும் என்று உறுதியளித்திருந்தனர். அதற்கான ஜுங்கா பாகர் உணவு விடுதிகள் மாநிலமெங்கும் நிறுவப்படுவதற்காக குறைந்த விலைக்கு மனைகள் ஒதுக்கப்பட்டன. முக்கியமாக எஸ்.எஸ். மற்றும் பாரதீய ஜனதா கட்சிக்காரர்களுக்கே மேற்படி இடங்கள் ஒதுக்கப்பட்டன. மேலும் மேற்படி திட்டத்துக்காக அரசாங்க உதவித்தொகைகளும் அளிக்கப்பட்டன. ஆனால் அந்த உணவு விடுதிகள் ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் மட்டுமே செயல்பட்டன. மற்ற நேரங்களில் அந்த விடுதிகளில் லாபகரமான விலைகளில் இதர தின்பண்டங்களும், ஒரு சில கடைகளில் மதுவகைகளும் விற்கப்பட்டன.

இவ்வாறு அந்தத் திட்டம் வெறும் மோசடி வேலையாகச் சுருங்கிப் போயிற்று. நான்கு வருடங்களுக்குப் பின்னர் புதிய எஸ்.எஸ். முதல் அமைச்சரான நாராயண ராணேக்கு மேற்படி உணவு விடுதித் திட்டத்தை ரத்து செய்தாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆனால் அந்தத் திட்டத்துக்காகக் கொடுக்கப்பட்ட மனைகளை எஸ்.எஸ்.மற்றும் பாரதீய ஜனதா கட்சிக்காரர்கள் அபகரித்துக்கொண்டார்கள். அவர்கள் அத்தகைய ஒரு நோக்கத்துடன்தான் மேற்படி உணவு விடுதித் திட்டத்தைத் தொடங்கினார்கள் போலும்.

மூன்றாவதாக அவர்கள் ஒரு வாக்குறுதியை அளித்திருந்தனர். ரேஷன்


படிப்பகம்

www.padippakam.com

கார்டுகளில் ஐந்தாண்டு காலத்துக்கு ஐந்து வகையான, அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் குறைந்தவிலைக்கு விற்கப்படும் என்று அவர்கள் அறிவித்தனர். அதற்கான விலைப்பட்டியல்களெல்லாம் ரேஷன் கடைகளுக்கு முன்பாகத் தொங்கவிடப்பட்டன. ஆனால் நடந்ததென்ன தெரியுமா? அந்த 5 வகைப் பொருட்களுடன் அரிசி, கோதுமை, சீனி, மண்ணெண்ணெய் போன்ற பொருட்களும் ரேஷன் கடைகளிலிருந்து மாயமாய் மறைந்தே போயின. மக்கள் மேற்படி பொருட்களையெல்லாம் தனியார் கடைகளில் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியதோர் நிர்ப்பந்தம் உருவாயிற்று. மேலும் வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழ்பவர்களது பட்டியலைத் தயாரிப்பதிலும் பற்பல மோசடி வேலைகள் நடத்தப்பட்டு பற்பல ஏழைக் குடும்பங்களுடைய பெயர்கள் மேற்படி பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுவிட்டன.

## என்ரான் முன் முழுமையாகச் சரணாகதி அடைதல்

மேற்கூறப்பட்ட நான்கு வாக்குறுதிகளை அவர்கள் நிறைவேற்றத் தவறினார்கள். அதையும் விட மிக முக்கியமானதோர் வாக்குறுதியையும் அவர்கள் நிறைவேற்றவில்லை என்பது மிகவும் வெட்கப்பட வேண்டியதோர் சங்கதியாகும். அதன் காரணமாக நாம் நீண்ட நெடுங்காலத்துக்கு மிகவும் நாசகரமான விளைவுகளைச் சந்திக்க வேண்டி வரும். மேலும் அந்த நடவடிக்கையின் மூலமாக எஸ்.எஸ்.- பாரதீய ஜனதா ஆட்சியானது ஒரு ஏகாதிபத்தியச் சார்புடன் கூடிய மக்கள் விரோத அரசாங்கம் என்பதும் தெட்டத் தெளிவாக நிரூபணமாகிவிட்டது.

அந்த 5வது வாக்குறுதிதான் என்ன? தாங்கள் பதவிக்கு வந்த மறு வினாடியே தபோலில் செயல்பட்டு வரும் என்ரான் மின் திட்டத்தை அரபிக்கடலில் வீசியெறிவோம் என்று அவர்கள் மிகவும் ஆவேசமாக தேர்தல் மேடைகளில் முழங்கினார்கள். ஆனால் பதவியேற்றதுமே என்ரான் நிறுவனமானது பெருமளவுக்கு கல்விச் செலவுகளைத் தர ஒப்புக்கொண்டமையால் அவர்களுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளில் இறங்கினார்கள். காங்கிரசைச் சேர்ந்த ஷரத் பவார் முதலமைச்சராக இருந்த சமயத்திலும் கல்விச் செலவுகளுக்காகக் கணிசமான தொகைகள் பெற வாய்ப்புண்டு என்றுதான் சொல்லப்பட்டது. எஸ்.எஸ்.-பாரதீய ஜனதா ஆட்சியாளர்கள் மீண்டும் பேச்சுவார்த்தைகள் நடத்திய பின்னர் என்ரானின் முதல் கட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டு 1999ம் வருடம் மே மாதத்தில் அது செயல்படத் தொடங்கியது. அந்தத் திட்டத்தின் 2வது பகுதியானது எஸ்.எஸ். - பாரதீய ஜனதா கூட்டணி அரசின் ஆட்சிக்காலத்தில் முழுமையான வகையில் உருவாக்கப்பட்டதோர் திட்டமாகும். அந்தத் திட்டத்துக்கு 13 நாட்கள் பிரதமராயிருந்த அடல் பிகாரி வாஜ்பாய் அவசர அவசரமாக மத்திய அரசின் ஒப்புதலையும் அளித்தார். ஆக, அவர்களுடைய



படிப்பகம்

www.padippakam.com

மேற்படி 5வது வாக்குறுதியும் காற்றில் பறக்கவிடப்பட்டது. அதன் மூலமாக எஸ்.எஸ்.-பாரதீய ஜனதாவினர் தாங்கள் ஏகாதிபத்தியத்துக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் செல்லப்பிள்ளைகள்தான் என்பதைத் தெளிவாக நிரூபித்துவிட்டனர்.

என்ரான் திட்டம் சம்பந்தப்பட்ட முழு விவரங்களுக்குள்ளும் நாம் புகுந்து ஆராய்ந்திட விரும்பவில்லை. ஒரே ஒரு அம்சத்தைப் பற்றி மட்டும் எடுத்துரைத்தால் போதும் என்று கருதுகிறோம். முந்தைய காங்கிரஸ் ஆட்சி காலத்தில் விநியோகிக்கப்படும் மின்சாரத்துக்கு யூனிட் ஒன்றுக்கு ரூ. 2.40 என்று ஒப்பந்தம் செய்யப்பட்டது. எஸ்.எஸ்.-பாரதீய ஜனதா ஆட்சியின் போது அதை யூனிட்டுக்கு ரூ. 1.86ஆகக் குறைத்துவிட்டதாக மாநில அரசாங்கம் மிகவும் ஆரவாரமாக அறிவித்தது.

ஆனால் திட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு மின் கட்டணமானது ஒரு யூனிட்டுக்கு ரூ. 4.76ஆக எகிறியது. பின்னர் ஏற்பட்ட நஷ்டங்களைச் சரிக்கட்டுவதற்காக மீண்டும் மேற்படி தொகையானது யூனிட்டுக்கு ரூ. 6.53 ஆக மேலும் அதிகரிக்கப்பட்டது. மகாராஷ்டிர மாநில மின் வாரியமானது அந்த ஆண்டில் 16 ஆயிரத்து 435 பில்லியன் யூனிட் மின்சாரத்தை வாங்கும். அதற்கு அவர்கள் என்ரான் நிறுவனத்துக்கு 3798 கோடி ரூபாய் கொடுக்க வேண்டியதாயிருக்கும். என்ரானின் 2வது திட்டம் நடைமுறைக்கு வரும்போது வருடாந்திரச் செலவினமானது ரூ. 7000 கோடியாக உயரும். மேலும் ஒப்பந்தப்படி மகாராஷ்டிர மின் வாரியமானது தன்னுடைய சொந்த மின் உற்பத்தி நிலையங்களை மூடியாக வேண்டும். ஆக, என்ரான் திட்டத்தின் விளைவாக மின் கட்டணமானது மிகவும் அதிகமாக உயர்ந்தது மட்டுமன்றி, அதன் விளைவாக மகாராஷ்டிர மாநிலத்தில் தொழில்கள், விவசாயம் ஆகியவையும் பெரிதும் பாதிக்கப்பட்டு விட்டன.

## தொழில்களைத் தனியார் மயமாக்குவதைத் தீவிரப்படுத்துதல், தொழிலாளி வர்க்கத்தின் மீதான தாக்குதல்கள்

எஸ்.எஸ். -பாரதீய ஜனதா ஆட்சிக் காலத்தில் மின் கட்டணத்தை மட்டுமல்லாமல் மற்ற சகல பொருட்களது விலைகளையும் பெருமளவுக்கு உயர்த்தினார்கள். பெட்ரோல், டீசல் மீதான வரிகள் உயர்த்தப்பட்டன, அதனால் பேருந்து மற்றும் ஆட்டோ ரிக்ஷா கட்டணங்கள் உயர்ந்தன. ஏனைய பொருட்களின் விலைகளும் உயர்ந்தன. வீட்டு வாடகை, தண்ணீர் வரி, பாசனச் செலவுகள் யாவும் மிகவும் அதிகரித்தன. பள்ளி நோட்டுக்கள் கூட வரி உயர்விலிருந்து தப்பவில்லை. அதே சமயத்தில் ஐந்து நட்சத்திர உணவு விடுதிகள் மீதான வரிகள் குறைக்கப்பட்டன. மகாராஷ்டிர மாநில முதல்வரே ஒரு ஐந்து நட்சத்திர உணவு விடுதியின் உரிமையாளராக இருந்தார்!

எஸ்.எஸ். -பாரதீய ஜனதா ஆட்சியானது வேகவேகமாகத் தொழில்களைத் தனியார் மயமாக்கியது. அந்த அம்சத்தில் அவர்களது ஆட்சியானது முந்திய



படிப்பகம்

www.padippakam.com

ஷரத் பவாரின் காங்கிரஸ் ஆட்சியினுடைய ஒரு தொடர்ச்சியாகவே செயல்பட்டது. நீர்ப்பாசனத் திட்டங்களும் தனியாருக்குத் தாரை வார்க்கப்பட்டன. மற்றும் நெடுஞ்சாலைகள், மேம்பாலங்கள், பாலங்கள் முதலியவைகளும் தனியார்வசம் அளிக்கப்பட்டன. அவை சம்பந்தப்பட்ட பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. அவற்றில் பல கோடி ரூபாய் ஊழல் நடைபெற்றது. மும்பைக்கும் பூனேக்கும் இடையிலான ஒரு நெடுஞ்சாலையை உருவாக்கிட 1500 கோடி ரூபாய் தனியாருக்கு ஒதுக்கப்பட்டது. மும்பை நகரில் மட்டும் 55 மேம்பாலங்கள் கட்டும் பணிகள் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டது. மற்றும் ஆட்சியாளர்கள் போக்குவரத்து, சுகாதாரம், கல்வி ஆகிய துறைகளிலும் தனியார் ஆதிக்கம் பரவிடுவதற்கு வழிவகைகள் செய்து கொடுத்தனர்.

கல்வி தனியார் மயமாக்கப்பட்டது மட்டுமன்றி அது ஒரு வியாபாரமாக வும் மாற்றப்பட்டுவிட்டது. மேற்படி பணியை முதன் முதலாகத் தொடங்கிய வர்கள் முந்திய காங்கிரஸ் ஆட்சியாளர்கள்தான். அதன் விளைவாகக் கல்வித் தரமானது மிகவும் குறையலாயிற்று மற்றும் ஊழல்களும் பெருகின. போலிக் கல்விச் சான்றிதழ்களும், போலி மதிப்பெண் பட்டியல்களும் புற்றீசல்கள் போல் மாநிலமெங்கும் பெருகத் தொடங்கின. எஸ்.எஸ்., பாரதீய ஜனதா மற்றும் தேசியவாதக் காங்கிரஸ் ஆகிய சகல கட்சிகளுக்கும் மேற்படி ஊழல்களில் பெரும் பங்கு உண்டு. மாநிலமெங்கும் தனியார் கல்விப் பயிற்சிக் கூடங்கள் யாவும் லாபகரமான அமைப்புக்களாக மாறின. மேலும் ஆர்எஸ்எஸ் அமைப்புக்கள் கல்வித்துறையில் நுழையத் தொடங்கின.

எஸ்.எஸ். -பாரதீய ஜனதா ஆட்சிக்காலத்தில் மகாராஷ்டிர மாநிலத்திலுள்ள தொழிலாளி வர்க்கமானது பலத்த தாக்குதல்களுக்கு உட்படுத்தப்பட்டது. அவர்களது வேலை வாய்ப்புக்கள் பறிபோயின, மேலும் அவர்களுடைய வாழ்க்கை நிலைமைகள் மிகவும் சீர்கேடடைந்தன. தொழில் பின்னடைவு மற்றும் தனியார்மயம் ஆகியவற்றின் விளைவாக மாநிலத்திலுள்ள பற்பல ஆலைகளும், தொழிற்கூடங்களும் மூடப்பட்டன. மேலும் பல இடங்களில் அதிக அளவுக்கு ஆட்குறைப்புக்கள் நடைபெற்றன. விருப்ப ஓய்வுத் திட்டங் கள் பரவலாக அமுலாக்கப்பட்டன. சுருக்கமாகச் சொன்னால் மிகப்பெரிய அளவுக்கு வேலையின்மை பரவியது. மாநில அரசின் அனுமதியுடன் பஞ்சாலைகளுக்குச் சொந்தமான பல நிலங்கள் விற்கப்பட்டன. அமைப்பு ரீதியாக அணிதிரட்டப்படாத தொழிலாளிகளும் மிகவும் பாதிக்கப்பட்டனர். அவர்களது ஊதியங்கள் மேலும் மேலும் குறைக்கப்பட்டன. அவர்களுக்குச் சங்கம் வைக்கும் உரிமைகள் மறுக்கப்பட்டன, அவர்களது உரிமைப் போராட்டங்கள் ஈவு இரக்கமற்றவகையில் ஒடுக்கப்பட்டன. அத்தகைய அடக்குமுறைகளை நாசிக், நாகபுரி போன்ற பற்பல நகர்களில் செயல்பட்டு வந்த சிஐடியு சங்கங்கள் எதிர்கொள்ள நேர்ந்தன.



படிப்பகம்

www.padippakam.com

## விவசாயிகள் தற்கொலைகள், விவசாயத்துறையில் நெருக்கடிகள்

எஸ்.எஸ். - பாரதீய ஜனதாக் கூட்டணியின் ஆட்சிக்காலத்தில் மகாராஷ்டிர மாநிலத்தில் விவசாயத் துறையானது முன்னெப்போதும் இல்லாத வகையில் சீர்குலைந்தது. அங்கு 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர். முக்கியமாக விதர்ப்பா, மரத்வாடா பகுதிகளிலிருந்த ஏழை, எளிய விவசாயக் கூலிகள் மற்றும் ஏழை விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும்படியான சூழ்நிலை உருவாயின. அதீதமான கடன் சுமைகள், மோசமான மகசூல்கள் ஆகியவை காரணமாக மேற்படி தற்கொலைகள் நடைபெற்றன. நாடு விடுதலையடைந்த பின்னர் இவ்வாறு நடைபெற்றது இதுவே முதல் தடவையாகும். மேலும் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் தங்களுடைய நிலங்களையெல்லாம் விற்றுக் கடனைத் தீர்த்தனர். இப்படியெல்லாம் விவசாயப் பெருங்குடி மக்கள் வாழ வகையற்றுப்போய் துன்ப துயரங்களில் உழன்றுகொண்டிருந்த சமயத்தில் எஸ்.எஸ். - பாரதீய ஜனதா ஆட்சியாளர்கள் அதைப்பற்றியெல்லாம் துளியும் கவலைப்படவேயில்லை.

விவசாய உற்பத்திப் பொருட்களுக்குக் கட்டுபடியாகும் விலை கிடைக்கவில்லை. பருத்தி, கரும்பு போன்ற பணப்பயிர்களுக்கு உடனுக்குடன் விலை கொடுக்கப்படவில்லை. விவசாயிகளுக்குத் தரப்பட வேண்டிய விதைகள், உரங்கள், பூச்சி மருந்துகள் போன்றவற்றில் கள்ளச்சந்தை வியாபாரம் தங்கு தடையின்றி நடைபெற்றது. நீர்ப்பாசனத்திட்டங்கள் தனியார்மயமாக்கப்பட்டன. விவசாயத் தொழிலாளர்களுக்கு நியாயமான ஊதியங்கள் அளிக்கப்படவில்லை. மேலும் அவர்களுக்கு எந்தவொரு அடிப்படை வசதியும் செய்து கொடுக்கப்படவில்லை. மேற்கூறப்பட்ட சூழ்நிலைகளுக்கெல்லாம் எஸ்.எஸ். - பாரதீய ஜனதா ஆட்சியினர் கடைப்பிடித்து வந்த பொருளாதாரக் கொள்கைகள் தான் அடிப்படைக் காரணங்களாகும். இத்தகைய காரணங்களால் மகாராஷ்டிர மாநிலத்தில் விவசாயத்துறையில் மிகவும் ஆழமான நெருக்கடிகள் உருவாயின.

இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல மாநில ஆட்சியாளர்கள் வெளிநாட்டு, உள்நாட்டு ஏகபோக முதலாளிகளுக்கு கிராமப்புறங்களில் விவசாயத்துறையில் காலூன்றுவதற்கு வழியேற்படுத்திக்கொடுத்தனர். நில உச்சவரம்புச் சட்டங்கள் தளர்த்தப்பட்டன. இத்தகைய நடைமுறைகள் யாவும் ஷரத்பவார் ஆட்சியிலிருந்த காலத்திலேயே தொடங்கிவிட்டன. இதன் விளைவாக பெரும்பகுதி விவசாய நிலங்களை பன்னாட்டு நிறுவனங்களும், பெரு முதலாளிகளும், பெரும் நிலப்பிரபுக்களும் தங்களது உடமைகளாக்கிக்கொண்டனர். அதன் விளைவாக கிராமப்புறங்களில் உள்ள ஏழை, எளிய மற்றும் நடுத்தர விவசாயிகள் தங்களிடமிருந்த நிலங்களைப் பறிகொடுத்து



படிப்பகம்

www.padippakam.com

விட்டு வறுமைப் பிடியில் சிக்கினர். ஏழை, எளிய விவசாயிகளது வேலை வாய்ப்புக்காக ஒதுக்கப்பட்ட நிதியாதாரங்கள் யாவும் தோட்டக்கலை விவசாயத்துக்குத் திருப்பிவிடப்பட்டு கிராமப்புறங்களில் உள்ள வசதி படைத்தவர்கள் மேலும் லாபம் ஈட்டுவதற்கு வழிவகுத்தன. அமெரிக்காவைச் சேர்ந்த மான்சாண்டோ என்ற மிகப்பெரிய விதைகள் உற்பத்தி நிறுவனமானது மகாராஷ்டிராவில் இருந்த பெரிய விதைகள் உற்பத்தி நிறுவனத்துடன் கூட்டுச் சேர்ந்துகொண்டது. மகாராஷ்டிர மாநில அரசானது மேற்படி 2 நிறுவனங்களும் விவசாயத் துறையில் அவர்களது ஆபத்தான சோதனைகளை நடத்திடுவதற்கு முழு சுதந்திரமளித்தது.

## திவாலாகும் நிலைமையில் மகாராஷ்டிர மாநிலம்

மகாராஷ்டிர மாநிலத்தை திவாலாக்கியது ஒன்றுதான் எஸ்.எஸ். -பாரதீய கூட்டணி அரசின் அதிமுக்கியமான சாதனையாகும். மாநிலத்தின் கடன் சுமை அதிகரித்தல், ஊழியர்களுக்கு காலந்தாழ்த்திச் சம்பளப்பட்டுவாடா செய்தல், மாநிலத்தின் தொழில்களையெல்லாம் தனியாருக்குத் தாரை வார்த்தல், பற்பல வளர்ச்சித் திட்டங்களைப் பாதியிலேயே ரத்து செய்தல். இவைதான் அவர்களுடைய நாலரை ஆண்டு கால சாதனைகளாகும். கிருஷ்ணா பள்ளத்தாக்கு வளர்ச்சித் திட்டத்தில் பங்கேற்றிருந்த நூற்றுக்கணக்கான காண்ட்ராக்டர்கள் தங்களுக்குப் பல மாதங்களாகச் சம்பளம் தரப்படவில்லை என்று கூறி மாநில அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்கள். அந்தச் சூழ்நிலையிலுங்கூட எஸ்.எஸ். - பாரதீய ஜனதா அரசானது விதர்ப்பா, மரத்வாடா, கொங்கணம், காண்டேஷ் பகுதிகளில் மேலும் பல நீர்ப்பாசன வாரியங்களை உருவாக்கினார்கள். அந்தத் திட்டங்களுக்காக பொதுக்கடன் பத்திரங்கள் வெளியிடப்பட்டன. அதன் விளைவாக மாநிலத்தின் கடன் சுமைகள் மேலும் அதிகரித்தன. மேற்கூறப்பட்ட திட்டங்கள் யாவும் இன்று போதிய நிதியாதாரங்கள் இல்லாமல் திணறிக்கொண்டுள்ளன. அத்திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்படுமா என்பதே பெரும் கேள்விக்குறியாக உள்ளது.

இந்திய தேசியக் காங்கிரஸ் - தேசியவாதக் காங்கிரஸ் கூட்டணி அரசு மாநிலத்தில் பதவியேற்ற பின்னர் 1999ம் வருடம் டிசம்பரில் மாநிலத்தின் நிதி நிலைமையைப் பற்றியதோர் வெள்ளை அறிக்கையானது சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கையில் முந்திய எஸ்.எஸ். - பாரதீய ஜனதா அரசானது நிதித் துறையில் செய்த குளறுபடிகள் யாவும் விலாவாரியாக எடுத்துரைக்கப்பட்டிருந்தன. அந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருந்த பற்பல புள்ளி விவரங்கள் மிகவும் அதிர்ச்சியளிப்பதாக இருந்தன. 1994-95ம் வருடங்களில் மாநிலத்தின் மொத்தக் கடன் ரூ. 16,020 கோடிகள் என்றும், எஸ்.எஸ். பாரதீய ஜனதா ஆட்சியின் போது மேற்படி கடன் தொகையானது 1998-99ம் வருடங்களில் ரூ. 37,226 கோடியாக அதிகரித்துவிட்டது என்றும் அறிவிக்கப்பட்டது. மேலும் 1994-95ம்



படிப்பகம்

www.padippakam.com
வருடங்களில் ரூ. 1,789 கோடிகளாக இருந்த பற்றாக்குறையானது 1999-2000ம் ஆண்டுகளில் ரூ. 15,494 கோடிகளாக அதிகரித்திருந்தது. அதே போன்று மொத்த நிதிப்பற்றாக்குறையும் ரூ. 33,188 கோடியாக அதிகரித்துவிட்டது. மேற்கண்ட விபரங்கள் யாவும் மாநில அரசின் வெள்ளை அறிக்கையில் எடுத்துக்கூறப்பட்டிருந்தன.

## மிதமிஞ்சிய ஊழல்

காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலும் லஞ்ச ஊழல் மற்றும் குற்றச்செயல்கள் அதிகமாயிருந்தன என்றாலுங்கூட, எஸ்.எஸ். - பாரதீய ஜனதா கூட்டணியானது மாநிலத்தை ஆட்சி புரிந்த காலகட்டத்தில் லஞ்ச லாவண்யங்களும், குற்றச்செயல்களும், சகலவிதமான வரைமுறைகளையும் தாண்டிவிட்டன. இது பற்பல அரசியல் விற்பன்னர்கள், பொறுப்புள்ள பத்திரிகையாளர்கள் ஆகியோரின் ஒட்டுமொத்த அபிப்பிராயமாகும். எஸ்.எஸ். - பாரதீய ஜனதா ஆட்சியின்போது நடைபெற்ற ஊழல்கள் மற்றும் குற்றச்செயல்களைப் பற்றிப் பற்பல புகழ்வாய்ந்த அறிஞர்கள் கருத்துக்கூறியுள்ளனர். முக்கியமாக பிரபல காந்தீயவாதியான அன்னா ஹஸாரே, இலக்கிய அறிஞரான தேஷ்பாண்டே, வரலாற்று அறிஞரான ஒய்.டி.பாட்கே, கவிஞர் நாராயண சர்வே, கவிஞர் வசந்த் பாபத், முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதிகள் சுரேஷ், எஸ்.எம்.தவுத், பழிவாங்கப்பட்ட மும்பை நகர்மன்ற ஆணையர் கைர்னார் போன்ற பற்பல புகழ்மிக்க தலைவர்கள் எஸ்.எஸ்.-பாரதீய ஜனதா கூட்டணி அரசின் அலங்கோலங்களைப் பற்றி சாங்கோ பாங்கமாக எடுத்துரைத்துள்ளனர். அன்னா ஹஸாரே அப்பிரச்சனையில் மாநில அரசை எதிர்த்து ஒரு போராட்டமே நடத்தினார். அது இறுதியாக வெற்றியில் முடிந்தது. எஸ்.எஸ். மற்றும் பாரதீய ஜனதா கட்சிகளின் பற்பல தலைவர்களின் மீது எண்ணற்ற ஊழல் குற்றச்சாட்டுக்கள் பகிரங்கமாகவும், மீண்டும் மீண்டும் கிளம்பின. மேற்படி ஊழல் பட்டியலில் பால்தாக்கரே, பிரமோத் மகாஜன், மனோகர் ஜோஷி, நாராயண ராணே, கோபிநாத் முண்டே போன்ற பெருந்தலைவர்கள் சிறப்பிடம் பெற்றிருந்தனர். மேலும் கூட்டணி அரசில் அங்கம் வகித்த மகாதேவ், சிவசங்கர், கிரித் சோமய்யா, ராஜ் தாக்கரே, நிதின் கட்காரி, வேஷாபா பட்நாவிஸ் போன்றோர் மீதும் ஊழல் குற்றச்சாட்டுகள் எழுந்தன., ஒரு சில வழக்குகளில் உயர்நீதிமன்றமும், விசாரணைக் கமிஷன்களும் கடுமையான கண்டனங்களைத் தெரிவித்தன. அதன் விளைவாக எஸ்.எஸ்.கட்சி சார்பில் அமைச்சர்களாயிருந்த சுதர், கோலாப் ஆகிய இருவரும் தங்களது அமைச்சர் பதவிகளை ராஜினாமாச் செய்ய வேண்டியதாயிற்று.

அவர்களது கூட்டணி ஆட்சிக்காலத்தில் நிப்பன் டென்ரோ இஸ்பட் நிலக்கரிச் சுரங்க ஊழல், சகாரா இந்தியா பள்ளத்தாக்கு ஓட்டல் ஊழல், செருப்புக் கம்பெனிகளது ஊழல்கள், கூட்டுறவு வங்கிகளது ஊழல்கள் என்று பல்


படிப்பகம்

www.padippakam.com
வேறு ஊழல்களையெல்லாம் நம்மால் பட்டியலிட்டுக் கூறமுடியும். மேற்படி ஊழல்களிலெல்லாம் கோடி கோடியாய்ப் பணம் சம்பந்தப்பட்டிருந்தது.

பால்தாக்கரேயின் "மதோ ஸ்ரீ" பங்களாவானது ஊழல்களின் ஊற்றுக்கண்ணாக விளங்கியது எனலாம். மகாராஷ்டிரா டைம்ஸ் ஏட்டில் 1994ம் வருடம் ஜனவரி 13ம்தேதியன்று ஒரு அதிர்ச்சியூட்டும் செய்தி வெளியாயிருந்தது. இன்று வரைக்கும் எஸ்.எஸ். தலைவர்கள் யாரும் அந்தச் செய்திக்கு மறுப்புத் தெரிவிக்கவில்லை. எஸ்.எஸ். கட்சியினர் பல்வேறு மிரட்டல்கள் மூலமாக 5 கோடி ரூபாய் நிதி திரட்டினார்கள் என்பதுதான் மேற்படி பத்திரிகைச் செய்தியாகும். மேற்படி தொகையானது பால்தாக்கரேயின் 67வது பிறந்த நாளன்று அவருக்குப் பரிசளிக்கப்பட்டது. மேற்படி நிதிக்கு ஒவ்வொரு எஸ்.எஸ். கட்சி சட்டமன்ற உறுப்பினரும் தலா ஒரு லட்சம் ரூபாயையும், கட்சியின் நகர்மன்ற உறுப்பினர்கள் தலா 50,000 ரூபாயையும் கொடுக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டனர். அதற்கு முந்திய வருடத்திலும் அத்தகைய நிதி வசூல்கள் நடைபெற்றதாக மேற்படி பத்திரிகைக் குறிப்பில் கூறப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட சம்பவங்கள் யாவும் எஸ்.எஸ். கட்சியினர் ஆட்சியில் அமர்வதற்கு முன்னதாக நடைபெற்றவையாகும். பதவிக்கு வந்த பின்னர் எஸ்.எஸ். கட்சி அமைச்சர்களும் "நன்கொடைப் பட்டியலில்" சேர்க்கப்பட்டு, மேலும் பல கோடி சுருட்டப்பட்டன.

## எப்போதுமில்லாத அளவுக்கு குற்றங்கள் பெருகின

எஸ்.எஸ். கட்சியினரும், பாரதீய ஜனதாவினரும் மாநில அரசு அதிகாரத்தில் அமர்வதற்கு முன்னதாகவே அவர்கள் கட்சியைச் சேர்ந்த ஒரு சில சட்டமன்ற உறுப்பினர்களும் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களும் சில தாதா கோஷ்டியினருடன் திரைமறைவில் தொடர்பு கொண்டிருந்தமையால் கொலை செய்யப்பட்டனர். நிலத்தகராறுகள், சொத்துப் பிரச்சனை முதலியவை காரணமாக மேற்படி கொலைகள் நடந்ததாகச் சொல்லப்பட்டது. எஸ்.எஸ். கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களான வித்தல் சவான், ரமேஷ் மூர், எஸ்.எஸ். கட்சியின் நகர்மன்ற உறுப்பினர்களான விநாயக் வாப்லே, சிம்பகதூர் தபா, பாரதீய ஜனதா சட்டமன்ற உறுப்பினரான பிரேம் குமார் சர்மா, பாரதீய ஜனதா கட்சியின் நகர்மன்ற உறுப்பினரான ராம்தாஸ் நாயக் (இவர் ஒரு முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமாவார், மேலும் பாரதீய ஜனதா கட்சியின் நகரச் செயலாளருங்கூட) ஆகியோர்தான் அவ்வாறு கொலை செய்யப்பட்டவர்கள். அவர்களில் நாயக் என்பவர் ஒரு பிரபலமான தலைவராவார். அவர் கொலை செய்யப்பட்டவுடனே 1994ம் வருடம் செப்டம்பர் மாதம் 3ம்தேதியன்று வெளியான மகாராஷ்டிரா டைம்ஸ் ஏடானது அதிர்ச்சியூட்டும் ஒரு செய்தியைப் பிரசுரித்தது. அச்செய்தியில் நாயக்கின் ஒன்னரை ஆண்டுகால மர்மங்களும், அவர் கட்சிக்காக இரண்டரைகோடி


படிப்பகம்

www.padippakam.com
ரூபாய் திரட்டியதும் விளக்கப்பட்டிருந்தது. அந்த இரண்டரை கோடியில் ஒன்னரை கோடி ரூபாய் எல்.கே.அத்வானியிடம் அளிக்கப்பட்டதாகவும், 70 லட்சம் ரூபாய் செலவில் தாதரில் பாரதீய ஜனதாக் கட்சிக்காக ஒரு கட்டிடம் கட்டப்பட்டதாகவும் மேற்படி பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. பாரதீய ஜனதாக் கட்சியினர் ஆட்சியதிகாரத்தில் இல்லாதிருந்த கால கட்டத்தில் மேற்படி நிகழ்ச்சியானது நடைபெற்றது என்பதை நாம் வாசகர்களுக்கு நினைவூட்டிட விரும்புகின்றோம்.

மாபியா கும்பல்களுக்கும் எஸ்.எஸ்.கட்சியினருக்கும் இடையிலான தொடர்புகள் ஒன்றும் புதியவையல்ல. பல வருடங்களுக்கு முன்னால் பால் தாக்கரே "அவர்களிடம் ஒரு தாவூத் இப்ராஹிம் இருந்தால் எங்களிடம் ஒரு அருண்காவ்லி இருக்கிறார்" என்று பகிரங்கமாகவே அறிவித்தார். சகான் பூஜ் பாலின் கிளர்ச்சிக்குப் பின்னர் அருண் காவ்லிக்கும் எஸ்.எஸ். கட்சியின ருக்குமிடையிலான தொடர்புகள் அறுந்துபோயின. அதற்குப் பின்னர் எஸ்.எஸ். கட்சியினர் அருண் காவ்லியின் எதிர் கோஷ்டியைச் சேர்ந்த அமர் நாயக், அஸ்வின் நாயக் என்ற இரு சகோதரர்களைப் பாலூட்டிச் சீராட்டி வளர்க்கத் தொடங்கினார்கள். அந்த நெருக்கமானது மேற்படி இரண்டு தாதாக் களுடைய மனைவியர்களை மும்பை நகர்மன்றத் தேர்தல்களில் எஸ்.எஸ். கட்சியின் வேட்பாளர்களாக நிறுத்தும் அளவுக்கு வளர்ந்தோங்கியது. அந்த இருவரில் ஒருவர் வெற்றிபெற்றார், மற்றவர் தோல்வியுற்றார். பின்னர் எஸ்.எஸ்.கட்சியினர் அவர்களில் ஒருவரை சட்டமன்ற வேட்பாளராக நிறுத்தி னர். எஸ்.எஸ். - பாரதீய ஜனதாக் கட்சியினர் மாநில ஆட்சியில் கோலோச்சிய சமயத்தில் அமர்நாயக்கிற்கும் காவல்துறையினருக்கும் இடையில் நடந்த ஒரு மோதலில் அவர் மர்மமான முறையில் கொல்லப்பட்டார். எஸ்.எஸ்.கட்சியின் "சாம்னா" பத்திரிகையில் மேற்படி கொலையைக் கண்டித்து ஒரு தலையங்கம் எழுதப்பட்டது. முஸ்லிம் தாதாவான தாவூத் இப்ராகிமைச் சுதந்திரமாக உலவவிட்டுள்ள மும்பை நகரக் காவல்துறையானது ஒரு இந்து மற்றும் மகாராஷ்டிர தாதாவான அமர்நாயக்கைத் தீர்த்துக்கட்டிவிட்டதாக அந்தத் தலையங்கத்தில் எழுதப்பட்டிருந்தது!

1996ம் வருடத்தில் ஜூலை மாதம் ரமேஷ் கினி என்பவர் கொலை செய்யப் பட்டார். அந்தக் கொலை நிகழ்ச்சியானது எஸ்.எஸ்.-பாரதீய ஜனதா ஆட்சி யையே அடியோடு ஆட்டங்காணச் செய்துவிட்டது. ரமேஷ் கினி என்பவர் மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்த மும்பை நகரவாசியாவார். அவர் ஒரு இந்து மற்றும் மராட்டியருமாவார். அவர் தாக்கரே குடும்பத்துக்கு வேண்டியவர்க ளுடைய ஒரு வீட்டில் குடியிருந்து வந்தார். வீட்டின் உரிமையாளர்கள் அவர் வீட்டைக் காலி செய்திட வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். அது தொடர் பாக அவரை அடிக்கடி "சாம்னா" பத்திரிகை அலுவலகத்துக்கு அழைத்து வந்து மிரட்டினார்கள். ஒரு திரையரங்கில் கிடந்த அவருடைய பிரேதத்திலி


படிப்பகம்

www.padippakam.com

ருந்து அவர் தனது மனைவியான ஷீலா கினிக்கு எழுதியிருந்த ஒரு கடிதம் காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டது. அவரது மனைவி ஷீலா கினி தனது கணவரது கொலையில் ராஜ் தாக்கரேக்குத் தொடர்பு உள்ளது என்று பகிரங்க மாகக் குற்றஞ்சாட்டினார். இந்தச் செய்தியானது மாநிலமெங்கும் புயலைக் கிளப்பியது. எஸ்.எஸ்.பாரதீய ஜனதா ஆட்சியாளர்கள் புலன் விசாரணை என்ற பெயரில் பிரச்சனையை அமுக்கிவிட முயன்றார்கள். உயர்நீதிமன்ற மானது சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட்டது. ஆனால் அதற்குள் காலங் கடந்துவிட்டதால் மாநிலக் காவல்துறையினர் ரமேஷ் கினியின் கொலைக் கான சகலவித தடயங்களையும் அழித்துவிட்டிருந்தனர். ராஜ் தாக்கரே அந்தப் பிரச்சனையிலிருந்து தப்பினார் என்பது உண்மையே. ஆனால் அந்தக் கொலை நிகழ்ச்சியானது எஸ்.எஸ். - பாரதீய ஜனதா ஆட்சி மற்றும் தாக்கரே குடும்பத்தார் ஆகியோரது புகழுக்கு மாபெரும் களங்கத்தை உருவாக்கியது என்பதும் ஒரு உண்மையேயாகும்.

## பழிவாங்கும் தன்மையுடன் கூடிய வகுப்புவெறி

1998ம் வருடம் ஆகஸ்ட் மாதத்தில் வெளியிடப்பட்ட ஸ்ரீகிருஷ்ணா கமிஷன் அறிக்கையை ஒட்டுமொத்தமாக ஏற்க மறுத்துவிட்டதன் மூலமாக எஸ்.எஸ்.-பாரதீய ஜனதா ஆட்சியின் வகுப்புவாத நிலைபாடானது மிகவும் வெளிப்படையாகத் தெரியவந்தது. மேற்படி அறிக்கையானது பற்பல நபர்களைக் குற்றஞ்சாட்டிப் பட்டியலிட்டிருந்தது. பால்தாக்கரே அந்த அறிக்கையைக் கடுமையாகத் தாக்கித் தன்னுடைய "சாம்னா" ஏட்டில் பற்பல தலையங்கங்களை எழுதி அதன் மூலம் ஒரு தீவிரமான பிரச்சாரத்தைத் தொடங்கிவைத்தார். ஆகஸ்ட் 8ம் நாளன்று "சாம்னா" தனது தலையங்கத்தில் கீழ்க்கண்டவாறு எழுதியிருந்தது. "வந்தே மாதரத்துக்கு எதிரான குற்றம்! ஸ்ரீகிருஷ்ணா, இது யாருடைய தாய்நாடு?" சாம்னா ஏட்டின் அடிச்சுவட்டைப் பின்பற்றி "நவகாளி" என்ற ஏடும் நீதிபதி ஸ்ரீகிருஷ்ணாவைத் தனிப்பட்ட முறையில் தாக்கிப் பற்பல ஆத்திரமூட்டும் கட்டுரைகளை எழுதியது. அந்த ஏடானது ஆகஸ்ட் 8ம் நாளன்று பின்வருமாறு எழுதியிருந்தது:

"ஒரு நீதிபதிக்குக் கிறுக்குப் பிடித்துவிட்டது. அவருடைய அறிக்கையில் விஷம்தோய்ந்துள்ளது!" ஆகஸ்ட் 10ம் நாளன்று அதே ஏட்டின் தலையங்கத்தில் பின்வரும் ஆத்திரமூட்டும் வாக்கியங்கள் காணப்பட்டன. "உடனடியாக நீதிபதி ஸ்ரீகிருஷ்ணாவைக் கைது செய்யுங்கள்! ஸ்ரீ கிருஷ்ணா வகுப்புவெறியைத் தூண்டிவிடுகின்றதோர் குற்றவாளியாவார்!"

எஸ்.எஸ். - பாரதீய ஜனதாக் கூட்டணி ஆட்சியின் அரவணைப்பில்தான் அத்தகைய வெட்கங்கெட்ட மற்றும் வெளிப்படையான அகங்காரங்கள் தலை விரித்தாட முடியும் என்பது தெளிவாக்கப்பட்டுவிட்டது. மேற்படி ஸ்ரீகிருஷ்ணா கமிஷன் அறிக்கையை சட்டமன்றத்தில் மறுத்து உரையாற்றிய



படிப்பகம்

www.padippakam.com

மாநில முதலமைச்சர் மனோகர் ஜோஷி தொடர்ந்து 2 நாட்கள் வகுப்பு வெறியூட்டும் வகையில் நீண்டநேரம் பேசினார். அவருடைய உரையில் நீதிபதி ஸ்ரீகிருஷ்ணா மற்றும் அவரது அறிக்கைக்கு எதிராகக் கடுமையான வெறுப்பும், துவேஷமும் கலந்திருந்தன.

அந்த அறிக்கையானது "இந்துக்களுக்கு எதிரானது மற்றும் முஸ்லிம்களுக்குச் சாதகமானது" என்று முதலமைச்சர் தன்னுடைய உரையில் குறிப்பிட்டார். "நான் எனது முதலமைச்சர் பதவியை வேண்டுமானால் ராஜினாமா செய்வேனே தவிர பால் தாக்கரேயைக் கைது செய்யவே மாட்டேன்" என்றும், "அந்த அறிக்கையை எதிர்த்து என் தலைவருடன் சேர்ந்து நின்று தெருவிலிறங்கி போராடவும் தயார்" என்றும் அவர் சட்டமன்றத்தில் வீராவேசமாகப் பேசினார். அவர்களது மேற்படி நடவடிக்கைகளுக்கெல்லாம் மத்தியில் ஆட்சிபுரிந்து வந்த பாரதீய ஜனதா தலைமையிலான ஆட்சியின் பரிபூரண ஆதரவு கிடைத்தது. பிரதமர் ஸ்ரீகிருஷ்ணா கமிஷன் அறிக்கையைப் பற்றி எதுவுமே பேசவில்லை. ஆனால் உள்துறை அமைச்சரான அத்வானி மாநில அரசின் நடவடிக்கைகளுக்கு ஆதரவான வகையில் அறிக்கைகள் வெளியிட்டார். ஆனால் மகாராஷ்டிரத்திலுள்ள சகல எதிர்க்கட்சிகளும் சட்டமன்றத்துக்கு உள்ளேயும், வெளியிலும் எஸ்.எஸ். - பாரதீய ஜனதா ஆட்சிக்கு எதிரான கண்டனங்களை முழக்கின.

1996ம் வருடம் ஜனவரி மாதத்தில் மாநில ஆட்சியாளர்கள் கமிஷனின் விசாரணைகள் யாவும் முடிவடையும் நிலையிலிருந்த சமயத்தில் ஸ்ரீகிருஷ்ணா கமிஷனின் விசாரணைகளுக்குத் தடை விதித்துவிட்டனர். சரியாக அதற்கு ஏழு நாட்கள் கழித்து தாக்கரே மீதும், "சாமனா" ஏட்டின் மீதும் பம்பாய்க் கலவரங்களின் போது வகுப்புவெறியைத் தூண்டியதற்காகப் போடப்பட்டிருந்த 24 வழக்குகளும் மாநில அரசால் வாபஸ் பெறப்பட்டன. மேற்படி 24 வழக்குகளும் முந்திய காங்கிரஸ் அரசாங்கத்தினால் போடப்பட்டவையாகும். தங்களால் போடப்பட்ட அந்த 24 வழக்குகள் வாபஸ் பெறப்பட்டதைப்பற்றிக் காங்கிரசாரும் துளிகூடக் கவலைப்படவேயில்லை.

எஸ்.எஸ். - பாரதீய ஜனதா ஆட்சிக் காலத்தில் பற்பல வகுப்புவாத நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- மாநில சிறுபான்மைக் கமிஷன்; உருது அகாடமி, ஹஜ் பயணக்குழு முதலியவை ஒழிக்கப்பட்டன.
- பசுவதைக்கு எதிரான ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால் அது மேல்சபையினரின் எதிர்ப்பால் நிறைவேற முடியவில்லை.
- ஒரு பொதுவான சிவில் சட்டத்தைக்கொண்டுவர வேண்டும் என்று மாநிலம் முழுவதிலும் வெறித்தனமான பிரச்சாரங்கள் நடத்தப்பட்டன.
- வங்க தேசத்திலிருந்து வந்தவர்களாகக் கருதப்படுபவர்களை உடனே



படிப்பகம்

www.padippakam.com
வெளியேற்றிட வேண்டும் என்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அவ்வாறு கருதப்பட்டவர்கள் அனைவருமே சட்டபூர்வமான இந்தியப் பிரஜைகளாவார்கள். மற்றும் அவர்கள் மேற்கு வங்கத்திலிருந்து மகாராஷ்டிரத்துக்கு வந்து சட்டப்படி குடியேறியவர்கள் ஆவார்கள்.

- எஸ்.எஸ். - பாரதீய ஜனதா ஆட்சியின்போது ரெய்காட், புனே, ஜலகான் மாவட்டங்களின் பல பகுதிகளிலும், அவுரங்காபாத் நகரிலும் வகுப்புக்கலவரங்கள் தூண்டிவிடப்பட்டன.

## தலித்துகள், ஆதிவாசிகள், பெண்கள் மீதான தாக்குதல்கள்

எஸ்.எஸ். - பாரதீய ஜனதாக் கூட்டணி அரசானது தலித் மக்களை மிகவும் இழிவான முறையில் நடத்தியது. மும்பை நகரிலுள்ள ரமாபாய் அம்பேத்கர் நகரில் நடைபெற்றதோர் படுகொலையானது அவர்களது மேற்படி கண்ணோட்டத்தை அம்பலப்படுத்தியது. 1997ம் வருடம் ஜூலை 11ம் நாளன்று காவல்துறையினரும், சிறப்புக் காவல் படையினரும் அப்பகுதியில் பயங்கரமானதோர் வெறியாட்டத்தை அரங்கேற்றினர். எந்தவிதமான எச்சரிகையுமில்லாமல் மக்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. கள்ளங்கபடமற்ற பத்து தலித்துக்கள் ஈவிரக்கமின்றிச் சுட்டுக்கொல்லப்பட்டனர். முப்பதுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கரின் உருவச் சிலையானது அவமதிக்கப்பட்டதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தியதுதான் அந்த மக்கள் செய்த ஒரே குற்றமாகும்! தங்களுடைய அந்த வெறியாட்டத்தை நியாயப்படுத்திடும் வகையில் மாநில அரசும், காவல்துறையும் வெட்கங்கெட்ட வகையில் பற்பல கோயபல்ஸ் பாணியிலான பொய்ப்பிரச்சாரங்களை மேற்கொண்டனர். அந்தப் படுகொலைச் சம்பவமானது மகாராஷ்டிர மாநிலமெங்கும் பெருமளவில் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. பல்வேறு பகுதிகளில் எதிர்ப்புப்பேரணிகள் நடத்தப்பட்டன. சகல எதிர்க்கட்சிகளும் ஓரணியாகத் திரண்டெழுந்து மாநிலந்தழுவியதோர் "பந்த்"தை நடத்தினர். மாநில ஆட்சியாளர்கள் மேல்ஜாதிக்காரர்களுக்குச் சாதகமான முறையில் அவர்கள் மரத்வாடா பகுதிகளில் தலித்துக்கள் மீது நடத்திய கொடுமைகள் சம்பந்தமான 1,100 வழக்குகளை வாபஸ் பெற்றார்கள்.

எஸ்.எஸ்.-பாரதீய ஜனதா ஆட்சியாளர்கள் ஆதிவாசிகள் மற்றும் கம்யூனிஸ்ட்டுகள் மீது கொண்டிருந்த கண்ணோட்டத்துக்கு எடுத்துக்காட்டானதோர் நிகழ்ச்சி 1997ம் வருடம் ஜனவரி 26ம்தேதியன்று குடியரசு தின விழாவின்போது வெளிப்பட்டது. தானே மாவட்டத்தைச் சேர்ந்த தலைச்சேரிக்கருகே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த இரண்டு ஆதிவாசிகள் காவல் துறையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். மேலும் எண்ணற்ற கம்யூனிஸ்ட் ஊழியர்கள் மற்றும் ஆதிவாசிகள் கைது செய்யப்பட்டுச் சிறைக்குள் தள்ளப்பட்டனர். அவர்கள் மீது பொய் வழக்குகள் போடப்பட்டன. ஒரு மாத காலம் அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். காவல்துறை


படிப்பகம்

www.padippakam.com
யினரும், சிறப்புக்காவல் படையினரும் ஆதிவாசிப் பெண்களை மானபங்கம் செய்தனர். அந்தப் பகுதியில் ஒரு அடக்குமுறை வெறியாட்டம் நடத்தி அதன் மூலமாக அப்பகுதியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கை மங்கச் செய்ய வேண்டும் என்பதுதான் பாரதீய ஜனதா கட்சியினரின் சதித் திட்டமாகும். அதன் மூலமாக உள்ளாட்சித் தேர்தல்களின்போது மாவட்ட மற்றும் பஞ்சாயத்து அமைப்புக்களைக் கைப்பற்றிட அவர்கள் திட்டமிட்டனர். ஆனால் அவர்களுடைய மேற்படிச் சதித்திட்டங்கள் யாவும் தவிடு பொடியாக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஊழியர்கள் பற்பல வீரஞ்செறிந்த இயக்கங்களை நடத்தி தேர்தல்களில் வெற்றி வாகை சூடினார்கள்.

எஸ்.எஸ். - பாரதீய ஜனதா ஆட்சியின் போது மகாராஷ்டிரத்திலுள்ள பெண்களுக்குப் பெரிய அளவில் கொடுமைகள் இழைக்கப்பட்டன. மாநிலமெங்கும் பெண்களுக்கு எதிராக நடைபெற்ற குற்றச்செயல்கள் மிகவும் அதிகரித்தன. அவர்களது ஆட்சியின்போது இந்திய நாட்டிலேயே பெண்கள் மீது அதிகமான கொடுமைகள் நிகழ்த்தப்பட்டதோர் மாநிலமாக மகாராஷ்டிர மாநிலம் திகழ்ந்தது. மேலும் பொது விநியோகமுறை குடிதண்ணீர் வசதி, பொதுச் சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்புக்கள், தொழில், விவசாயம் ஆகிய பல்வேறு அம்சங்களிலும் அந்த மாநிலத்தில் வாழ்ந்து வந்த பெண்கள் யாவருக்குமே நேரடியான பற்பல பாதிப்புக்கள் ஏற்பட்டன.

## கலை, இலக்கியம், விளையாட்டு ஆகிய துறைகளின் மீதான தாக்குதல்கள்

நாஜிக் கட்சியின் ஆகப்பெரிய தலைவனாகவும், ஜெஸ்டபோ என்ற கேடு கெட்ட ஜெர்மானிய ரகசியப் போலீஸ் அமைப்பை உருவாக்கியவனுமான ஹெர்மன் கோயரிங் என்பவர் கலாச்சாரம், கலை என்ற சொற்களைக் கேட்டாலே தன்னுடைய கைத்துப்பாக்கியை எடுத்துவிடுவார். அந்த அளவுக்குக் கலைகளின் மீது நாஜிகளுக்கு மிகுந்த அசூயையும், வெறுப்பும் மேலோங்கியிருந்தன. பால் தாக்கரேயும் அவருடைய எஸ்.எஸ். கட்சியினரும் கோயரிங்கின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடப்பவர்களாக விளங்கினர். விஜய் டெண்டுல்கர் என்ற மராட்டிய நாடகாசிரியர் "சாகாராம் பைண்டர்", "காசிராம் கோட்வால்" என்ற இரண்டு முற்போக்கு நாடகங்களை இயற்றினார். எஸ்.எஸ். கட்சியானது தனது தொடக்க காலத்தில் மேற்படி இரண்டு நாடகங்களுக்கும் எதிராகக் கலகங்கள் செய்து வந்தது. மராத்தியர்கள் ஆட்சி வீழ்ச்சியடைந்த பின்னர் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிய பேஷ்வாக்கள் (இவர்கள் பிராமண வகுப்பைச் சேர்ந்தவர்களாவார்கள்)

எவ்வளவு சீர்கெட்ட முறையில் நிர்வாகம் செய்தனர் என்பதை டெண்டுல்கர் தனது காசிராம் கோட்வால் நாடகத்தில் தத்ரூபமாகச் சித்தரித்திருந்தார். பிராமணர்களுடைய கட்சியான எஸ்.எஸ்.கட்சிக்கு மேற்படி நாடகமானது வேம்பாகக் கசந்ததில் வியப்பில்லை. 80களில் கோவிந்த நிகலானி என்ற நாடகாசிரியர் பீஷ்ம சகானி எழுதிய ஒரு நாவலை அடிப்படையாகக் கொண்டு "தமஸ்"



படிப்பகம்

www.padippakam.com
என்றதோர் திரைப்படத்தைத் தயாரித்து வெளியிட்டார். அந்தத் திரைப்படத்தில் இந்தியா பிரிவினை செய்யப்பட்டபோது நடைபெற்ற வகுப்புவெறி, அதனால் நாட்டு மக்களுக்கு ஏற்பட்ட நரக வேதனைகள் ஆகிய அம்சங்கள் யாவும் உணர்ச்சிபூர்வமாகச் சித்தரிக்கப்பட்டிருந்தன. மேற்படி திரைப்படமானது "வரலாற்றை மறந்தவர்களுக்கு அதைப்பற்றிப் பேசுவதற்கே அருகதை கிடையாது" என்ற பொன்மொழியுடன் தொடங்கியது. எஸ்.எஸ். கட்சியினரும் மற்றும் பாரதீய ஜனதா, ஆர்எஸ்எஸ், விஎச்பி ஆட்கள் யாவரும் ஒன்றாகக்கூடிக்கொண்டு மேற்படி தமஸ் திரைப்படத்தை உடனடியாகத் தடைசெய்திட வேண்டும் என்று மாநிலத்தின் பல பகுதிகளிலும் பற்பல வன்முறை ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். ஆனால் அவர்களது முயற்சிகள் பலிக்கவில்லை.

10 வருடங்களுக்குப் பின்னர் காவியுடைப் பட்டாளத்தைச் சேர்ந்த ஒரு நாடகாசிரியர், "நான் நாதுராம் பேசுகிறேன்" என்ற ஒரு நாடகத்தை எழுதினார். மகாராஷ்டிர மக்களிடையே ஆத்திரத்தைக் கிளப்பியதன் விளைவாக மேற்படி நாடகமானது வாபஸ் பெறப்பட்டது. அந்த நாடகத்தைத் தடை செய்வது பேச்சுரிமைக்கு எதிரானது என்று எஸ்.எஸ். பாரதீய ஜனதா, மற்றும் ஆர்எஸ்எஸ் கட்சிகாரர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். எஸ்.எஸ்.-பாரதீய ஜனதாக் கட்சியினர் ஆட்சிக்கு வந்த முதல் வருடத்திலேயே அவர்கள் புனே நகரில் நாதுராம் கோட்ஸேயின் சகோதரரான கோபால் கோட்ஸேக்கு ஒரு பாராட்டு விழா நடத்தினார்கள். கோபால் கோட்ஸே மகாத்மா காந்தி படுகொலை செய்யப்பட்ட வழக்கில் முக்கியமானதோர் எதிரியாவார். அதற்காகப் பல வருடங்கள் சிறைவாசம் அனுபவித்தவருங்கூட. அவர் ஒரு தீவிரமான இந்துமத வெறியராவார். அவர் மகாத்மா காந்தி படுகொலை செய்யப்பட்டதை நியாயப்படுத்தி ஒரு புத்தகமும் எழுதியுள்ளார். அவருக்காக நடத்தப்பட்ட மேற்கூறப்பட்ட பாராட்டு விழாவில் பற்பல எஸ்.எஸ்.மற்றும் பாரதீய ஜனதா கட்சிகளது பெருந்தலைவர்கள் கலந்துகொள்ளவில்லை. என்றாலுங்கூட அந்த விழாவானது எஸ்.எஸ். மற்றும் ஆர்எஸ்எஸ் காரர்களால் நடத்தப்பட்டதோர் விழாவேயாகும். பிற்காலத்தில் எஸ்.எஸ். கட்சியினர் குலாம் அலியின் இசைக்கச்சேரிகளைச் சீர்குலைத்தார்கள், எம்.எப்.ஹுசேனின் ஓவியங்களைப் பாழ்படுத்தினார்கள். அவர்களுடைய பாசிஸ்ட் வெறிக்கு இவையெல்லாம் தக்க சான்றுகளாகும்.

பின்னர் அவர்கள் தீபா மேத்தாவின் "பயர்" திரைப்படத்துக்கு எதிராக பற்பல வெறியாட்டங்களை நடத்தினர். அந்தத் திரைப்படமானது இந்தியக் கலாச்சாரத்துக்கு எதிராக உள்ளது என்று கூறி ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். அந்தப் படத்துக்கு ஆதரவு தெரிவித்தார் என்பதற்காக நடிகர் திலீப்குமார் வீட்டின் முன் கூடிநின்று அவரை இழிவுபடுத்திக் கோஷமிட்டனர். அவர் ஒரு முஸ்லிம் என்பதற்காகவும், மேலும் அவர் மதச்சார்பின்மைக்கு ஆதரவாகச் செயல்படுவதாகவும் அவருக்கு எதிரான கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர். சுனில் தத் என்ற பிரபல நடிகர் பம்பாய்க் கலவரங்களைத் தூண்டிய எஸ்.எஸ். தலைவரான மதுக்கர் சர்போட்தார் என்பவரைக் கண்டித்து நாடாளுமன்றத் தேர்தல்


படிப்பகம்

www.padippakam.com

கூட்டங்களில் உரையாற்றினார். அதன் விளைவாக எஸ்.எஸ். ஆட்கள் சுனில்தத் மீதும் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

பி.எல்.தேஷ்பாண்டே என்பவர் மராத்திய மொழி எழுத்தாளர்களில் பிரபல மானவர். ஆவார். அவருக்கு எஸ்.எஸ்.-பாரதீய ஜனதா ஆட்சியின் போது "மகாராஷ்டிரா பூஷண்" என்ற விருது அளிக்கப்பட்டது. மேடையில் அந்த விருதை ஏற்றுக்கொண்டு உரையாற்றிய தேஷ்பாண்டே எஸ்.எஸ். கட்சியின் சட்ட விரோதமான வன்முறைச் செயல்களைக் கண்டித்துப் பேசினார். மேடை யில் அமர்ந்திருந்த பால் தாக்கரே உடனே எழுந்து, "அப்படியானால், நாம் ஏன் அந்த விருதைப் பெற்றுக்கொண்டீர்?" என்று கேட்டு அவரை அவமதித் தார். ஒய்.டி.பாட்கே என்பவர் ஒரு புகழ்வாய்ந்த வரலாற்று ஆய்வாளராவார். அவர் மராத்திய சாகித்திய சம்மேளனத்தின் தலைவருங்கூட. அவர் ஒரு உள் ளூர்ப் பத்திரிகையில் ரமேஷ் கினி கொலை வழக்கில் எஸ்.எஸ்.தலை வர்களது தொடர்பு உள்ளதைக் கண்டனஞ்செய்து ஒரு கட்டுரை எழுதி யிருந்தார். உடனே சாம்னா ஏட்டில் அவருக்குப் பதிலடி கொடுக்கும் வித மாகப் பின்வருமாறு எழுதினார்கள்:

"யாராவது பாட்கேயைச் செருப்பால் அடிக்க முன்வந்தால் அவர் புனிதமானதோர் கடமையைச் செய்தவராகக் கருதப்படுவார்!"

வசந்த் பாபட் என்பவர் ஒரு புகழ்மிக்க மராத்தியக் கவிஞராவார். அவர் மராத்திய சாகித்திய சம்மேளனத்தில் தலைமையுரைச் சொற்பொழிவாற்றுகின்ற சமயத் தில் எஸ்.எஸ்.கட்சியினரின் சகிக்க முடியாத பற்பல நடவடிக்கைகளைக் கண் டித்துப் பேசினார். உடனே பால்தாக்கரேக்குக் கோபம் பீறிட்டது. "எல்லா எழுத்தாளர் களுமே எருமைமாடுகள்" என்று வசைபாடினார். மேலும் சாகித்திய சம்மேளனத் துக்கு அரசாங்கம் கொடுத்து வருகின்ற 25 லட்ச ரூபாய் உதவித்தொகையை உடனே நிறுத்திட வேண்டும் என்றும் பால்தாக்கரே முழக்கமிட்டார்.

பத்துவருடங்களுக்கு முன்னர் இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்குமிடையே கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்ற சமயத்தில் எஸ்.எஸ். ஆட்கள் மும்பையி லுள்ள வாங்க்டே விளையாட்டு மைதானத்துக்குள் அத்துமீறிப்புகுந்து அங்கே போட்டிகள் நடப்பதற்கு வழியில்லாமல் மைதானத்தில் பல இடங்க ளில் குழிகளைத் தோண்டிக் கேவலப்படுத்தினார்கள். 1999ம் வருடம் அதே எஸ்.எஸ். குண்டர்கள் மும்பையில் செயல்பட்டு வரும் கிரிக்கெட் தலைமைய கத்துக்குள் சட்ட விரோதமாக நுழைந்து அங்கிருந்த விலை உயர்ந்த வெற்றிக் கோப்பைகள், மெடல்கள் முதலியவற்றையெல்லாம் உடைத்தெறிந்தார்கள். எஸ்.எஸ். - பாரதீய ஜனதாக் கட்சியினர், மகாராஷ்டிர மாநிலத்தை ஆட்சி புரிந்துகொண்டிருந்த காலகட்டத்தில்தான் மேற்கூறப்பட்ட செயல்கள் அரங் கேறின. ஆனால் அத்தகைய வன்முறைச் செயல்களில் ஈடுபட்ட எஸ்.எஸ். குண்டர்கள் மீது மாநில அரசு எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்க வில்லை. வேறு பற்பல காரணங்களினாலும், மேற்கூறப்பட்ட பாசிஸ்ட் நட வடிக்கைகளின் விளைவாகவும், எஸ்.எஸ்.- பாரதீய ஜனதா ஆட்சியானது தனக்குத்தானே சாவுமணி அடித்துக்கொண்டது.



படிப்பகம்

www.padippakam.com

## எஸ்.எஸ்.–பாரதீய ஜனதா ஆட்சியின் வீழ்ச்சி

1999ம் வருடம் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்களையொட்டி எஸ்.எஸ். - பாரதீய ஜன்தா கூட்டணி ஆட்சியானது தன்னுடைய வாட்டர்லூ போர்க்களத்தைச் சந்தித்தது. அந்த தேர்தல்களுக்கு முன்னதாக 1996 மற்றும் 1998ம் வருடங்களில் இரண்டு தடவை நாடாளுமன்றத் தேர்தல்கள் நடை பெற்றன. 1996ம் வருடத்திய நாடாளுமன்றத் தேர்தல்களில் மாநில மக்கள் புதிய எஸ்.எஸ். - பாரதீய ஜனதாக் கூட்டணி ஆட்சிக்கு ஒரு வாய்ப்பளித்திட முடிவு செய்தனர். எனவே மேற்படி கூட்டணியானது 48 இடங்களில் 33 இடங்களை வென்றெடுத்து ஒரு சாதனை புரிந்தது. (எஸ்எஸ் கட்சிக்கு 15 இடங்களும், பாரதீய ஜனதாவுக்கு 18 இடங்களும் கிடைத்தன. காங்கிரஸ் கட்சி 35 சதவீத வாக்குகளைப் பெற்று 15 இடங்களில் வெற்றி பெற்றது).

ஆனால் 1998ம் வருடத்தில் நிலைமைகள் யாவும் தலைகீழாக மாறிவிட்டன. எஸ்.எஸ்.- பாரதீய ஜனதா கூட்டணிக்கு வெறும் 10 இடங்கள்தான் கிடைத்தன. (எஸ்எஸ் 6, பாரதீய ஜனதா 4) இது அந்தக் கூட்டணிக்கு பலத்ததோர் சரிவாகும். காங்கிரஸ் - ஆர்பிஐ-எஸ்பி கூட்டணியானது மொத்த வாக்குகளில் 50 சதவீதத்தைப் பெற்றது. காங்கிரஸ் கட்சிக்கு 33 இடங்களும், ஆர்பிஐ கட்சிக்கு 4 இடங்களும் கிடைத்தன. இத்தகைய சூழ்நிலைமைகளில் எஸ்.எஸ். - பாரதீய ஜனதாக் கூட்டணியானது நிலைமைகளைச் சமாளிப்பதற்காக தங்கள் முதலமைச்சரை மாற்றினர். மனோகர் ஜோஷிக்குப் பதிலாக நாராயண ராணே முதல்வராக்கப்பட்டார். நாராயண ராணேயின் கடந்தகால வரலாறும் அவ்வளவு திருப்தியானதல்ல. மனோகர் ஜோஷி ஒரு பிராமணர், ராணே ஒரு மராத்தியர். இந்த ஜாதி அடிப்படையில்தான் முதலமைச்சர் மாற்றங்கள் அமுலாக்கப்பட்டன. ஆனால் அவர்களது இந்த சித்து வேலையும் பலனளிக்கவில்லை. பால்தாக்கரே வகுப்பு வெறியூட்டுகின்ற வகையில் பற்பல சொற்பொழிவுகள் நிகழ்த்தி மற்றும் கட்டுரைகளையும் எழுதியதால் அவரது வாக்குரிமையைத் தேர்தல் கமிஷன் ரத்து செய்துவிட்டது.

1999ம் வருடத்திய மக்களவை மற்றும் சட்டமன்றத் தேர்தல்களில் எஸ்.எஸ். - பாரதீய ஜனதாக் கூட்டணியானது படுதோல்வி அடையும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் திடீரென்று காங்கிரஸ் கட்சிக்குள் ஷரத் பவார் கலகம் செய்து தேசிய வாதக் காங்கிரஸ் என்றதோர் தனி அமைப்பை உருவாக்கிக்கொண்டதால் முந்திய கணிப்புக்கள் யாவும் பொய்த்துவிட்டன. மக்களவைத் தேர்தல்களில் எஸ்எஸ்-பாரதீய ஜனதாக் கூட்டணிக்கு 28 இடங்கள் கிடைத்தன. (எஸ்எஸ்-15, பாரதீய ஜனதா - 13). வாக்குகளின் சதவீதமும் 38 சதவீதமாக உயர்ந்தது. இந்திய தேசிய காங்கிரஸானது 30 சதவீத வாக்குகளைப் பெற்று 10 இடங்களை பிடித்தது. மீதியுள்ள 4 இடங்கள் தேசீயவாதக் காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்குக் கிடைத்தன.

ஆனால் அதைத் தொடர்ந்து நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்களில் எஸ்.எஸ். - பாரதீய ஜனதாக் கூட்டணிக்கு 32சதவீதத்துக்கும் குறைவான வாக்குகள்தான் கிடைத்தன. மாநில மக்கள், மாநில ஆட்சியாளர்களுக்கு



படிப்பகம்

www.padippakam.com
பாடம் கற்பிக்க விரும்பியதுதான்அதற்குக் காரணமாகும். ஆக, எஸ்.எஸ். - பாரதீய ஜனதாக் கூட்டணிக்கு 125 இடங்கள் மட்டுமே கிடைத்தன. (எஸ்.எஸ். -·69, பாரதீய ஜனதா -56). இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியானது 75 இடங்களை வென்றது. தேசியவாதக் காங்கிரசுக்கு 58 இடங்கள் கிடைத்தன. அந்த இரு கட்சிகளுக்கும் சேர்த்து 133 இடங்கள் கிடைத்தன. மதச்சார்பற்ற சிறிய கட்சிகளுக்கு 15 இடங்கள் கிடைத்தன.

காங்கிரஸ் கட்சிக்குள் பிளவு ஏற்படாமலிருந்து, ஏனைய கட்சிகளும் தாங்கள் முந்திப் பெற்ற வாக்குகளைப் பெற்றிருக்குமேயானால் எஸ்.எஸ்.- பாரதீய ஜனதா கூட்டணிக்கு மக்களவைக்கு 9 இடங்களும், மாநில சட்டமன்றத்துக்கு 48 இடங்களும் மட்டுமே கிடைத்திருக்கும். இருந்தாலும் காங்கிரஸ் கட்சிக்குள் மிகப்பெரிய பிளவு ஏற்பட்டபோதிலும்கூட எஸ்.எஸ். - பாரதீய ஜனதாக் கூட்டணியால் மாநில மக்களுடைய எதிர்ப்பிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள இயலவில்லை. மாநிலத்திலுள்ள நான்கு முதலாளித்துவ அரசியல் கட்சிகளுக்குமிடையே சுமார் 15 நாட்களாகப் பல்வேறு இழுபறிகளும், திரைமறைவு வேலைகளும் நடைபெற்றன. அதற்குப் பின்னர் 1999ம் வருடம் அக்டோபர் மாதத்தில் இந்திய தேசியக் காங்கிரஸ்- தேசியவாத காங்கிரஸ் கூட்டணியானது மகாராஷ்டிர மாநில ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்தது.

## சிவசேனைக் கட்சியின் வளர்ச்சிக்கான முக்கிய அடிப்படைகள்

சிவசேனைக் கட்சி சம்பந்தப்பட்ட பல்வேறு விவரங்களை முன்வந்த பத்திகளில் விளக்கமாக ஆராய்ந்தோம். அந்தக் கட்சியின் வளர்ச்சிக்கான முக்கிய அடிப்படைகளைப் பற்றி நாம் இங்கு ஆராய்வோம். அந்தக் கட்சியினுடைய வளர்ச்சியை வசதிக்காக வரலாறு, பொருளாதாரம், அரசியல் தத்துவார்த்தம், சமூகம் மற்றும் ஸ்தாபனம் ஆகிய தலைப்புகளின் கீழ் நாம் ஆராய்ந்திடுவோமாக.

## வரலாற்று ரீதியான அம்சங்கள்

இவைகளைப் பற்றிக் கூறும்போது மகாராஷ்டிரத்தில் நூறாண்டு காலத்துக்கு முன்பே ஏற்பட்ட இந்துமத மறுமலர்ச்சி பிராமணீய இலக்கியம், வரலாறு, அரசியல் முதலியவை பற்றி நாம் குறிப்பிட்டாக வேண்டும். சவர்க்கார், ஹெட்கேவார், கோல்வால்கர் போன்ற தலைவர்கள் இந்து ராஷ்டிரம் என்ற பெயரால் ஒரு வகுப்புவாத, அரை பாசிஸத் தத்துவத்தை வெறித்தனமான முறையில் பரப்பினார்கள். அதன் விளைவாக ஆர்.எஸ்.எஸ் என்றதோர் அமைப்பானது உருவாக்கப்பட்டது. மற்றொரு புறத்தில் மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த பூலே, அம்பேத்கர் போன்ற புகழ்வாய்ந்த சமுதாயத் தலைவர்கள் மிகவும் வலுவான முறையில் சமூகச் சீர்திருத்த இயக்கங்களைத் தோற்றுவித்து அவற்றை வழிநடத்திச் சென்றனர். மேற்கூறப்பட்ட இந்து மறுமலர்ச்சி இயக்கத்துக்கும், சமூக சீர்திருத்த இயக்கங்களுக்கும் இடையே தவிர்க்க இயலாத வகையில் மோதல்கள் வெடித்தன. மற்றொரு பக்கத்தில் லோகமான்ய திலகர் கணேசருக்குத்



படிப்பகம்

www.padippakam.com

திருவிழா, சிவஜயந்தி போன்ற விழாக்களை மக்கள் மத்தியில் பரப்பிடுகின்ற முயற்சிகளை மேற்கொண்டார். ஆர்எஸ்எஸ் மற்றும் எஸ்எஸ் ஆட்கள் திலகருடைய அத்தகைய நடைமுறைக்ளையெல்லாம் தங்களது வகுப்புவாத நோக்கங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டனர். அவர்கள் மாபெரும் வீரனாகத் திகழ்ந்த சிவாஜி மன்னனைக்கூட விட்டுவைக்க வில்லை. அவரையும் கூட தங்களது வகுப்புவெறிச் சிமிழுக்குள் அடைத்திட முயற்சித்தனர். எஸ்.எஸ். கட்சியானது சம்யுக்த மகாராஷ்டிர இயக்கத்தையும், வகுப்புவாத அடிப்படையில் வழிநடத்திச் செல்ல முயன்றது. 80களிலிருந்து நாடெங்கிலும் வகுப்புவாத அலையானது வீசத்தொடங்கியது. அதனுடைய ஒரு எதிரொலியாக சிவசேனைக் கட்சியும் வளரத் தொடங்கியது.

## பொருளாதார அம்சங்கள்

மும்பை நகரிலும், மகாராஷ்டிர மாநிலத்திலும் மென்மேலும் வளர்ந்து வந்த பொருளாதார நெருக்கடிகளின் விளைவாக சிவசேனைக் கட்சியினரின் பிரிவினைவாதக் கருத்துக்களுக்கு மக்கள் செவிமடுக்கத் தொடங்கினர். குறிப்பாக மும்பை நகரின் மக்கள்தொகையானது வருடா வருடம் மிகவும் அதிகரித்த வண்ணமேயிருந்தது.

1. 1941ம் வருடம் 14.9 லட்சம்
2. 1951ம் வருடம் 29.9 லட்சம்
3. 1961ம் வருடம் 41.5 லட்சம்
4. 1971ம் வருடம் 60.1 லட்சம்
5. 1981ம் வருடம் 82.3 லட்சம்
6. 1991ம் வருடம் 125.9 லட்சம்

மும்பை நகரில் மராட்டிய இன மக்கள் 1951ம் வருடத்தில் 43.6 சதவீதம் பேர் இருந்தனர். இன்று அந்த சதவீதமானது 40சதவீதமாகக் குறைந்துள்ளது. மும்பை நகரில் முதலாளித்துவ பொருளுற்பத்தி முறையினால் உருவாக்கப்பட்ட சீர்குலைவுகள் மற்றும் கொள்ளை லாபவெறி ஆகியவை காரணமாக மக்களுடைய வாழ்க்கையானது பெருமளவுக்குத் துன்ப, துயரங்களைச் சந்தித்து வரவேண்டியிருந்தது. நகரிலுள்ள மொத்த மக்கள்தொகையில் 60 சதவீதம் பேர் வசதிகளேயில்லாத, சேரிப்பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். மாநிலத்தில் உள்ள ஏனைய நகரங்களிலும் அதே போன்ற நிலைமைகள் உருவாகிக்கொண்டிருந்தன.

மகாராஷ்டிர கிராமங்களில் பற்பல வருடங்களாகவே விவசாய உற்பத்தியான்து ஒருவிதத் தேக்கநிலையை அடைந்திருந்தது. மாநிலத்தில் பயரிடுவதற்கு ஏற்ற மொத்த நிலப்பரப்பில் 15.4 சதவீத நிலங்களுக்கு மட்டுமே பாசன வசதிகள் இருந்தன. தேசிய அளவில் அத்தகைய வசதியானது 38.4 சதவீதமாயிருந்தது. இத்தகைய நிலையில் 3 சதவீத நிலப்பரப்பில் கரும்பு மட்டுமே பயிராக்கப்பட்டுவந்தது. பெரும்பாலான சர்க்கரை ஆலைகளும்



படிப்பகம்

www.padippakam.com
நலிவடைந்த நிலையில் இருந்தன. தொழில்துறையைப் பொறுத்தவரையில் 1961 முதல் 1999ம் வருடம் வரைக்கும் அதனுடைய வளர்ச்சியானது வெறும் 3.5 மடங்காகவே இருந்தது. 1961ம் வருடத்தில் 8,233 தொழிற்சாலைகள் இருந்தன. 1999ம் வருடத்தில் 28,822 தொழிற்சாலைகள் இருந்தன. வேலை வாய்ப்புக்களும் 7.87 லட்சத்திலிருந்து 12.86 லட்சமாக மட்டுமே உயர்ந்தது. அதாவது கடந்த 40 ஆண்டு காலத்தில் மாநிலத்தின் வேலைவாய்ப்புக்கள் இரண்டு மடங்குகள் கூட அதிகரிக்கவில்லை.

மேலும் வேலையின்மையும் அதிகரித்துக்கொண்டேயிருந்தது.

| வருடம் | வேலையில்லாதோர் தொகை (லட்சங்களில்) |
|---|---|
| 1961 | 1.62 |
| 1971 | 3.61 |
| 1981 | 12.68 |
| 1991 | 30.22 |
| 1999 | 41.83 |

மேற்கண்ட சூழ்நிலைமைகளின் விளைவாக 80களில் மாநிலத்தில் வகுப்புவாத சக்திகள் வளர்ந்திடுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டன. 80களில் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பெயர்களைப் பதிவு செய்தவர்களுடைய தொகையானது 18 லட்சமாகும். இந்த எண்ணிக்கையானது மிகவும் அதிர்ச்சி யூட்டக்கூடிய ஒன்றாகும். அதே சமயத்தில் கிராமப்புறங்களில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்யாமலே லட்சக்கணக்கானோர் வேலையில்லாதோர் பட்டாளத்தில் இருந்தனர்.

இத்தகைய சூழ்நிலைமைகள் ஒருபுறம் இருக்கும்போது லாபவெறி கொண்ட முதலாளித்துவமானது தாராளமயம், தனியார்மயம், உலகமயம் என்ற கொள்கைகளின் அடிப்படையில் செயல்படத் தொடங்கிய மையால் மக்களிடையே பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் மேலும் மேலும் அதி கரித்தன. கறுப்புப்பணம், ஊழல்கள், குற்றச்செயல்கள் முதலிய சட்டவிரோத நடவடிக்கைகள் மாநிலமெங்கும் வியாபித்துப் பரவத் தொடங்கின. இவ்வாறு மகாராஷ்டிர மாநிலத்தில் பல்வேறு அம்சங்களிலும் பொருளாதார நெருக்கடி கள் வளர்ந்தோங்கிக்கொண்டிருந்தமையால் அங்கு எஸ்.எஸ். மற்றும் பாரதீய ஜனதா போன்ற பிளவுவாத இயக்கங்களுக்குச் சரியான தளங்கள் கிடைத்தன.

## அரசியல் அம்சங்கள்

அரசியல் அம்சங்களைப் பற்றி நாம் ஏற்கெனவே எஸ்.எஸ்.கட்சியின் தோற்றம்பற்றிக் கூறும்போதே தெளிவாக எடுத்துரைத்துள்ளோம். மீண்டும் அவற்றைச் சுருக்கிக்கூறுகிறோம்.

1. பெருமுதலாளிகளது பேராதரவு.
2. தொடர்ந்து மாநில அரசில் அங்கம் வகித்த காங்கிரஸ் அமைச்சர்களது ஆதரவு.



படிப்பகம்

www.padippakam.com

3. காவல்துறையினர் மறைமுகமாக வகுப்புவெறியுடன் செயல்பட்டமை.
4. எஸ்.எஸ். கட்சியினர் மற்றும் அவர்களது தலைவருக்குப் பாமாலை சூட்டிய செய்தி ஸ்தாபனங்கள்.
5. கோஷ்டிப் பூசல்களின் விளைவாகச் சீரழிந்து கொண்டிருந்த காங்கிரஸ் இயக்கம்.
6. தொடர்ந்து பதவியிலிருந்த மாநிலக் காங்கிரஸ் ஆட்சிகளது பரிதாபகர மான செயல்பாடுகள்.
7. ஷரத் பவார் மீண்டும் காங்கிரஸ் கட்சிக்குள் தன்னை இணைத்துக் கொண்டமையால் 80களில் எதிர்ப்பு அணியானது பலவீனமடைதல்.
8. அதே 80களில் ஷேட்காரி சங்காதனா அமைப்பானது வீழ்ச்சியடைதல்.
9. எஸ்.எஸ்.கட்சியால் உருவாக்கப்பட்டிருந்த பணபலம் மற்றும் மிருக பலம்.
10. பால்தாக்கரேயின் வெறியூட்டுகின்ற ஆளுமை.
11. முதலாளித்துவ எதிர்க்கட்சிகளுடைய சந்தர்ப்பவாதச் செயல்பாடுகள்.
12. மகாராஷ்டிர மாநிலத்திலுள்ள இடது மற்றும் மதச்சார்பற்ற அணிகளின் பலவீனம் மற்றும் ஒற்றுமையின்மை போன்ற குறைபாடுகள்.

மேற்படி காரணங்களின் விளைவாக எஸ்.எஸ்.இயக்கமானது மகாராஷ்டிர மண்ணில் வேர்விட்டுத் தழைத்திட முடிந்தது.

## தத்துவார்த்த காரணங்கள்

எஸ்.எஸ்.கட்சியினர் கடைப்பிடித்து வந்த அரை பாசிஸ்ட் கோட்பாடுகள் பல்வேறு ரூபங்களில் வெளிப்பட்டன. கம்யூனிஸ எதிர்ப்பு, கற்பனையானதோர் எதிரியை உருவாக்குதல், சிறுபான்மை மக்கள் மீதான வெறித்தனமான தாக்குதல்கள், பிரதேச வெறி, வகுப்புவாதம், ஜாதீயம், தேச பக்திக்குப் புதுவகையில் விளக்கங்கள் கூறி அதைக் கொச்சைப்படுத்துதல், வன்முறை அரசியல், தொடர்ந்து பொய்ப்பிரச்சாரங்களை மேற்கொள்ளுதல், ஆவேசமூட்டும் சொற்பொழிவுகள், கலாச்சாரத்துறையில் தான்தோன்றித் தனம், அறிவு ஜீவிகளுக்கெதிரான செயல்பாடுகள், எல்லாவற்றுக்கும் மேலாக தொடர்ந்து ஆளுங்கட்சியின் கருவியாகச் செயல்படுதல். மேற்கூறப்பட்ட அம்சங்கள்தான் எஸ்.எஸ்.கட்சியினுடைய தத்துவார்த்த அம்சங்களாக விளங்கின. முதலாளித்துவச் சுரண்டலிலிருந்து மக்களுடைய கவனத்தைத் திசை திருப்புவது ஒன்றே எஸ்.எஸ். இயக்கத்தின் மிகப்பெரிய குறிக்கோளாக இருந்து வந்தது. அந்த ஒரு அடிப்படையிலேயே அவர்களது சகலவிதமான அரசியல் நடவடிக்கைகளும் அமைந்திருந்தன. அதே மாதிரி தனியார் மயமாக்கல், தாராளமயமாக்கல், உலகமயமாக்கல் ஆகிய பொருளாதாரக் கோட்பாடுகளையெல்லாம் எஸ்.எஸ்.கட்சியினர் தங்களது ஆட்சிக்காலத்தில் அதிதீவிரமாகச் செயல்படுத்திடத் தொடங்கினர். மேலும் அவர்களது பிளவுவாதப் பிரச்சாரங்கள் மாநிலத்திலுள்ள உழைப்பாளி மக்களுடைய ஒற்றுமைக்குப் மிகப்பெரிய பாதிப்புக்களை ஏற்படுத்தின. அதன் மூலமாக அவர்கள் முதலாளிகளுடைய செல்வாக்கை அதிகரிக்கச் செய்தனர். மேலும்



படிப்பகம்

www.padippakam.com
எஸ்.எஸ்.கட்சியினர் மாநிலத்திலுள்ள சகலவிதமான இடதுசாரி இயக்கங்களுக்கெதிராகத் தொடர்ந்து பிரச்சாரங்களை மேற்கொண்டனர். அத்துடன் அவர்கள் சகலவிதமான வலதுசாரிப் பிற்போக்காளர்களையும் தொடர்ந்து ஆதரித்து நின்றனர். அவர்களுடைய ஏவலர்களாகச் செயல்பட்டனர்.

## சமூக ரீதியான அம்சங்கள்

எஸ்.எஸ். கட்சியில் பிரபு-சரஸ்வதி-பிராமணர்களுடைய கூட்டணியானது மேலாதிக்கம் புரிந்து வருகிறது. அந்தக் கட்சியானது நான்குவித ஜாதிகளையும் கவர்ந்திழுக்கும் வகையில் தன்னுடைய தந்திரோபாயங்களை உருவாக்கிக்கொண்டு செயல்பட்டு வருகின்றது. அந்தக் கட்சியானது மராட்டியர்களது மேலாதிக்கத்துக்கு எதிராக ஏனைய பிற்படுத்தப்பட்ட ஜாதியினரைத் திரட்டுகிறது. மராட்டிய இன மக்களிடையே காங்கிரஸ் கட்சிக்குச் செல்வாக்கு உண்டு என்பதை நாம் இங்கு நினைவில் கொள்ள வேண்டும். அதே சமயத்தில் எஸ்.எஸ். கட்சியினர் ஜாதி அடிப்படையில் ஒதுக்கீடுகள் செய்யப்படுதல், பல்கலைக்கழகப் பெயர் மாற்றம் ஆகிய பிரச்சனைகளை எதிர்த்துப் போராடுவதன் மூலமாக மராட்டியர்களையும் தங்கள் பக்கம் கவர்ந்திழுத்தது. மேலும் தலித் மக்களிடையே இந்து தலித்துக்கள், புத்தமதத்தைச் சேர்ந்த தலித்துக்கள் என்ற வேறுபாடுகளைத் திறம்படப் பயன்படுத்திக்கொண்டு அம்மக்களைப் பிளவுபடுத்துவதில் வெற்றி பெற்றனர். எல்லாவற்றுக்கும் மேலாக சகலவிதமான ஜாதிகளையும் சேர்ந்த இந்து பொதுமக்களைத் திரட்டி தலித்துக்கள், முஸ்லிம்கள் ஆகியோருக்கு எதிராகப் போராடிடத் தூண்டியது.பாரதீய ஜனதாக் கட்சியினரும் ஜாதிப்பாகுபாடுகளை சிறிது மாறுபட்ட வகையில் பயன்படுத்திக்கொண்டு பாரம்பரியமான ஜாதீயக் கட்டுக்கோப்புகளையெல்லாம் உடைதெறிவதில் வெற்றி கண்டது. மேற்படி இரண்டு கட்சிகளுமே சக்திமிக்க மராட்டிய மக்களிடையே காங்கிரஸ் கட்சிக்கு இந்த அளவற்ற செல்வாக்கானது சிதறுண்டு போன சூழ்நிலைகளைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டன. இந்திராகாந்தியின் ஆதிக்கப்போக்குகள் காரணமாக ஷரத் பவார் காங்கிரஸை விட்டு வெளியேறியதை நாம் நன்கறிவோம். இன்று வரையிலும் அதனால் காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்ட பிளவானது நீடிக்கிறது. மேலும் எஸ்.எஸ். கட்சியினர் வேலையின்றி வாடுபவர்கள், அரைகுறைப் பாட்டாளி இளைஞர்கள் ஆகியோரைப் பற்பல சட்டவிரோதமான திரைமறைவு வேலைகளுக்குப் பயன்படுத்திக்கொண்டு அவர்களிடையே தங்களது பிடிப்பை வலுப்படுத்தி வந்துள்ளனர். மேலும் எஸ்எஸ் கட்சியினர் அத்தகைய அடித்தட்டு மக்களுடைய கோபாவேசங்களையெல்லாம் வகுப்புவாத மற்றும் ஜாதீய வழிமுறைகளில் திறமையாகத் திருப்பிவிட்டுள்ளனர். மேலும் அவர்கள் மதரீதியான சடங்குகள், சம்பிரதாயங்களைப் பயன்படுத்திக்கொண்டு மாநிலத்திலுள்ள சகல பகுதிப் பெண்களையும் தங்களது செல்வாக்கின்கீழ் அணி திரட்டுவதில் வெற்றி கண்டுள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com

## ஸ்தாபன அடிப்படையிலான அம்சங்கள்

எஸ்எஸ் கட்சியானது தினந்தோறும் சாகாக்களை நடத்துவதன் மூலமாக கட்சியை உயிரோட்டமுள்ளதாகச் செய்துள்ளது. அவர்கள் கிராமங்கள், வார்டுகள் அடிப்படையில் சாகா பயிற்சிகளை நடத்துகிறார்கள். அவைகள் மூலமாக மக்களது குறைகளைத் தீர்ப்பதற்கான குழுக்கள், ரத்ததான முகாம்களை நடத்துதல், ஆபத்துகால உதவிகள் செய்தல், வேலை வாய்ப்புக்கள் பற்றிய தகவல் மையங்களை நடத்துதல், விளையாட்டு மற்றும் கலாச்சாரத்துறைகளில் பற்பல போட்டிகளை நடத்துதல் போன்ற பல்வேறு பணிகளில் ஈடுபட்டுள்ளனர். மேலும் அவர்கள் வினாயகர் திருவிழா, சிவஜெயந்தி போன்ற திருவிழாக்களை முன்னின்று நடத்துகின்றனர். மிகவும் முக்கியமாக அவர்கள் வகுப்புக்கலவரங்கள் போன்ற வெறிச்செயல்கள் நடக்கும்போது அதிரடிப்படைகளாகச் செயல்படுகிறார்கள். அவர்கள் 1970களில் மும்பை மற்றும் தானே பகுதிகளில் மட்டும் 100 சாகா முகாம்களை நடத்தினார்கள். இன்று அவர்களுக்கு மகாராஷ்டிராவில் 40,000 முகாம்கள் உள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனால் அவைகள் மும்பை பகுதியில் மட்டுமே மிகவும் கட்டுக்கோப்புடன் விளங்கி வருகின்றன. சாகா அமைப்புக்களுக்கும் மேல்மட்டத்தில் "உபவிபாக்கள்" என்ற அமைப்புக்களானவை ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் மற்றும் நாடாளுமன்றத்தொகுதியிலும் செயல்பட்டு வருகின்றன. அந்த அமைப்புக்களுக்கென்று தனித்தனியே எஸ்.எஸ். தலைவர்கள் உண்டு. மேலும் எஸ்.எஸ். கட்சிக்கென்று தனித்தனியே பற்பல முன்னணி அமைப்புக்கள் உள்ளன். அவற்றில் முக்கியமானவை ஸ்தானிய லோகாதிகார் சமிதி, பாரதீய காம்கார் சேன்ன, மகாராஷ்டிர கிரமிக் சேனை, சிவ உத்யேக் சேனை, பாரதீய வித்யார்த்தி சேனை, சிவசேனை மகிளா அகாதி ஆகியவையாகும். மேலும் ஒவ்வொரு தொழிற்சாலையிலும் அவர்களுக்கு என்று தனித்தனி அமைப்புக்கள் உண்டு. இவையெல்லாவற்றையும் விட முக்கியமான அமைப்புக்களாக அவர்களுடைய பற்பல சட்ட விரோதமான, கிரிமினல் அமைப்புக்கள் விளங்குகின்றன. மேலும் அவர்கள் மக்களிடம் கட்டாய நன்கொடைகள் வசூலிப்பதற்கென்றே ஒரு அமைப்பை உருவாக்கியுள்ளனர். அத்தகைய சட்ட விரோதமான அமைப்புக்களுடைய வசூல்கள் யாவும் சிவசேனைக் கட்சியினுடைய தலைமைப் பீடத்தைச் சென்றடையும்.

மேற்கூறப்பட்ட ஸ்தாபன அமைப்புக்களுடன் செயல்பட்டு வருகிற சிவ சேனைக் கட்சியானது எதேச்சாதிகாரமானதோர் அமைப்பாகும். அந்தக்கட்சியின் சகலவிதமான கொள்கைகளையும் தலைவர்தான் தீர்மானிப்பார். அவருக்கு உதவியாக 10, 12 மேல்மட்டத் தலைவர்கள் உள்ளனர். சமீபத்தில் அந்த மேல்மட்டத் தலைவர்களுடன் தாக்கரே குடும்ப உறுப்பினர்கள் 2 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். அந்த இரண்டு நபர்களும் பால்தாக்கரேயின் வாரிசுகளாக உருவாக்கப்பட்டு வருகின்றனர். இத்தகைய மேல்மட்டக் குழுவானது மும்பை ந்கரில் மட்டுமே உள்ளது. ஏனைய பகுதிகளில் அதுபோன்ற உயர்மட்டக்



படிப்பகம்

www.padippakam.com

குழுக்கள் கிடையாது. மேலும் சிவசேனைக் கட்சிக்குள் ஸ்தாபனத் தேர்தல் என்ற பேச்சுக்கே இடமில்லை. பால்தாக்கரேதான் சகலவித கட்சிப் பதவிகளையும் நியமிப்பார். பால்தாக்கரே ஒருவர்தான் கட்சியின் ஆதியும், அந்தமும் ஆவார். மேற்படி பின்னணியில் சில காலத்துக்குமுன் அவர் கைது செய்யப்பட்டபோது ஏற்பட்ட படுபயங்கரமான ஆர்ப்பாட்டங்களையெல்லாம் நாம் புரிந்துகொள்ள முடியும்.

## முடிவுரை

எஸ்.எஸ். - பாரதீய ஜனதா கூட்டணியானது இன்று மகாராஷ்டிர மாநிலத்தில் ஆட்சி பீடத்தில் இல்லை என்றாலும்கூட அவர்களால் ஏற்படக்கூடிய அபாயங்களை நாம் ஒருபோதும் குறைத்து எடைபோட்டுவிட முடியாது. அந்த மாநிலத்தில் அவர்கள் மூன்றில் ஒரு பகுதி வாக்காளர்களை தங்கள் வசம் வைத்துள்ளனர். மேலும் அவர்களுடைய வர்க்க ரீதியான குணாம்சங்கள், வகுப்புவாதக் கோட்பாடுகள் ஆகியவை காரணமாக மாநிலத்திலுள்ள செய்தி ஸ்தாபனங்கள், காவல்துறை, அதிகாரவர்க்கம் ஆகிய ஒவ்வொரு துறையிலும் அவர்களுக்குக் கணிசமான அளவுக்குச் செல்வாக்கு உள்ளது. மேலும் அவர்கள் மத்திய அரசில் ஆட்சிபீடத்தில் அமர்ந்துள்ளனர் என்பதையும் நாம் கவனித்தாக வேண்டும்.

காங்கிரஸ் கட்சியின் சகல கோஷ்டிகளும் மேலே சுட்டிக்காட்டப்பட்ட அரை பாசிஸ்ட் சக்திகளை ஓரளவுக்கு கட்டுக்குள் வைத்திருக்க முடியும் என்பது உண்மைதான். இருந்தாலும் காங்கிரஸ் கட்சியானது எஸ்.எஸ். - பாரதீய ஜனதாக் கட்சிகளைத் தொடர்ந்து தடுத்து நிறுத்திடப் போவதில்லை. ஏனெனில் காங்கிரஸ் உட்பட அந்தக் கட்சிகள் யாவுமே வர்க்க ரீதியில் ஒரே வகையானவைகள்தான். எஸ்.எஸ்.-பாரதீய ஜனதா கட்சிகளைப் போன்ற வகுப்பு வாத, அரை பாசிஸ்ட் கட்சிகளை எதிர்த்து முறியடிப்பதென்பது ஒரு நீண்ட காலத் திட்டமாகவே விளங்கிட முடியும். அவர்களை முறியடிப்பதற்கு நாம் பல்வேறு விதமான தந்திரோபாயங்களைக் கடைப்பிடித்தாக வேண்டும். அத் தகைய பாசிஸ்ட் கட்சிகள் உருவாகிடுவதற்கான அடிப்படைக் காரணங்க ளைக் கண்டறிந்து அதன் பிறகுதான் அவர்களை முறியடித்திட முன்வர வேண்டும். இது நமது நாட்டிலுள்ள மதச்சார்பற்ற சக்திகள் மற்றும் இடதுசாரி சக்திகளுக்கு விடப்பட்டுள்ள மிகப்பெரியதோர் சவாலாகும். தீவிரமான மக்கள் இயக்கங்களை உருவாக்கிடுவதன் மூலமும் பரவலான வகையில் அரசியல் போராட்டங்களை வழிநடத்திச் செல்வதன் மூலமும்தான் அத்த கைய வகுப்புவாத சக்திகளை மக்களிடமிருந்து தனிமைப்படுத்திட இயலும். மகாராஷ்டிர மக்களிடையே அதற்கேற்ற வகையில் கொள்கை ரீதியான தொடர் இயக்கங்கள் நடத்தப்பட்டாக வேண்டும். அதன் மூலமாக மாநிலத்தில் ஒரு மாற்று அரசியல் சக்தியை உருவாக்கிட இயலும். வரக்கூடிய காலகட்டத் தில் அதற்கான போராட்டங்கள் மென்மேலும் வியாபித்துப்பரவும் என்பது உறுதியிலும் உறுதி.



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

Marxist RNI No : TNTAM/2000/2593 Licenced to Post without prepayment licence No: TN/SR-108

To:



படிப்பகம்